கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–13, இதழ் – 7 Volume - 13, Issue - 7	ஆனித் திங்கள் June 2022	விலை ரூ. 25/– Price Rs. 25/-	ஆண்டு சந்தா ரூ. 300/– Annual Subscription Rs. 300/-	தமிழ் மாத இதழ் Tamil Monthly

"Delivered by India Post"

www.indiapost.gov.in

Dr. R.PRAVEEN BABU,
M.D.(Gen.Med),DNB(Cardio)
Cardiologist (Reg. No.87024)

Dr.A.MANJULA DEVI,
M.B.B.S., D.A., FIC(Cardio)
Physician & Heart Specialist
(Reg. No.88222)

Dr.பிரவீன்

இருதய சிகிச்சை மையம்

சிறப்பம்சங்கள்	FACILITIES
இருதய நோய் சிகிச்சை	CARDIAC CARE
சர்க்கரை நோய் சிகிச்சை	DIABETIC CARE
ஆஸ்துமா நோய் சிகிச்சை	ASTHMA CARE
எக்கோ	ECHO
டி.எம்.டி.	TMT (TREAD MILL TEST)
இ.சி.ஜி.	ECG
ஹோல்டர் மானிட்டர்	HOLTER MONITOR
சிறப்பு இதய பரிசோதனை	SPECIAL CARDIAC TESTS
லேப் (ஆய்வகம்)	LAB
மருந்தகம்	PHARMACY

| 58/32 | Mahadhana Street |
| MAYILADUTHURAI | 609001|
For APPOINTMENT : 90037 36150 ; 63834 59838

| Hotel Noble Nest Building | 23 | Bharathiyar Street |
| Thala Theru | KARAIKAL | 609602 |
For APPOINTMENT : 90878 36150 ; 91235 69279

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM

SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O

மணமகள் தேவை

பெயர்	செல்வன் **R. பிரவீன்குமார்**
படிப்பு	B.Tech (MBA)
வேலை	Technician, Engine Factory Avadi, (H.V.F.) மத்திய அரசு Rs. 6 Lakhs / PA
பிறந்த தேதி	20.08.1993
உயரம்	174 cm
நட்சத்திரம்	உத்திரம்
கோத்திரம்	நன்னுட
பூர்வீகம்	இளந்தோப்பு (மயிலாடுதுறை)
தகப்பனார்	**G. ராஜேந்திரன்** (விவசாயி)
தாயார்	**T. புவனேஸ்வரி**
முகவரி	No. 324, பூங்கா தெரு, பூம்பொழில் நகர், ஆவடி, சென்னை – 600 062. Cell : 95001 40191
விருப்பம்	Any Degree

பெயர்	செல்வன் **E. பாலகுமார்**
படிப்பு	M.Sc. (Chem), Ph.D. (Chemistry). IIT Post Doc. (UK)
வேலை	தற்போது இங்கிலாந்தில் ஆய்வு படிப்பு Rs. 24 Lakhs / PA
பிறந்த தேதி	07.12.1989
நட்சத்திரம்	உத்திரட்டாதி
கோத்திரம்	வில்வராய
பூர்வீகம்	கீழப்பெரும்பள்ளம்
தகப்பனார்	**ப. இமயவரம்பன்** (மறைவு)
தாயார்	**இ. பானுமதி** (மறைவு)
முகவரி	E. Karthikeyan, Flat11, Second Floor, Green Jade Apartments, SK Nagar Main Road, Gandhi Nagar, Chennai - 600 077. Whatsapp : 97108 49500 (Karthik .E)
விருப்பம்	படித்த, வேலைக்கு செல்லும் விருப்பமுள்ள பெண் தேவை, மணமகன், படிப்பின் மீது எதிர்கால கனவுகள் கொண்டுள்ளதால், புரிந்து ஏற்றுக்கொள்கிற மனம் வேண்டும். தந்தை, தாய் இல்லாத காரணத்தால், உணர்ந்து வழிநடத்துகிற குடும்ப பின்னணி வேண்டும்.

பெயர்	செல்வன் **K. கண்ணன்**
படிப்பு	B.E. (Civil)
வேலை	Project Incharge, Chendur Infrastructure Pvt. Ltd., Thoothukudi Rs. 30,000 / PM
பிறந்த தேதி	21.03.1994
உயரம்	170 cm
நட்சத்திரம்	திருவாதிரை
கோத்திரம்	நன்னுடையான்
தகப்பனார்	**M. கந்தகுமார்,** B.A.,
தாயார்	**K. சுமதி**
முகவரி	க/எண். 50, வெள்ளாழத் தெரு, மணல்மேடு, மயிலாடுதுறை தாலுக்கா & மாவட்டம் Cell : 98435 25716

பெயர்	செல்வன் **P. பிரதீப்**
படிப்பு	B.E. (Mechanical), M.B.A.,
வேலை	Project Engineer (Steel Construction Design, US) Esskay Design and Structures Pvt. Ltd., Chennai Rs. 6.25 Lakhs / PA
பிறந்த தேதி	07.08.1995
உயரம்	176 cm
நட்சத்திரம்	மூலம் (3ஆம் பாதம்)
கோத்திரம்	மயிலாபுட
பூர்வீகம்	காட்டுமன்னார்கோவில்
தகப்பனார்	**பிரபாகரன் V.** (Chennai Radha Engineering Works)
தாயார்	**ராஜலட்சுமி** (கௌத்தூர், மயிலாடுதுறை)
முகவரி	251, மேட்டுக்குப்பம், லால்புரம், சிதம்பரம், கடலூர் Cell : 94436 02569, 94428 32910
விருப்பம்	நன்கு படித்த வேலையில் உள்ள பெண்.

மணமகள் தேவை

பெயர் செல்வன் **குத்தாலம் (எ) வேலு**
படிப்பு B.Tech. (IT)
வேலை Assistant Manager (Software Engineer) Deloitte
Rs. 16.5 Lakhs/PA
பிறந்த தேதி 21.07.1992
உயரம் 5' - 11"
நட்சத்திரம் உத்திரட்டாதி
கோத்திரம் காருடை

தகப்பனார் **K. கல்யாணசுந்தரம்,** VAO Retd.
தாயார் **S. சுந்தரி**
முகவரி 6, சம்பந்தர் தெரு,
திருநெல்வேலி டவுன் – **627 006.**
Cell : 99426 42855
(W) : 99767 68039, 97892 32855
விருப்பம் நல்ல குணமுள்ள, பணியில் உள்ள வரன்.

பெயர் செல்வன் **M. சத்தியகுமார்**
படிப்பு B.Tech.,
வேலை Koyo Engineering (S.E. Asia)
Pvt. Ltd., சிங்கப்பூர்
Rs. 2,00,000 / PM
பிறந்த தேதி 15.02.1992
நட்சத்திரம் புனர்பூசம்
கோத்திரம் அரங்குட

தகப்பனார் **S. மதியழகன்**
தாயார் **M. ஷிலாராணி**
முகவரி தெற்குத் தெரு,
திருப்புன்கூர் – **609 112.**
சீர்காழி – Tk.
மயிலாடுதுறை–Dt.
Cell : 80982 50145, 98403 03591 (W)

பெயர் செல்வன் **S. நம்பிராஜ்**
படிப்பு B.E. (ECE), MBA (Illinois University, Chicago)
வேலை Software Program Manager,
Robert Bosch, Coimbatore
Rs. 15 Lakhs / PA
பிறந்த தேதி 05.12.1991
உயரம் 5' - 6"
நட்சத்திரம் அனுஷம்
கோத்திரம் செம்பதரிய
பூர்வீகம் நெடுவாசல்

தகப்பனார் **S. சேகர்** (Late)
தாயார் **S. மலர்செல்வி** (கீழப்பெரும்பள்ளம்)
முகவரி 3/152, லெட்சுமி கார்டன்,
கொண்டையாம்பாளையம் (PO),
கோயம்புத்தூர் – **641 110.**
Cell : 97877 77756
விருப்பம் B.E., படித்த, பணியில் உள்ள வரன்.

பெயர் செல்வன் **கா. வருண் நேரு**
படிப்பு B.Tech (IT)
வேலை Specialist - Software Engineering
L & T Infotech, Chennai
Rs. 12 Lakhs / PA
பிறந்த தேதி 22.11.1986
உயரம் 166 cm
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் எரவுட

பூர்வீகம் இறையூர் (பெண்ணாடம்)
தகப்பனார் **மு. கார்த்திகேயன்**
தாயார் **கா. தனலட்சுமி**
(செந்துறை)
முகவரி 174/2, கொத்தட்டை ரோடு,
இறையூர் – **606 111.**
கடலூர் மாவட்டம்
Cell : 99419 38426 / 91763 27234
E-mail : dhanamkarthi76@gmail.com

மணமகள் தேவை

பெயர் செல்வன் **நெ. அஸ்வின்ராஜ்**

படிப்பு B.Tech , M.B.A.,

வேலை சிட்டி யூனியன் வங்கி, மதுரை

பிறந்த தேதி 22.07.1995

உயரம் 172 cm

நட்சத்திரம் கார்த்திகை

கோத்திரம் அங்கனுட

பூர்வீகம் வல்லம்

தகப்பனார் **க. நெடுஞ்செழியன்** (எலக்ட்ரீசியன்)

தாயார் **கோ. சித்ரா** (சத்துணவு அமைப்பாளர்)

முகவரி 2/223-1, நக்கீரர் தெரு,
பரசலூர், செம்பனார்கோவில் அஞ்சல்,
மயிலாடுதுறை மாவட்டம் – 609 309.
Cell : 90473 72102, 9445250246 (Whatsapp)

பெயர் செல்வன் **இரா. விக்னேஷ்வர்**

படிப்பு M.E. (CSC)

வேலை Senior Banking Officer (IT)
CUB (Computer System Department) Chennai

பிறந்த தேதி 18.04.1993

உயரம் 181 cm

நட்சத்திரம் சதயம்

கோத்திரம் மருங்குட

பூர்வீகம் ஆக்கூர்

தகப்பனார் **ஏ. இராமலிங்கம்,** M.A., B.Ed.,
தலைமையாசிரியர்

தாயார் **இரா. செந்தமிழ்ச்செல்வி,** M.A., B.Ed.,
(கொத்தங்குடி)
தலைமையாசிரியர்

முகவரி 2/198, மருத்துவமனை தெரு,
செம்பனார்கோவில், தரங்கம்பாடி (வ),
மயிலாடுதுறை (மா)
Cell : 94433 89328, 94872 15018

மணமகள் தேவை

பெயர் செல்வன் **V. வினோத்**
படிப்பு MCA
வேலை Sclerawork Inc. (Work from Home)
Rs. 16 Lakhs/PA
பிறந்த தேதி 26.08.1988
உயரம் 184 cm
நட்சத்திரம் திருவோணம்
கோத்திரம் விளந்துட
பூர்வீகம் மயிலாடுதுறை
தகப்பனார் **S. வாஞ்சிநாதன்**
தாயார் **D. அன்னபூரணி** (புலவனூர்)
முகவரி 21/35, Big Street,
மதுரா நகர், சேந்தங்குடி,
மயிலாடுதுறை – **609 001.**,
, Cell : 99650 45888 / 95974 76716
விருப்பம் Any Degree

பெயர் செல்வன் **B. திலிப்குமார்**
படிப்பு ITI (Electrician)
வேலை Bill Collector, Electricity Department, Nedungadu, Puducherry
Rs. 30,000/PM
பிறந்த தேதி 15.04.1986
உயரம் 165 cm
நட்சத்திரம் திருவாதிரை
கோத்திரம் முனித்தரிய
பூர்வீகம் குரும்பகரம்
தகப்பனார் **S. பாலசுந்தரம்**
தாயார் **B. சுகுணா**
முகவரி 25/1, மாரியம்மன் கோவில் தெரு,
குரும்பகரம்,
நெடுங்காடு – **609 603.**
Cell : 93605 51885, 80120 88784

பெயர் செல்வன் **R. ஆனந்த்**
படிப்பு ITI (Fitter)
வேலை Radha Engineering Works Pvt. Ltd,
Rs. 20,000/PM
பிறந்த தேதி 01.08.1989
உயரம் 165 cm
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் செம்பதரிய
பூர்வீகம் நெடுவாசல்
தகப்பனார் **S. ரவிச்சந்திரன்**
தாயார் **R. மல்லிகா**
முகவரி 1/115, வடக்குத் தெரு,
நெடுவாசல், நல்லுச்சேரி (PO),
சங்கரன் பந்தல்,
தரங்கம்பாடி (Tk) - **609 308.**
Cell : 93605 51885, 93444 03637

வாழ்க மணமக்கள்

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம், மாயலுட நினைவில்வாழ் தெய்வத்திரு. த. சண்முகம் பிள்ளை – வாழ்நல் திருமதி. ச. ஜோதியம்மாள் அவர்களின் மகன்வழி பெயர்த்தியும், திருப்பனந்தாள், செஞ்சலுட, நினைவில்வாழ் தெய்வத்திருவாளர்கள் சோ. அருணாசலம் பிள்ளை – சரோஜினி அவர்களின் மகள்வழி பெயர்த்தியும், திருமிகு. ச.கார்த்திகேயன் – திருமதி. கா. ஆனந்தி ஆகியோரின் இனிய நன்மகள்

திருநிறைசெல்வி **கா. அயுஷி,** B.Tech. நாகப்பட்டினம் மாவட்டம், நெய்தவாசல், காலிங்கராய, நினைவில்வாழ் தெய்வத்திருவாளர்கள். தி. சீனிவாசம் பிள்ளை – சீ. கமலத்தம்மாள் அவர்களின் மகன்வழி பெயரனும், பெருஞ்சேரி, சேமங்கலுட, நினைவில்வாழ் தெய்வத்திருவாளர்கள். இரா. இரத்தினசபாபதி பிள்ளை – இர. பருவத்தம்மாள் அவர்களின் மகள்வழி பெயரனும், தெய்வத்திரு சீ. பாலசுந்தர் – வாழ்நல் திருமதி. மணிமேகலை பாலசுந்தர் ஆகியோரின் இனிய நன்மகன்

திருநிறைசெல்வன் **பா. கார்த்திகேயன்,** B.Tech. இவர்களது திருமணம் **06.04.2022** புதன்கிழமை மயிலாடுதுறை ஸ்ரீ விமலாம்பிகை திருமண மஹாலில் இனிதே நடைபெற்றது. திருமண விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைத்து பெரியோர்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் அன்புடன்

மணிமேகலை பாலசுந்தர்
சென்னை.

ச. கார்த்திகேயன்,
கா. ஆனந்தி
பெங்களூர்

இதழின் உள்ளே....

நிரூபிக்கத் தேவை இல்லாத உண்மைகள் 16

நட்சத்திரங்களும் மரங்களும்..... 21

சங்கப் பலகை.....23

மணமகன் / மணமகள் தேவை..... 28–32

சிறுவர் பகுதி 42–45

வியப்பூட்டும் பிரபஞ்சம்..... 49

திருவிளையாடற் புராணம்..... 54

சங்க நிகழ்வுகள்..... 59

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882

ஆயுள் சந்தா ரூ. 2000/-
ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

இக்கணம் தேவை சிக்கனம்

கோடை வந்து விட்டது. கோடை வந்தாலே அதனுடன் பிறந்தவர்கள் போலவே கூடவே வருவது தண்ணீர் தட்டுப்பாடும் மின் வெட்டும். சென்னைக்குக் குடிநீர் தரும் ஏரிகளில் இப்போதுள்ள தண்ணீர் மட்டம் திருப்திகரமாக இருக்கிறது. அதனால் குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் இந்த முறை சமாளிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அதே போல் மின்சார தேவையிலும் தமிழ் நாடு மின் தன்நிறைவு மாநிலமாகி விட்டது எனவே மின் வெட்டு இருக்காது என்றும் சொல்கிறார்கள். அவர்கள் நம்பிக்கை பொய்யாகாமல் நிறைவேறிவிட்டால் மெத்த மகிழ்ச்சிதான். ஒரு வேளை அந்த நம்பிக்கை பொய்த்துவிட்டால் இக்கணம் தேவை சிக்கனம்.

எனவே வீடுகளில் தண்ணீர் மற்றும் மின்சாரம் சேமிக்க செய்யவேண்டியவற்றைப் பார்ப்போம்.

✳ உச்சி வெயிலில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றினால் அந்த நீர் ஆவியாகக் கூடும் அதைத் தவிர்க்க காலை அல்லது மாலை வேளைகளில் தண்ணீர் ஊற்றலாம்.

✳ பாத் ரூம் டாய்லெட் பைப்பில் லீக் இருந்தால் உடனுக்குடன் சரி செய்வது நல்லது.

✳ ஷவரில் குளிப்பதைத் தவிர்த்து குவளையால் மொண்டு குளிப்பதால் நபர் 1க்கு 1750 காலன் வரை தண்ணீர் சேமிக்கலாம்.

✳ பாத்திரங்களைக் கைகளால் கழுவுவதால் 27 காலன் வரை தண்ணீர் செலவாகலாம். அதற்கு பதிலாக டிஷ் வாஷரைப் பயன்படுத்தினால் தண்ணீர் பயன்பாடு கணிசமாகக் குறையும்.

✳ நம்முடைய கார்களை வீடுகளில் வாஷ் செய்தால் 100 காலன் வரை தண்ணீர் செல்வாகும் வெளியில் கார் வாஷுக்கு எடுத்துச் சென்றால் 40 காலனுக்குக் குறைவாகத்தான் ஆகும்.

✳ மழை பெய்யும் போது வீட்டுக் கூரைகளிலிருந்து கீழே விழும் மழை நீரை வீணாக்கமல் டிரம்களில் பிடித்து பாத்திரம் கழுவ துணி துவைக்கப் பயன் படுத்தலாம்.

அதே போல் கீழ்க் கண்ட சில முறைகளில் மின்சாரப் பயன்பாட்டையும் குறைக்கலாம்.

சாதாரண குண்டு பல்புகளைத் தவிர்த்து கூடிய வரை L.E.D பல்புகளைப் பயன்படுத்தலாம்.

ஃப்ரிஜின் பின்பக்கம் உள்ள காயில் விரைவில் அழுக்கடைந்து அதனால் ஃப்ரிஜின் செயல் திறன் குறையக் கூடும். ஆண்டுக்கு ஒரு முறையாவது அந்த காயிலை சுத்தப்படுத்தலாம்.

ஃப்ரிஜிலும், அதில் உள்ள ஃப்ரீசரிலும் பொருட்கள் நிறைந்து இருந்தால் ஃப்ரிஜ் கூல் ஆவதற்கு நிறைய மின்சாரம் தேவைப்படாது அதில் உள்ள பொருட்கள் டெம்பரேச்சரை பாதுகாக்கும்.

ஃப்ரிஜிலும் ஃப்ரீசரிலும் டெம்பரேச்சரை இரு டிக்ரி அதிகமாக்கி அவற்றை சூடாக வைத்திருந்தால் ஆண்டு பூராவும் அவை சக்தியை சேமிக்கும்.

மைக்ரோ ஓவன்கள் சூடாக்கக் குறைவான நேரமே பிடிப்பதால் முடிந்த இடங்களில் அவற்றைப் பயன்படுத்தலாம்.

பகலிலோ இரவிலோ வெளியில் நன்றாகக் காற்று வீசும்போது ஏ/சி யை அணைத்து விட்டு ஜன்னல்களைத்திறந்து இயற்கைக் காற்றை அனுபவிக்கலாம் தினமும் இவ்வாறு செய்தால் அதன் பலன் ஆண்டு இறுதியில் தெரியும்.

துணிகளை வாஷிங் மிஷினில் துவைக்கும்போது குறைந்த டெம்பரேச்சரில் அதாவது 30 டிக்ரியில் செய்ய முடியும் வாஷிங்மிஷின் சூடாக்க அதிக உஷ்ணம் தேவை இல்லை.

மின்சாரம் சேமிப்பதைல் உறுதியாக் இருப்பவர்கள் சற்று முதலீடு செய்து சோலார் எனெர்ஜி பானல்களைப் பொறுத்தி சொந்தமாக மின்சாரம் தயாரிக்கலாம்.

முயற்சித்தால் முடியாதது இல்லை முயற்சிப்பீர்களா ?

பாராட்டுகிறோம்

தஞ்சை நகர கார்காத்தார் சங்க உறுப்பினர்கள் திருமதி. சாவித்திரி – பாலகிருஷ்ணன் அவர்கள் ஒவ்வொரு வருடமும் ரூ. 12,000/–ம் திரு. சு. முருகேசன் அவர்களின் தாயார் நினைவாக ஒவ்வொரு வருடமும் ரூ. 5,000/ம் திரு. S. இராஜாராமன் அவர்கள் ரூ. 2,000/–ம் தஞ்சை காமதேனு சமூக அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்துள்ளார்கள். அவர்களுக்கு தஞ்சை சங்கம் நன்றியினையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவிற்கு அனுப்பபடும் சங்க செய்திகள், கட்டுரைகள், விளம்பரங்கள் போன்றவைகளை ஒவ்வொருமாதமும் 25ம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதற்கு பிறகு பெறப்படும் தகவல்கள் அடுத்துவரும் இதழ்களில் தான் பிரசுரிக்கப்படும்.

- **சங்க செய்திகள் / கட்டுரைகள் வெள்ளைதாளில் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக, இடைவெளி விட்டு, கையெழுத்து புரியும்படி (தட்டச்சு செய்தால் நல்லது) சுருக்கமாக எழுதி அனுப்பவும்.**
- **சங்க செய்திகள் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்கமுத்திரையுடன் அனுப்ப படவேண்டும்.**
- **செய்திகள் மற்றும் கட்டுரைகளை கூட்டவோ / குறைக்கவோ, நிராகரிக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆசிரியரின் முடிவே இறுதியானது.**
- **E-mail-ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.**
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் மட்டுமே அனுப்பப்படவேண்டும். (வங்கி கணக்கில் பணம் செலுத்துவது ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.)**
- **செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.**

அனைத்து தபால்களையும **கார்காத்தார் ஒப்புரவு,**
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

- கார்காத்தார் ஒப்புரவு

சென்னை கார்காத்தார் சங்கம்

நூற்றாண்டு விழா அறிவிப்பு

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா டிசம்பர் மாதம் சென்னையில் மிக சிறப்பாக நடைபெற உள்ளது. விழாவினை சிறப்பிக்கும் வகையில் மலர் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விழா மலரில் கட்டுரைகள், கவிதைகள், சங்க நிகழ்வுகள், நமது குல சான்றோர்கள் பற்றி சிறப்புகள் மற்றும் சங்கத்தினை பற்றிய சிறப்பு செய்திகளை தொகுத்து வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

அனுப்பவேண்டிய கடைசி தேதி 21.08.2022.

அனுப்ப வேண்டிய முகவரி

சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094.

இதில் பங்கு பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும் :

திருமதி. **வனஜா இளங்கோவன்,** மலர்க்குழு தலைவர்,

Mobile : 63932 91286, E-mail : kkam100malar@gmail.com

– கைலை. சண்முகம்,
செயலாளர்.

சென்னை கார்காத்தார் சங்கம்

நூற்றாண்டு விழா அறிவிப்பு

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா வருகின்ற டிசம்பர் மாதம் சென்னையில் மிக சிறப்பாக நடைபெற உள்ளது. விழாவினை சிறப்பிக்கும் வகையில் மலர் வெளியிட ஏற்பாடுகள் செய்யபட்டு வருகின்றன. விழா மலரில் விளம்பரம் செய்ய கீழ்கண்ட கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கலர் முழுபக்கம்	–	ரூ.	**10,000/-**
கலர் அரைபக்கம்	–	ரூ.	**5,000/-**
கலர் கால்பக்கம்	–	ரூ.	**2,500/-**
கருப்பு வெள்ளை முழுபக்கம்	–	ரூ.	**5,000/-**
கருப்பு வெள்ளை அரைபக்கம்	–	ரூ.	**2,500/-**
கருப்பு வெள்ளை கால்பக்கம்	–	ரூ.	**1,500/-**

விளம்பரம் சம்பந்தமாக தொடர்பு கொள்ள

திரு. **கோ. தியாகராஜன்,** விளம்பரக்குழு தலைவர்

Mobile : 90429 57792, E-mail : kkam100advt@gmail.com

– கைலை. சண்முகம், செயலாளர்.

முக்கிய அறிவிப்பு :

காகிதம் மற்றும் அச்சக மூலப் பொருட்கள் வரலாறு காணாத வகையில் விலையேற்றம் அடைந்துள்ளதால் ஏப்ரல் 2022 முதல் தமிழகத்தில் உள்ள அனைத்து அச்சகங்களிலும் பிரிண்டிங் வேலைகளுக்கு 40% வரை விலையேற்றம் செய்யப்பட்டுள்ளதால் "**கார்காத்தார் ஒப்புரவு**" விளம்பரக் கட்டணத்தை மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம். வருகின்ற **ஆனி இதழ் (June 2022)** முதல் கட்டணங்கள் கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கார்காத்தார் ஒப்புரவு வாசகர்கள், விளம்பரதாரர்கள் தொடர்ந்து தங்களது நல் ஆதரவினை நல்கிட அன்புடன் வேண்டுகிறோம்.

ஆண்டு சந்தா	ரூ.	300/-
ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்)	ரூ.	2000/-
கலர் (¼) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ.	1500/-
கலர் (½) அரைப் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ.	3000/-
கலர் முழு பக்கம்	ரூ.	6000/-
பின் அட்டை வெளியுறம்	ரூ.	7000/-
மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு)	ரூ.	500/-
கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம்	ரூ.	750/-
கருப்பு வெள்ளை (½) அரைப் பக்கம்	ரூ.	1500/-
கருப்பு வெள்ளை முழுப் பக்கம்	ரூ.	3000/-

தனி வீடு விற்பனைக்கு

இடம் : **சிதம்பரம், விபூஷ்ணபுரம், ஆசிரியர் நகர்.**

20x60 சைஸ் 1200 சதுர அடி மனையில் கட்டிட அளவு 1010 சதுர அடி, காலியிடம் 190 சதுர அடி, இரண்டு படுக்கை அறை, கார்பார்க்கிங் உடன் கூடிய நல்ல வசதியான காற்றோட்டம் உடைய தனி வீடு விற்பனைக்கு உள்ளது.

தேவைக்கு அணுகவும்.

9994622086

ரிஸ்க்கும் வெற்றியும்.

A. RAJARETHINAM,
PORUR, CHENNAI. PH : 9444224366

பொதுவாக பலர் பாதுகாப்பும், உத்திரவாதமும் எப்போதும் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். கொஞ்சம் கடினமானது என்றால் அந்த வேலையை செய்து பார்க்கத் தயங்குகிறார்கள். புதிதாக ஒன்றை முயற்சி செய்தால், ஏதாவது நஷ்டம் ஏற்பட்டு விடுமோ என்ற பயம். இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாது.

புதிதாய் ஒன்றைப் பயன்படுத்துவது புதிய தொழிலை ஆரம்பிப்பது, புதிய முறையை கையாளுவது போன்ற செயல்களில் ரிஸ்க் இருக்கிறது. ஆனால் வெற்றி அடையும் போது அது மிகவும் மகத்தான லாபகரமான வெற்றியாக அமையும். தெரியாத தொழிலை ஏன் ஆரம்பிக்க வேண்டும் என்றும் தெரியாத தொழிலில் ரிஸ்க் இருக்கிறது என்றும் பலர் நினைக்கிறார்கள். முயற்சி எடுத்தால் எந்தத் தொழிலையும் கற்றுக்கொள்ளலாம். ரிஸ்க்கும் வாய்ப்பும் சேர்ந்தே வருகிறது. நீங்கள் அந்த வாய்ப்பை உபயோகிக்க நினைக்கிறீர்கள். அப்போது ரிஸ்க் எடுக்க வேண்டி இருக்கும். டாடா நிறுவனம் உருக்காலை, தேயிலை, ஐ.டி. ஆட்டோமொபைல்ஸ் என்று பல பிரிவுகளில் அவர்கள் வியாபாரத்தை விருத்தி செய்திருக்கிறார்கள். அதற்கான தொழில்நுட்பம் கொண்ட நிபுணர்களை பணியில் அமர்த்தி அந்தந்த தொழில்களை ஆரம்பித்து வளர்த்திருக்கிறார்கள். அடிப்படையில் எல்லாத் தொழில்களும், சில பொதுவான அம்சங்களைக்கொண்டவை. எல்லாத் துறைகளிலும் ரிஸ்க் இருக்கிறது என்பதை அறிந்தும், சாதுர்யமாகச் செயல்பட்டு வெற்றி அடைந்திருக்கிறார்கள்.

ரிஸ்க் எடுக்கத் தயாரானவர்கள் எதற்கும் காத்திருப்பதில்லை. இருக்கிற வசதிகளையும், உபகரணங்களையும், மனித சக்தியையும் வைத்துக்கொண்டு துணிந்து தொழிலை ஆரம்பிக்கிறார்கள். போகப்போக நிலைமையை சரி செய்து கொள்கிறார்கள். இடர்ப்பாடுகளைத் துணிந்து ஏற்கிறவர்கள் வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலைகளை அடைகிறார்கள்.

சோனி, டி.வி.எஸ், ஸ்பிக், எல் அண்ட் டி, சீமென்ஸ் போன்ற கம்பெனிகள் பல வருடங்களாக பல பிரிவுகளை ஏற்படுத்தி வெற்றி நடை போடுகிறார்கள். தேவைக்கேற்ப நிபுணர்களை அவர்கள் நியமித்துக் கொள்கிறார்கள். அவர்களை வைத்து மற்றவர்களை அந்தந்த பிரிவில் பயிற்சி அடையச்செய்கிறார்கள்.

மனிதனின் முன்னேற்றத்தைத் தடை செய்வது பயம். தோற்றுவிடுவோமோ என்ற எண்ணம். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற தயக்கம். இத்தகைய பயம் எப்போதும் தேவையில்லை. ரிஸ்க் என்று பயந்து ஒரு தொழிலைச் செய்யாமல் இருப்பது நஷ்டத்தை ஏற்படுத்தும். வாழ்வில் ரிஸ்க் எடுக்காததுதான் பெரிய ரிஸ்க் என்று ஒரு நிபுணர் கூறினார். பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று நினைத்து, ரிஸ்க் எடுக்காமல், ஒன்றும் செய்யாமல் தூங்கிக்கொண்டிருப்பவர்கள் கைகளில் பவுனையும், பொருளையும் யாரும் கொண்டு வந்து கொடுக்கப் போவது இல்லை. அதற்கு மாறாக துணிந்து ரிஸ்க் எடுத்து செயலில் இறங்குபவர்களுக்கு உதவ இந்த உலகமே முன் வரும். ஆகவே துணிந்து உறுதியுடன் செயல்படுங்கள்.

இந்த கட்டுரை எழுத்தாளர் எழுதியுள்ள வெற்றிக்கு மிக அருகில், வெற்றி பின் தொடர, வெற்றி ரகசியங்கள், வெற்றி கையுறல், வெற்றியின் அலை ஓசை, Spoken English for your success என்ற புத்தகங்களைப் படித்தால் திறன் மேன்பாடு அடையலாம்.

ஒகளுட கோத்திர உறவுகள் கவனத்திற்கு

ஒகளுட கோத்திர கார்குல உறவுகளுக்கு வணக்கம். கும்பகோணம் திருவையாறு சாலையில் கபிஸ்தலத்திலிருந்து சுமார் 6 கி.மீ. தொலைவில் புத்தூர் என்ற கிராமத்தில் அமைந்துள்ள ஐந்து தலைமுறைகள் தாண்டிய நமது குலதெய்வம் **ஸ்ரீ வல்லப கருப்பு சுவாமி கோயில்** புனரமைக்கப்பட்டு கடந்த **03-06-2022 வெள்ளிக்கிழமை காலை 08-30 மணிக்கு கும்பாபிஷேகம்** மிக விமரிசையாக நடந்தேறியது. தினந்தோறும் அபிஷேகம் நடந்து 48-வது நாளில் மண்டலாபிஷேகம் நடைபெறும். கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ள இயலாதவர்கள் அந்நாளில் நேரில் தரிசித்து ஐயா அருள் பெற அன்புடன் அழைக்கின்றோம். தகவல்களை பகிர ஒகளுட கோத்திர பங்காளிகள் தங்களது விவரங்களை அறிய தாருங்கள். நன்கொடைகள் நலமளிக்கும்.

தொடர்புக்கு: **இனாம் கிளியூர் குணசேகரன்.**

8333072161 (அ) 04374-268938

நம்பிக்கை தரும் தன்னம்பிக்கை

எந்த சூழ்நிலையிலும் தளராத உள்ளம் கொண்டவனுக்கு இந்த உலகில் முடியாதது என்று எதுவுமில்லை. பிறர் மீது நாம் வைக்கும் பற்று நம்பிக்கை ஆகும். நம்மீது நாம் வைக்கும் நம்பிக்கையே தன்னம்பிக்கை ஆகும்.

இது நம்முன் தோன்றும் ஒருவித மனப்பாங்கு. தன்னம்பிக்கையானது வாழ்வில் துவண்டு போய் சோர்ந்த ஒருவனைக் கூட வெறிகொண்டெழ வைக்கும்.

ஒருவன் தன் மீது முழுமையான நம்பிக்கை கொண்டிருப்பின் எந்தத் தடைகளும் அவனுக்குத் தெரியாது. இத்தகைய நம்பிக்கை தரும் தன்னம்பிக்கை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

தன்னம்பிக்கையின் அவசியம் :

வாழ்வில் ஜெயிக்க வேண்டுமெனில் தன்னம்பிக்கை அவசியம். மனித வாழ்வானது இன்பம், துன்பம் இரண்டும் இரண்டறக் கலந்தது.

தோல்விகள் பல அடையக்கூடும். அவமானங்களைச் சந்திக்க நேரிடலாம். கஷ்ட துன்பங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரலாம். இவற்றையெல்லாம் எதிர்நீச்சல் போட்டு வெற்றி கொள்ள தன்னம்பிக்கை அவசியமாகும்.

வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டுமெனில் தன்னம்பிக்கை முக்கியமாகும். தன்னம்பிக்கையின்றிச் சாதனைகள் செய்திட முடியாது.

நம்பிக்கை தரும் தன்னம்பிக்கையின் நன்மைகள் :

நாம் நம்பிக்கையோடும், தன்னம்பிக்கை கொண்டும்ஒருசெயலைச்செய்கின்றபோதுவெற்றியை நமதாக்கிக் கொள்ள முடியும். தன்னம்பிக்கை நமக்கு இருக்கும் போது மற்றவர்களின் தயவின்றி வாழ்வில் முன்னுக்கு வர முடியும்.

வாழ்வின் தடைகளைத் தகர்த்தெறிய முடியும். பிரச்சினைகளை எதிர்கொண்டு அதனை தீர்த்துக் கொள்ள தன்னம்பிக்கை உதவுகின்றது. நம்பிக்கை தரும் தன்னம்பிக்கையால் நமக்குள் ஒளித்திருக்கும் பலத்தை வெளிக்கொண்டு வர முடியும்.

தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் :

நம்மீது நாமே நம்பிக்கை கொள்ள வேண்டும். நம்பிக்கையை எப்போதும் கைவிடக்கூடாது. என்னால் முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். சோர்ந்து போகும் நேரங்களில் கடந்தகால வெற்றிகளை நினைவில் கொள்ள வேண்டும்.

தாழ்வு மனப்பான்மையை எப்போதும் மனதில் எழவிடாமல் நேர்நிலை கருத்துகளை மனதிற்கொள்ள வேண்டும். விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும்.

பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முன்வர வேண்டும். அப்போதுதான் நாளடைவில் அதை எதிர்கொள்ள முடியும். மன்னிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் எப்போதும் அடுத்தவர்கள் இப்படி இருக்கிறார்கள், இவர்கள் இப்படி இருக்கிறார்கள் என்று ஒப்பிடுவதை முதலில் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அடுத்தவர்கள் வாழ்க்கையை பற்றி நாம் நினைப்பதால் நாம் நம்முடைய வாழ்க்கையில் ஒருபோதும் வளர்ச்சி நிலையை அடைய முடியாது என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

தன்னம்பிக்கைப் பொன்மொழிகள் :

* வெற்றி எனும் உயரத்தை அடைய ஏணியாக இருக்கும் ஆயுதம் தான் தன்னம்பிக்கை. அதை எப்போதும் வளர்த்துக்கொள்.

* கஷ்டங்கள் மட்டும் இல்லையெனில் போராடும் எண்ணமே நமக்கு இல்லாமல் போய்விடும்.

* தடம் பார்த்து நடப்பவன் மனிதன். தடம் பதித்து நடப்பவன் தான் மாமனிதன்.

* வாழ்க்கையில் முன்னேற குன்றாத உழைப்பு, குறையாத முயற்சி, வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இம்மூன்றும் இருந்தால் போதும்.

* நல்லதே நடக்கும் என்று நம்புங்கள். அது உங்களை மட்டுமல்ல உங்களைச் சுற்றி இருப்பவர்களையும் மகிழ்ச்சியாய் வைத்திருக்கும்.

வாழ்வில் முன்னேற தன்னம்பிக்கை அவசியம். அத்தகைய தன்னம்பிக்கையைத் தருவது நம்பிக்கையாகும். உலகின் சாதனையாளர்கள் தன்னம்பிக்கையைக் கைவிடாமல் தான் வாழ்வில் முன்னேறியுள்ளனர்.

தோல்விகளைக் கண்டு சோர்வடையாத தன்னம்பிக்கை கொண்டு மீண்டெழுந்தவர் தான் டாக்டர் அப்துல்கலாம் அவர்கள். எனவே தன்னம்பிக்கையின் சின்னமாகத் தனியொருவனாக உழைத்து வாழ்வில் முன்னேறுவோம்.

மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் நமக்கு நாமே மன தைரியம் கூறி வாழ்க்கையை தன்னம்பிக்கையுடன் கடந்து செல்வோம். எப்போதும் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் எதிலும் வெற்றி உங்களுக்கே.....!

– அர்ச்சனா சுவேதாரண்யம், சென்னை.
9943702054

நுண்நெகிழிகளின் நூதனப்போர்

– பராபரன்

அண்மையில் நெதர்லாந்தில் 22 தன்னார்வலர்களிடம் மேற்கொண்ட ஆய்வில் 17 பேரின் ரத்த அணுக்களில் நுண்நெகிழிகள் (Micro Plastic) காணப்பட்டன. இவர்களிடம் காணப்பட்ட முக்கிய நுண்நெகிழிகள் குடிதண்ணீர் பாட்டிலில் பயன்படுத்தப்படும்பாலிஎத்திலின்டெரிப்தலேட் (PET), பேக்கிங்களில் பயன்படுத்தப்படும் பாலிஸ்ட்டிரின் (Polystyrene), கேரிபேக்குகளில் பயன்படுத்தப்படும் பாலிஎத்திலின் (Polyethylene) ஆகியவை.

பயன்படுத்தித் தூக்கி எறியப்படும் காபி கப்புகள், மற்றும் இதுபோன்ற 'கண்டெய்னர்ஸ்' யாவும் மாந்த குலத்தின் அழிவுக்குப் பெரும் போர் தொடங்கியுள்ளன. இவற்றில் உள்ள நுண்நெகிழிகள் பெரும்பாலும் மக்கவே மக்காதவைகள். இவை யாவும் டிரில்லியன் கணக்கில் (1,000,000,000,000 or 10^{12}) நுண்துகள்களை நம் குடிநீர் மூலம் நம் உடலுக்குள் அனுப்பி வைக்கின்றன. 100° டிகிரி வெப்பத்தில் காப்பி, தேனீர், வெந்நீர், சுக்குமல்லி காப்பி இவற்றை இந்த பிளாஸ்டிக் கப்களில் ஊற்றிக் குடிக்கத் தொடங்கினால் டிரில்லியன் கணக்கில் நாணோ (Nano) துகள்களை (ஒரு லிட்டருக்கு பல டிரில்லியன்கள்) நீரில் கலக்க வைத்துவிடுகின்றன.

இது தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட National Institute of Standards and Technology ஆய்வாளர்கள் சராசரி ஒரு நானோவின் அளவானது 30 நானோமீட்டர் – 80 நானோமீட்டர் என்றும் சில நிலைகளில் 200 நானோமீட்டர் என்றும் குறிப்பிடுகின்றன.

இவை எல்லாம் ரத்தத்தின் வழியாக உடலுள் பயணிக்கும் என்றுதான் இதுவரை நம்பப்பட்டது. ஆனால் இப்பொழுது இவை ரத்த அணுக்களையே பாதிப்புக்குள்ளாக்கும் என்ற தகவல் வெளிவந்துள்ளது. இவை ரத்த அணுக்களைச் சிதைப்பதில் தொடங்கி உடலுக்குள் ஆக்ஸிஜன் பங்கீட்டுக்குத் தடைபோடுவது, குடல், எலும்பு, நரம்பு, சிறுநீரகம் எனப் பல்வேறு உடல் உறுப்புகளில் பதிந்து அவற்றைச் சிதைப்பது முதல் பல பேராபத்துகளை உருவாக்குகின்றன.

இந்த ஆய்வின் மூலம் மாந்தனுக்கு மலட்டுத் தன்மை, ஹார்மோன் பாதிப்புகள், புற்றுநோய் போன்றவற்றையும் இவை உண்டாக்குகின்றன என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்றைக்குக் காரணம் தெரியா மரணங்களுக்கெல்லாம் இந்த நுண்நெகிழிகளே அடிப்படையாக இருக்கலாம் என்று மருத்துவ ஆய்வு உலகம் கருதுகிறது.

அளவில் 5 மி.மீ. குறைவாக உள்ள நெகிழித்துகள்களை நாம் "நுண்நெகிழி" என்று குறிப்பிடுகிறோம். இவை சிதையும்பொழுது உருவாகும் நுண்துகள்கள் தான் நம்மைக் கொல்ல நாமே உருவாக்கிக் கொண்ட மெல்லக் கொல்லும் வில்லன்கள். இவை நாம் பயன்படுத்தும் பற்பசை, பல்துலக்கி, பேஸ்வாஷ், ஆடைகள், உணவுக்கலம், தண்ணீர் பாட்டில்கள், பைகள் என அனைத்திலும் உள்ளன.

தூக்கி எறியப்படும் இவை உடைந்தும் சிதைந்தும் நிலத்திலும் நீரிலும் கலந்துவிடுகின்றன. இந்த நிலத்தில் இந்த நீரைக் குடிக்கும் பயிர்களில், கீரைகளில், பழங்களில் இவை உட்புகுந்து விடுகின்றன. பின்னர் இவற்றை உட்கொள்ளும் உயிர்களின் உடலுள் ஊடுறுவி விடுகின்றன. டன்கணக்கில் கடலில் கொட்டப்படும் நெகிழிக் கழிவுகளை உணவாகக் கொள்ளும் மீன்கள் உள்ளிட்ட கடல்வாழ் உயிரிகளால் உணவுச் சங்கிலி மூலம் நம்மை வந்து அடைகின்றன.

நெகிழிகளை எரிப்பதால் உருவாகும் நச்சுப் புகை வழியே நெகிழித்துகள்கள் நாம் சுவாசிக்கும் காற்றில் கலந்து நம்மை வந்தடைகின்றன.

இத்தாலியில் செய்யப்பட்ட ஆய்வில் கற்பிணிப் பெண்களின் வயிற்றில் உள்ள பனிக்குடச் சவ்விலும், நஞ்சுக்கொடியின் அருகிலும், குழந்தையின் மலத்திலும், நுண்நெகிழிகள் காணப்படுவதாகக் கூறி உலகை அதிர வைத்துள்ளனர் ஆய்வறிஞர்கள்.

சென்னை பட்டினப்பாக்கத்தில் விற்கப்பட்ட ஏழுவகை மீன்களில் நெகிழித் துகள்கள் கலந்துள்ளன என்கின்ற திடுக்கிடும் தகவலைத் தேசிய கடலோர ஆராய்ச்சி மையம் வெளியிட்டுள்ளது.

கோவிட் ஒரு பக்கம், உணவுப் பொருட்களில் கலப்பு மறுபக்கம், நச்சுக் காற்று, குடிதண்ணீர் ஒருபக்கம், நெகிழிக் கழிவுகள் ஒரு பக்கம் என நான்கு பக்கங்களிலும் நமக்கான எதிரிகளை நாமே உருவாக்கி வளர்த்துவிட்டோம். தப்ப வேண்டுமெனில் இயற்கையோடு இணையந்த வாழ்விற்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியே இல்லை.

நிரூபிக்கத் தேவை இல்லாத உண்மைகள்

FACTS WHICH NEED NOT BE PROVED

மேலையூர் ச.அன்பழகன் 98413 73184

பொதுவான ஒரு விதியாக நீதி மன்றத்தில் வழக்கு தொடரும் எந்த நபரும் தாங்கள் தொடர்ந்த வழக்கின் உண்மைத்தன்மையை வாய் மொழி சாட்சியம் அல்லது எழுத்து மூலமான ஆவண சாட்சியம், மின்னணு சாட்சியம் உட்பட பல வித சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் இந்திய சாட்சிகள் சட்டம் 1872 ன் அத்தியாயம் 3 பிரிவுகள் 56 லிருந்து 58 வரை சொல்லியுள்ளபடி சில சந்தர்ப்பங்களில் தங்கள் வழக்கில் தாங்கள் கூறும் சில தகவல்களை உண்மைகளை நிரூபிக்கத் தேவையில்லை. எந்தெந்த சந்தர்ப்பங்களில் என்னென்ன உண்மைகளை நிரூபிக்கத் தேவை இல்லை என்பதை இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

இந்திய சாட்சிகள் சட்டம் 1872

1872 ஆம் ஆண்டின் முதல் சட்டமாகிய இந்திய சாட்சிகள் சட்டம் 1872 மொத்தம் 11 அத்தியாயங்களையும். 167 பிரிவுகளையும் கொண்டது. அதில் மூன்றாவது அத்தியா யத்தில் 56 லிருந்து 58 ஆவது பிரிவு வரை வழக்கில் தாங்கள் கூறும் சில உண்மைகளை நீதி மன்றத்தில் நிரூபிக்கத் தேவை இல்லை என்று கூறப்படுகிறது. அதில் நீதித்துறை கவனிக்கத் தக்க உண்மைகளை நிரூபிக்கத் தேவை இல்லை என்று பிரிவு 56 கூறுகிறது நீதித்துறை கவனிக்க வேண்டிய 13 உண்மைகளை பிரிவு 57 பட்டியலிடுகிறது. பிரிவு 58 ன் படி ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மைகளை நிரூபிக்கத் தேவை இல்லை.

நீதித் துறை கவனிக்க வேண்டிய என்றால் என்ன ?

நீதித்துறை கவனிக்கத் தக்க / நியாயமாக கவனிக்கப்பட வேண்டிய உண்மைகள் என்பவை, அவை பற்றி நீதி மன்றத்தில் எந்தவித ஆதாரமும் நிரூபிக்க வேண்டிய அவசியமும் இல்லாமல் நீதி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய உண்மை என்பதாகும் .

லார்ட் ஸ்டீபனின் கூற்றுப்படி, சில உண்மைகள் இயற்கையில் மிகவும் மோசமானவை அல்லது அத்தகைய உண்மையான வலியுறுத்தல் மற்றும் அணுகக்கூடிய வெளியீடுகள் உள்ளன, அவற்றுக்கு எந்த ஆதாரமும் தேவையில்லை. நீதிமன்றம் இதுபோன்ற உண்மைகளை அறியவில்லை என்றால், ஆதாரங்களை எடுப்பதற்கு முன்பு, அவற்றைப் பற்றி தன்னைத் தெரிவிக்க முடியும். இந்த உண்மைகள் நீதித்துறை கவனிக்கப்படுவதாக கருதப்படுகிறது.

எந்தெந்த உண்மைகளை நீதித்துறை கவனிக்க வேண்டும்

இந்திய சாட்சிகள் சட்டப் பிரிவு 57 ல் நீதித்துறை கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது. அதன்படி கீழ்க்கண்ட அம்சங்கள் நீதித்துறையின் கவனத்தில் இருக்க வேண்டும் .

1. இந்திய யூனியன் எல்லைக்குள் அமுலில் உள்ள அனைத்து சட்டங்கள்.

2. இந்திய நாடாளும் மன்றத்தால் இயற்றப்பட்ட அல்லது இனிமேல் இயற்றப்படும் பொதுச் சட்டங்கள் நாடாளும் மன்றத்தால் அறிவுறுத்தப்படும் அனைத்து உள்ளூர் மற்றும் தனிப்பட்ட சட்டங்கள் நீதித் துறையின் கவனத்தில் இருக்க வேண்டும்.

3. இந்திய ராணுவம், கப்பல் படை மற்றும் விமானப் படை, ஆகியவற்றுக்கான போர்ப் பிரகடனங்கள்.

4. பிரிட்டன் நாடாளும் மன்றத்தின் பாராளும் மன்ற நடவடிக்கைகள் மற்றும் இந்திய அரசியல் சாஸன சட்ட மன்றத்தின் நடவடிக்கைகள் மற்ற மாநிலங்களில் இயற்றப்பட்ட சட்டங்கள்.

5. ஐக்கிய இராச்சியம் கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தின் தற்போதைய இறையாண்மையின் அணுகல் மற்றும் அடையாள கையேடு.

6. இங்கிலாந்து நீதி மன்றங்கள் கவனத்தில் கொள்ளும் இந்தியாவில் உள்ள மற்றும் இந்தியாவுக்கு வெளியில் உள்ள நீதி மன்றங்களின் முத்திரைகள் அட்மிரால்டி மற்றும் கடல்சார் அதிகார வரம்பு மற்றும் நோட்டரி பொது நீதிமன்றங்களின் முத்திரைகள், மற்றும் எந்தவொரு நபரும் 42 ஆல் பயன்படுத்த அங்கீகரிக்கப்பட்ட அனைத்து முத்திரைகள், அரசியலமைப்பு அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றச் சட்டம் அல்லது ஒரு சட்டம் அல்லது ஒழுங்குமுறை சட்டத்தின் சக்தியைக் கொண்டவை 40 இந்தியா.

7. எந்தவொரு மாநிலத்திலும் எந்தவொரு பொது அலுவலகமாக இருக்கும் நேரத்தில், நிரப்பப்படும் நபர்களின் அலுவலகம், பெயர்கள், தலைப்புகள், செயல்பாடுகள் மற்றும் கையொப்பங்கள், அத்தகைய அலுவலகத்திற்கு அவர்கள் நியமிக்கப்பட்ட உண்மை அரசுப் பதிவேட்டில் அறிவிக்கப்பட்டால்.

8. இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டஎந்த ஒரு மாநிலத்தின் அல்லது இறையாண்மையின் இருப்பு, தலைப்பு மற்றும் தேசியக் கொடி.

9. உத்தியோகபூர்வ அரசுப் பதிவேட்டில் அறிவிக்கப்பட்ட காலப் பிரிவுகள், உலகின் புவியியல்

பிரிவுகள் மற்றும் பொது விழாக்கள், விரதங்கள் மற்றும் விடுமுறைகள்.

10. இந்திய அரசின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள பிரதேசங்கள்.

11. இந்திய அரசு மற்றும் வேறு எந்த அரசுக்கும் அல்லது நபர்களுக்கும் இடையிலான விரோதப் போக்கைத் தொடங்குவது, தொடர்வது மற்றும் முடித்தல்.

12. நீதிமன்றத்தின் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் துணை அதிகாரிகள் மற்றும் உதவியாளர்கள் மற்றும் அதன் செயல்முறையை நிறைவேற்றுவதில் செயல்படும் அனைத்து அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் அனைத்து வக்கீல்கள், மனுதாரர்கள் மற்றும் பிறரின் பெயர்கள் அதற்கு முன் தோன்ற அல்லது செயல்பட சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள்.

13. சாலை அல்லது கடலின் விதிகள் நிலத்திலோ அல்லது கடலிலோ.

எந்த ஒரு நபராவது ஏதேனும் உண்மையை நீதி மன்றத்தின் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டால் அதற்கு ஆதாரமாக நீதி மன்றத்துக்குத் தேவைப்படும் பதிவேடுகள் அல்லது ஆவணங்களை அவர் தாக்கல் செய்யும் வரை நீதி மன்றம் அந்த உண்மைகளை கருத்தில் கொள்ள மறுக்கலாம்.

நீதி மன்றம் கருத்தில் கொள்வதால் என்ன பலன் ?

ஒரு உண்மையை நீதி மன்றம் கருத்தில் கொண்டு விட்டால் அதுவே அந்த உண்மைக்கு இறுதியான ஆதாரம் என்று கொள்வதற்கில்லை அவ்வாறு நீதி மன்றத்தால் கருத்தில் கொள்ளப்பட்ட உண்மைகள் பிற்காலத்தில் உண்மையல்ல என்று நிரூபிக்கப்படலாம்

பிரிவு 57 மற்றும் பிரிவு 114 இன் ஒப்பீடு –

இந்திய சாட்சிகள் சட்டத்தின் 57 வது பிரிவு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகளை நீதித்துறை அரிவிப்பாக எடுப்பது நீதிமன்றத்தின் கடமையாகும். பிரிவு 57 இல் நீதிமன்றம் உண்மைகளை நீதித்துறை அறிவிப்பாக எடுக்க முடியாது என்பதைக் குறிக்க எதுவும் இல்லை, நிகழ்வுகள், மனித நடத்தை மற்றும் பொது மற்றும் தனியார் வணிகங்களின் பொதுவான போக்கைக் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட வழக்கின் உண்மை தொடர்பாக. பிரிவு 114 இன் கீழ் உள்ள விதிகள் அதை கட்டாயமாக்கவில்லை.

ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகள் நிரூபிக்கப்பட வேண்டியதில்லை (பிரிவு – 58)

ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டவை நிரூபிக்கப்பட வேண்டியதில்லை,என்ற ஒரு கொள்கையை இப்பிரிவு கூறுகிறது. எந்தவொரு தரப்பு பிரச்சினையில் உள்ளது என்ற கேள்வியை நீதிமன்றம் முயற்சிக்க வேண்டுமே தவிர எந்த கேள்வி / உண்மைகளை அவர்கள் ஒப்புக் கொண்டார்கள் என்பது பற்றி அல்ல. பிரிவு 58 ன் படி வழக்கில் உள்ள தரப்புகள் அல்லது அவற்றின் முகவர்கள் ஏற்கனவே ஒப்புக்கொண்ட எந்த உண்மையும் எந்த ஒரு நடவடிக்கையிலும் நிரூபிக்கப்பட வேண்டிய அவசியமில்லை.

நீதி மன்றத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டவை நிரூபிக்கப்பட வேண்டியதில்லை.

நீதி மன்றத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட எந்த உண்மைகள் நிரூபிக்கப்பட வேண்டியதில்லை என பிரிவு 58 விளக்குகிறது. அதன்படி கீழ்க்கண்டவற்றுக்கு எந்த ஆதாரமும் தேவையில்லை:

1. விசாரணையில் எந்த தரப்புகள் அல்லது அவர்களின் முகவர்கள் ஒப்புக்கொண்ட உண்மைகள்

2. விசாரணைக்கு முன்னர் அவர்கள் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொண்ட உண்மைகள்.

3. விதிகளின்படி அவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டதாக்க கருதப்படும் உண்மைகள்,

முடிவுரை

பொதுவான விதிகளின்படி, ஒரு தரப்பு உணரும் ஒவ்வொரு உண்மையும் வாய்வழி அல்லது ஆவண சான்றுகளால் நிரூபிக்கப்பட வேண்டும். இருப்பினும், இந்த பொது விதி கீழ்க் கண்ட மூன்று விதிவிலக்குகளுக்கு உட்பட்டது

1) நீதிமன்றம் நீதித்துறை அறிவிப்பை எடுக்கும் உண்மைகள் (பிரிவு 57).

2) ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகள் (பிரிவு 58)

3) சட்டம் ஒரு தரப்புக்கு ஆதரவாகக் கருதும் உண்மைகள் நிரூபிக்கப்பட வேண்டியதில்லை.

பொதுவாக நீதி மன்றத்தில் வழக்காடும் வாதி / பிரதி வாதி ஆகிய இரண்டு தரப்பாரும் தாங்கள் வழக்கு விசாரணையின் போது கூறும் எந்த ஒரு தகவலுக்கும் தக்க ஆதாரங்கள் கொடுத்து நிரூபிக்க வேண்டும் ஆனால் அதற்கு விதி விலக்காக இந்திய சாட்சிகள் சட்டம் 56லிருந்து 58 வரை சொல்லப்பட்டுள்ள சந்தர்பங்களில் அவ்வாறு நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை அதைப் பற்றி ஏதும் அறியாத வர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட கட்டுரை. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட சட்டம் அல்லது வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ளதாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் ப்ளாக் ஐ ப்ளீடர்ஸ் .இன் எஸ் ஆர் டி லா நோட்ஸ் .காம் ஆப்டெக்ஸ் லா.காம் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுக்கப் பட்டது.

அற்புதமான பெண்ணின் வாழ்க்கை பயணம்

Dr. D. Kalyanakumer, Trichy - 18.

நாம் நம்முடைய வாழ்க்கையில் எனக்கு எதுவுமே இல்லை எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது என் வாழ்க்கையில் எந்த நன்மையும் நடக்கவில்லை என்று கவலைப்படுவதிலேயே வாழ்நாட்களை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம். நமக்கு பிடித்த விஷயங்களும் நாம் நேசிப்பவர்களும் நம்மை விட்டு போய்விடக்கூடாது என்பதற்காக எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து பலவற்றை இழந்து அர்த்தமற்ற ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் நம்முடன் இருப்பதற்கு தகுதி உள்ளவை மட்டும் தான் நம்முடன் இருக்கும். நம்மை விட்டு போகின்றவற்றை பற்றி கவலைப்படுவதை நிறுத்த வேண்டும். நாம் எல்லோருக்கும் பயம் என்ற ஒன்று உண்டு. நிறைய விஷயங்களுக்காக நாம் பயப்படுகின்றோம். அதில் முக்கியமான பயம் நம் நேசிப்பவர்களை இழந்து விடுவோமோ என்பது. அவர்களை வாழ்நாள் முழுவதும் நம்முடன் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக பலவாறு நம்மை நாமே மாற்றிக்கொண்டு வாழ்கிறோம். நமக்கென்று ஒரு தனித்துவம் இன்றி வாழ்கிறோம். இறைவன் நமக்கென்று தந்திருக்கும் நல்லவற்றை கொண்டு நம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக வாழ வேண்டும். வாழ்க்கையில் எல்லாம் இழந்த போதும் சோர்ந்து போகாமல் சாதித்த மனிதர்கள் பலர் நம்மோடு இருக்கின்றனர். அவர்களோடு ஒப்பிட்டு பாருங்கள் அப்போது தெரியும் நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பது.

அப்படி ஒரு சாதனை பெண்ணை பற்றி தான் நான் இங்கு கூற போகின்றேன். இதை படிக்கும் போது நிச்சயமாக உங்கள் எண்ணங்களில் ஒரு மாற்றம் வர வேண்டும்.

''அவர்கள் எனது குறைகளை பார்க்கிறார்கள்
நான் எனது நிறைகளை பார்க்கிறேன்.
அவர்கள் என்னை ஊனமுற்றவள் என்றார்கள்
நான் என்னை மாற்றுதிறனாளி என்றேன்.''

இந்த வசனம் ஒரு மேடையில் முனிபா மஸாரி என்ற ஒரு முப்பது வயது பெண் தன்னை பற்றி கூறியது. முனிபா மஸாரி இவரை ''இரும்பு பெண்மணி'' என்று அழைக்கிறார்கள். மனதால் மட்டும் இரும்பு பெண்ணல்ல உண்மையாகவே இவரது உடலில் இடுப்பு பகுதிக்கு கீழ் உள்ள எல்லா உடற்பாகங்களும் இரும்பால் பொருத்தப்பட்டிருக்கின்றது. அதனால் தான் இவரை இரும்பு பெண்மணி என்கிறார்கள்.

முனிபா மஸாரி இவர் பாகிஸ்தான் நாட்டின் பலோஜிஸ்தான் என்ற ஒரு கிராமத்தில் 1987–ம் ஆண்டு பிறந்தவர். மிகவும் கலாச்சாரமும் கட்டுப்பாடுகளும் நிறைந்த ஓர் ஊர் அது. அவரது சிறு வயது கனவே தான் ஒரு ஓவியராக வர வேண்டு என்பதே. ஆனால் அவரது பதினெட்டாவது வயதில் அவரது தந்தையின் விருப்பத்திற்கேற்ப திருமணம் செய்து கொண்டார். தான் திருமணம் செய்து கொள்வது தான் தன் தந்தைக்கு விருப்பம் என்பதால் அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதில் தான் தனக்கு மகிழ்ச்சி என்று முனிபா மஸாரி அந்த திருமணத்தை ஏற்றுக்கொண்டார்.

ஆனால் அந்த திருமண வாழ்க்கை ஒரு போதும் அவருக்கு மகிழ்ச்சியை கொடுக்கவில்லை. திருமணம் முடிந்து இரண்டாவது வருடம் அவர் கார் விபத்து ஒன்றில் சிக்கினார். காரை ஓட்டிச்சென்ற அவர் கணவர் தூங்கி விட்டதால் கார் ஒரு பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. முனிபா மஸாரியின் கணவர் காரிலிருந்து குதித்து தன்னை காப்பாற்றிக் கொண்டார். ஆனால் முனிபா மஸாரி காரினுள்ளேயே மாட்டிக்கொண்டார். அந்த நிலையிலும் கணவர் தப்பித்தது அவருக்கு மகிழ்ச்சியளித்தது.

அந்த விபத்தில் அவர் உடலில் பல எலும்பு முறிவுகளும் பலத்த அடிகளும் ஏற்பட்டது. அது ஒரு கிராமம் என்பதால் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதே சிரமமாக இருந்தது. பின் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பல சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டது. அவரின் உடலில் பல பாகங்களில் நட்டுகளும் இரும்பும் பொருத்தப்பட்டு உயிரோடு காப்பாற்றப்பட்டார். அடுத்த நாள் வைத்தியர் அவரிடம் இனி ஒருபோதும் உங்களால் நடக்க இயலாது என்று கூறினார். அத்துடன் அவரால் இனிமேல் ஓவியம் வரையவும் முடியாது என்றும் கூறினார்கள். முனிபா மஸாரி மிகவும் மனமுடைந்து போனார். இருபது தொடக்கம் இருபத்தைந்து வயதிற்குள் இருக்கும் ஒரு இளம் வயது பெண் அவரின் மனநிலை எவ்வாறு இருந்திருக்கும் என்று சிந்தித்து பாருங்கள்.

மீண்டும் அடுத்தநாள் வைத்தியர் அவரிடம் உங்கள் சிறுநீர்ப்பை சேதமடைந்ததால் உங்களுக்கு சிறுநீர் கட்டுப்பாடு இருக்காது ஆகவே எப்பொழுதும் செயற்கை சிறுநீர் பை பொருத்திக் கொண்டு தான் இருக்கவேண்டும்என்கிறார். ஆனாலும்முனிபாமஸாரி தன்னால் வாழ்ந்து விட முடியும் என்ற நம்பிக்கையோடு இருந்தார். அந்த நம்பிக்கையை உடைக்கும் இரண்டு செய்திகள் அவரை உருக்குலைத்தது. ஒன்று அவரது கணவர் முனிபா மஸாரியை விவாகரத்து செய்துவிட்டு மறுமணம் புரிந்து கொண்டார் ஆனால் முனிபா மஸாரி தனது கணவருக்கு திருமண வாழ்த்து செய்தியை அனுப்பினார்.

இரண்டாவது அவரால் எப்போதும் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாது என்பது அதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை ஏனெனில் ஒரு பெண்ணின் வாழ்க்கை என்பது அவள் தாயாகும் போது தான் முழுமையடைகின்றது. ஒரு கலாச்சாரம் மிக்க ஊரில் பிறந்து வளர்ந்தவர் முனிபா மஸாரி. வைத்தியசாலையின் வெள்ளை சுவர்களை பார்த்து பார்த்து அவருக்கு நான் ஏன் இன்னும் உயிரோடு இருக்கிறேன் என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் முனிபா மஸாரியின் தாய் அவரிடம் ''இதுவும் கடந்து போகும் நீ சாதிக்க வேண்டிய ஏதோ ஒன்றை கடவுள் உனக்காக வைத்திருக்கிறார் ஆகவே சோர்ந்து போகாதே'' என்று தைரியம் கூறினார். அதன் பின் தன் பயத்தை தகர்த்தெறிந்து விட்டு தன் சாதனை பயணத்தை தொடங்கினார் முனிபா மஸாரி.

தன்னால் தாயாக முடியாது ஆனால் இந்த உலகத்தில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் அநாதையாக இருக்கிறார்கள். நான் ஏன் அப்படி ஒரு குழந்தைக்கு தாயாக இருக்க கூடாது? என்று ஒரு குழந்தையை தத்தெடுத்தார். மேலும் அவர் ஊனமுற்ற அனாதை குழந்தைகளை பாதுகாக்கும் ஒரு சேவை மையத்தை ஆரம்பித்தார். ஓவியம் வரைய ஆரம்பித்தார். அவருடைய அற்புதமான உயிருள்ள ஓவியங்களை உலகம் வியந்து நோக்க தொடங்கியது. பாகிஸ்தான் நாட்டின் தேசிய தொலைக்காட்சி ஒன்றில் அறிவிப்பாளராக பணியாற்றுகின்றார் முனிபா மஸாரி அவர்கள். இன்று அவர் பாகிஸ்தான் நாட்டின் பெண்கள் நலன்புரி அமைப்பின் ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராக இருக்கின்றார்.

முனிபா மஸாரி அவர்கள் தன்னுடைய வாழ்க்கையின் வெற்றிக்கும் தன்னுடைய முடிவில்லா புன்னகைக்கும் காரணம் என்னவென்று இவ்வாறு கூறுகின்றார் ''நான் ஒரு போதும் இழந்த பொருட்களுக்காகவோ மனிதர்களுக்காகவோ கவலைப்படுவதில்லை. ஏனெனில் எவரெல்லாம் என்னோடு இருக்க வேண்டும் என்று விரும்பினார்களோ அவர்கள் இன்னும் என்னுடனே இருக்கிறார்கள். சில நேரம் சில மனிதர்கள் உங்கள் வாழ்வில் இல்லாதிருப்பது உங்களை நீங்கள் ஒரு சிறந்த மனிதராக செதுக்கிக்கொள்ள வழி வகுக்கும். உங்களை நீங்களே நேசித்து கொள்ளுங்கள்.

முப்பத்தியொரு வயதிற்குள் இழக்க கூடாதவைகள் அனைத்தையும் இழந்தும் கூட இன்று வெற்றியின் உச்சத்தில் நிற்கும் இந்த அற்புதமான பெண்ணின் வாழ்க்கை பயணம் நமது வாழ்க்கைக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

Carlee

ஆள் பாதி ஆடை பாதி!!!

TRIPLE "A" (AAA) GARMENT
KNITTING | WOVEN | JOB WORK

அனைவருக்கும் வணக்கம்!

நாங்கள் **"Triple 'A' Garments"** என்னும் நிறுவனத்தினை கடந்த ஐந்து ஆண்டுகளாக சிறந்த முறையில் நடத்தி வருகின்றோம். இதில், சென்ற இரண்டு ஆண்டுகளாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆயத்த ஆடைகள் (Nighty, Night Suit, Kurtis, Couple Twinning, Family Twinning, Ethnic Wear) ' CARLEE ' என்னும் பெயரில் குறைந்த விலையில், நிறைந்த தரத்தில் வழங்கி வருகின்றோம் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் கார்குலச் சொந்தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். நாங்கள் உற்பத்தியாளராக எங்கள் தரத்தில் 100க்கு 100% எந்த விதமான சமரசமும் செய்வதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

எங்களது தயாரிப்புகளை சிறிய அளவில் ஆர்டர் செய்து பயன்படுத்திய பின், மகிழ்ச்சி அடைந்தால் தொடர்ந்து ஆதரவு தரவும்.

மேலும் எங்களது தயாரிப்புகளை **www.carleecreations.in** என்னும் எங்கள் இணையத்தளத்தில் பார்த்து வாங்க இயலும் மற்றும்

carlee_creations Instagram பக்கத்தையும் பின் தொடரவும்.

எங்கள் தயாரிப்புகளை விற்க மறுவிற்பனையாளர்களையும் வரவேற்கிறோம்.

மேலும் தொடர்புக்கு: **க.கார்குழலி.**

Triple 'A' Garments, 15/25, எடத் தெரு, குத்தாலம், மயிலாடுதுறை ✆ 9944290615, 63743 46400

நகர கார்காத்த வேளாளர் சங்கம்

சீர்காழி

பதிவு எண். 102 / 2019

19-வது மங்கல சந்திப்பு

அன்புடையீர் வணக்கம்.

சீர்காழி நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் **19-வது** மங்கல சந்திப்பு நிகழ்ச்சியானது **31-07-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 2.00 மணி வரை** சீர்காழி, தேர் தெற்கு வீதி **சாவித்திரி அம்மாள் திருமண மண்டபத்தில்** (சிவக்குமார் தியேட்டர் எதிரில்) தொடங்கி நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியினை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். நிகழ்ச்சியில் பங்கு பெற விரும்புபவர்கள் பதிவுக்கட்டணம் **ரூ. 500**/-ஐ விவரப்பட்டியலுடன், கீழ்க்கண்ட முகவரிக்கு **22.07.2022**–க்குள் அனுப்பிட வேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நேரில் வந்தும் பதிவு செய்து கொள்ளலாம். வங்கி D.D. அனுப்ப விரும்பும் பதிவுதாரர்கள் Nagara karkatha Velalar Sangam என்ற பெயரில் சீர்காழியில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்பவும். நிகழ்ச்சி நல்ல முறையில் நடந்திட எப்பொழுதும் போல் ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு நல்கிட அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

என்றும் அன்புடன்

கல். சுகுந்தவனநாதன் பிள்ளை, தலைவர் : 9442083310
குண. அமுதன் பிள்ளை, செயலாளர் : 9842232500
சி. அகோரம் பிள்ளை, பொருளாளர் : 9486194225
இராம. முரளி பிள்ளை, நிறுவனர் : 9442085841

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

திரு. **சண். முருகன் பிள்ளை**
2/24, பிள்ளையார்கோயில் தெரு, செம்மங்குடி அஞ்சல்.
சீர்காழி தாலுக்கா – 609104. செல் : 9597026767

தொடர்புக்கான நேரம் : காலை 10.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை.

மணமகன்/மணமகள் விபரம்

பெயர்	..... ஆண்/பெண்
பிறந்த தேதி	.....
உயரம் (செ.மீ)	.....
நட்சத்திரம்	.....
கோத்திரம்	.....
நிறம்	.....
கல்வித் தகுதி	.....
பணி விபரம்	.....
ஊதியம்	
தந்தை பெயர்	.....
பூர்வீகம்	.....
பணி விபரம்	.....
தாயார் பெயர்	.....
பூர்வீகம்	.....
பணி விபரம்	.....
உடன் பிறப்பு :	ஆண் ☐ பெண் ☐
விருப்பம் மற்றும்	.....
இதர தகவல்கள்	.....
தொடர்பு முகவரி	.....
அஞ்சலக குறியீட்டு	.....
எண்ணுடன்	.....
தொலை/அலைபேசி எண்.	.....
மின் அஞ்சல்	.....

நட்சத்திரங்களும் மரங்களும்

அக்ரி. கு. சேதுசுப்பிரமணியன், சிதம்பரம்.

அலைபேசி : 9443665642

2. பரணி :

இரண்டாவது நட்சத்திரமாகிய பரணியின் நான்கு பாதங்களும், மேஷ ராசியிலேயே அடங்கிவிடுவதால், இது ஒரு முழு நட்சத்திரமாகும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், நல்ல செல்வ வளத்துடன் இருப்பார்கள். உறுதியான மனப்பான்மையும், நல்ல உடல் நலமும், கொண்டவர்கள். சாமர்த்தியமாய் காரியங்களை சாதித்துக்கொள்ளும் திறமை உடையவர்கள். சுகபோக வாழ்க்கையை விரும்புபவர்கள்.

பரணி நட்சத்திரத்துக்குரிய அதிதெய்வம் துர்க்கை, அதிதேவதை இயமன், விருட்சம் நெல்லி. பறவை காகம். குணம் இராஜசம்.

இந்த நட்சத்திரத்துக்கு அதிபதியான கிரகம் சுக்கிரனாகும். எனவே பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஆரம்ப திசை சுக்கிரதிசையாக அமைந்து, பின்னர் சூரிய திசை, சந்திர திசை எனத் தொடரும்.

ஒரு காலத்தில் திருவாரூரில் சிவபக்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு முறை ஓர் இடத்துக்கு வந்து அங்கிருந்த இறைவனை வணங்கினார். அந்த இடத்தில் கொடிய மிருகங்கள் ஒற்றுமையாய் இருப்பதையும் தேவகணங்கள் நாள்தோறும் வந்து இறைவனை வழிபடுவதையும் கண்டு, சோழ மன்னனிடம் தெரிவித்தார்.

சோழ மன்னனும் அவ்விடம் வந்து காட்டினை அழித்து கோயிலைக் கட்டினான். அங்கு நெல்லிமரத்தின் கீழ் சுயம்புவாக இருந்த இறைவனுக்கு ஆம்லகேசுவரர் என்ற திருப்பெயரும் உண்டாயிற்று. கோயிலைக் கட்டிய சோழ மன்னனுக்கும் ஆம்லகேச சோழன் என்று பெயர் அமைந்தது.

ஆம்லகேச சோழனுக்கு உத்தமசோழன் என்று ஒரு மகன் இருந்தான். உத்தம சோழனின் மனைவி பதும மாலை குழந்தைப் பேறு இல்லாத இந்த தம்பதியர் இத்தல இறைவனை வணங்கி வரவே, ஒரு நாள் அன்னை பராசக்தியே மூன்று வயது குழந்தையாக மன்னனின் மடியில் அமர்ந்தார். அப்போது ஒரு அசரீரி தோன்றி அம்பாளே குழந்தை வடிவில் வந்துள்ளதாகவும் அவளை மங்களநாயகி என்று பெயரிட்டு வளர்த்து வரும்படியும் கூறியது. பருவப்பெண்ணாய் வளர்ந்த மங்களநாயகி திருவாரூரில் வழிபட்டபோது இறைவன் திருவாய்மொழியாக "திருநெல்லிக்கா வந்து ஆவணி முதல் வெள்ளியில் உன்னைத் திருமணம் செய்வோம்" என்று கூறினார். அவ்வாறே திருமணமும் நடந்தேறியது.

தல வரலாறு :

தேவலோகத்தில் உள்ள கற்பகம், பாரிஜாதம், சந்தானம், அரிசந்தானம், மந்தாரம் ஆகிய ஐந்து மரங்களும் வேண்டியதைத் தரும் ஆற்றல் பெற்றன. அதனால் கர்வம் கொண்டன. துர்வாச முனிவரின் சாபத்துக்கு ஆளாகி, பூமியில் புளிக்கும் கனிகளை உடைய நெல்லி மரங்களாக மாறின. பின்னர் சாப விமோசனம் பெற்ற அம்மரங்கள் தேவலோகம் செல்லவும், நெல்லி மரத்தின் அருமையை பூலோகத்தினர் அறிந்துகொள்ள இறைவன் நெல்லி மரத்தினடியிலேயே சுயம்புவாகத் தோன்றினார். எனவே இறைவன் நெல்லி வனநாதர் (ஆம்லகேசுவரர்) என்று அழைக்கப் பெற்றார். தலமும் திருநெல்லிக்கா என்றாயிற்று வடமொழியில் ஆம்லா என்றால் நெல்லி என்பதாகும். இறைவனின் பெயர் மங்களநாயகி.

இத்தலத்து இறைவனை பிரம்மா, திருமால், சூரியன், சந்திரன், சனி, கந்தர்வர், துர்வாசர், தேவலோக மரங்கள் வழிபாடு செய்துள்ளனர். மேற்கு பார்த்த இத்தலத்தில் ஆண்டுதோறும் மாசி 18 முதல் ஒரு வார காலத்துக்கு மாலை வேளையில் சூரிய ஒளிக்கதிர்கள் மூலவர் மீதுபட்டு சூரிய பூசை நடைபெறுகிறது.

பஞ்சாட்சரம் பூசை செய்த பஞ்சகூடபுரம் என்று சொல்லப்படும் ஐந்து தலங்களுள் திருநெல்லிக்காவும் ஒன்று. இதர தலங்கள் 1. நாட்டியத்தான்குடி, 2. திருக்காராயில், 3. திருத்தெங்கூர், 4. நமசிவாயபுரம் என்பன.

திருஞானசம்பந்தரின் ஒரு பதிகம் பெற்ற தலமாகும். இத்தலத்தின் விருட்சம் நெல்லியாகும்.

நெல்லி :

கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய அதியமானுக்கு கிடைத்தற்குரிய ஒரு நெல்லிக்கனி கிடைத்தது. அந்தக் கனியை உண்பவர் நீண்ட காலம் வாழ்வர் என்பதை அறிகிறான். அதைத் தான் உண்டதைவிட தமிழ் மூதாட்டி ஔவையார் உண்டால் தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் நல்லது

எனக் கருதி ஔவையிடம் விவரம் கூறாமல் கொடுத்து விடுகிறான். ஔவையார் அதனை உண்ட பிறகு அதன் பெருமையையும், அதியமானின் கொடைத்தன்மையையும் வியந்து போற்றி சங்க இலக்கியமான புறநானூற்றில் பாடியுள்ளார்.

அத்தகைய பெருமைக்குரிய நெல்லி தென்கிழக்கு ஆசியாவைப் பூர்வீகமாகக் கொண்டது. இதன் தாவரவியல் பெயர், Emblica Officinalis என்பதாகும். தாவரக்குடும்பம் Euphorbiaceae.

சமவெளியிலும், 4000 அடி வரை உயரமுள்ள மலைப்பகுதிகளிலும் வளரும் இம்மரம் 8–12 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. இலைகள் கூட்டிலைகள் ஆண் மலர்கள் மற்றும் பெண் மலர்கள் தனித் தனியானவை. ஜூலை மாதத்தில் பூத்து நவம்பர் – டிசம்பர் மாதங்களில் கனிகள் உருவாகும். பனார்சி, காஞ்சன், கிருஷ்ணா, சாக்கியா ஆகிய இரகங்கள் பயன்பாட்டில் உள்ளன.

மருத்துவப் பயன்கள் :

அபரிமிதமான உயிர்ச்சத்தான வைட்டமின் 'சி' கொண்டது. மூன்று ஆரஞ்சுப் பழங்களில் உள்ள வைட்டமின் 'சி' ஒரு நெல்லிக்கனியில் உள்ள. மூப்பினை விரட்டி இளமை நலம் காக்க வல்லது. இதிலுள்ள வைட்டமின் 'சி' எந்நிலையிலும் சிதைவதில்லை.

இலைகளுடன் வெந்தயம் சேர்த்து அரைத்து வடிச்சாறு அருந்த கடுமையான வயிற்றுப்போக்கு குணமாகும்.

நெல்லி மலர்கள் குளிர்ச்சி தருபவை. மலமிளக்கும் தன்மை உடையவை. நெல்லிக்கனி அற்புதமான ஒன்றாகும். உடல் நலத்தை பேணுவதில் தன்னிகரில்லாதது. நெல்லிக்கனியில் உள்ள சத்துக்கள்.

நீர்	= 81.2%
புரதம்	= 0.5%
கொழுப்பு	= 0.1%
நார்ப்பொருள்	= 3.4%
மாவுப்பொருள்	= 14.1%
தாதுஉப்புக்கள்	= 0.7%
இதில் கால்சியம்	= 0.05
ஃபாஸ்கரஸ்	= 0.02
இரும்பு	= 1.2 மி.கிராம்
நியாசின்	= 0.2 மி.கிராம்
வைட்டமின் 'சி'	= 600.00 மி.கிராம்

ஒரு மேசைக்கரண்டி நெல்லிக்கனிச்சாறுடன் அதே அளவு தேனைக்கலந்து விடியற்காலை எடுத்துக்கொண்டால் சயரோகம், ஆஸ்துமா, பிராங்கைடிஸ், ஸ்கர்வி, சர்க்கரைநோய், சோகை, நோய்பரவல், புற்றுநோய், மன அழுத்தங்கள், தலைமுடி உதிர்தல், தலைமுடி நரைத்தல், மூப்பதற்கு முன் தோன்றும் தோல் சுருக்கங்கள் ஆகியவை தடுக்கப்படும் கண் கோளாறுகளும் வராது.

ஒரு மேசைக்கரண்டி நெல்லிச்சாறுடன், ஒரு கோப்பை பாகற்காய் சாறுடன் உட்கொண்டால் இன்சுலின் சுரப்பினை ஊக்குவிக்கும். மொத்தத்தில் நெல்லி ஒரு சர்வரோக நிவாரணி.

நெல்லியைத் துவையல் செய்து சாப்பிட பசியின்மை, சுவையின்மை, வாந்தி ஆகியவை குணமாகும்.

நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய் மூன்றையும் உலர்த்திப் பொடி செய்து சம அளவில் கலந்து வைத்தால் அதுவே திரிபலா சூரணம் எனப்படும். அதனைச் சிறிதளவு வெந்நீரில் இட்டு அருந்தி வர வாய்ப்புண், இரப்பை உப்புசம், மூக்கில் உண்டாகும் நோய்கள், மலச்சிக்கல், ஈரல் நோய்கள் குணமாகும். உடல் ஆரோக்கியத்தையும், நோய் எதிர்ப்புச் சக்தியும் நல்கும் ''ச்வயவனப்பிரகாச'' லேகியத்தில் முக்கிய பங்கு வகிப்பது நெல்லிக்கனியாகும்.

பல்வேறு நன்மைகளை நல்கும் நெல்லியானது பரணி நட்சத்திரத்துக்குரியதாகிறது. எனவே பரணி நட்சத்திரக்காரர்களுக்கு திருநெல்லிக்கா, பழையாறை வடதளி, திருநெல்வாயில் (சிவபுரி) ஆகிய தலங்கள் பரிகாரத் தலங்களாக விளங்குகின்றன. மேலும் பரணி நட்சத்திரக்காரர்களுக்கு பட்டீசுரம் வன துர்க்கை வழிபாடும் உகந்தது. அவர்கள் கோயில் நந்தவனங்கள், பள்ளிவளாகங்கள், மற்றும் அவர்களுக்கு ஏற்ற இடங்களில் நெல்லி மரக்கன்றுகளை நடுவதும் சிறந்த பரிகாரமாகும். எனவே அவர்கள் வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய வரங்களை மேற்படி தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்தும், நெல்லி மரக்கன்றுகள் நட்டும் பயன்பளைப் பெறலாம்.

– (பயணிப்போம்)

சங்கப் பலகை

பங்கு பெறுவோர் : மங்களம், அலமேலு, ஆண்டாள், சித்ரா, வசுமதி, தீபிகா, கோமதி, பிரியா, கௌரி, பவித்ரா

இடம் :- பெசன்ட நகர் பீச்

அலமேலு – அப்பாடி ரொம்ப நாளுக்கு அப்பறம் இப்பதான் இங்கே வர்ரோம் இல்லியா சுகமான காத்து சரி எல்லாரும் வந்தாச்சுன்னா ஆரம்பிங்க அம்மா.

கௌரி – எதைப் பத்தி சொல்லுணும்னு சொன்னீங்கன்னா சித்ரா ஆரம்பிப்பா.

மங்களம் இரும்மா பிரியா பவித்ராகிட்ட எதையோ கொடுக்குது அது என்னான்னு நாமும் பார்ப்போம்.

பவித்ரா – அது ஒண்ணுமில்ல மாமி பிரியாவோட சொந்தக்காரப் பொண்ணு சமீபத்தில இத்தாலி போய் வந்த போட்டோகளை குடுத்துதாம் அதிலேர்ந்து பிசா நகர பெல் டவர் போட்டோவ பிரியா கொண்டாந்திருந்தா அதைத் தான் பாத்துகிட்டு இருந்தோம்.

அலமேலு – எங்கே அதைத்தான் காட்டேன் நாங்களும் பாக்கிறோம்.

பவித்ரா – இதோ பாருங்க இதுதான் அந்த பிசா பெல் டவர்.

மங்களம் – அது என்னாம்மா அது அந்த கோபுரம் சாஞ்சாப்பில் இருக்கே.

ஆண்டாள் – ஆமாம் மங்களம் அந்த கோபுரத்துக்கே பிசா நகர சாயும் கோபுரம்னு பேரு.

அலமேலு – அது கட்டும்போதே அப்படி சாஞ்சாப்பில கட்டினாங்களா அல்லது கட்டினப்பறம் சாஞ்சுதா.

கௌரி – எல்லாத்தியும் விபரமா சொல்றோம் சித்ரா ஆரம்பி.

சித்ரா – இத்தாலியில் உள்ள பிசா நகரத்தில் உள்ள ஒரு தேவாலயத்தைச் சேர்ந்த கட்டிடங்களில் ஒன்றுதான் அந்த தேவாலயத்தின் ஆலையமணி பொருத்தப்பட்ட இந்த கோபுரம் அதனால தான் அதை பிசா நகர சாயும் மணி கோபுரம்னு ஆங்கிலத்தில சொல்லுவாங்க LEANING PISA BELL TOWER.

அலமேலு – அததை எப்ப கட்டினாங்க மத்த விபரத்த எல்லாம் சொல்லுங்க.

வசுமதி – மாமி அந்த கோபுரம் முதலில் 5.5 டிக்ரி சாஞ்சிருந்திது. இப்போ அது 4 டிக்ரியா கொறைஞ்சிருக்கு.

மங்களம் – அப்படின்னா சாஞ்ச கோபுரத்தை ரிப்பேர் பண்ணி நிமித்தாங்களா.

கௌரி – ஆமாம் மாமி எல்லா விபரங்களையும் வரிசையா சொல்லுவாங்க நீ தொடர்ந்து சொல்லு வசு.

வசுமதி – அந்த கோபுரத்தின் உயரம் தரையிலிருந்து உயரமான பக்கம் 55.86 மீட்டர் அதாவது 186 அடி 3 அங்குலம் தாழ்ந்த பக்கம் 55.67 மீட்டர் = 185 அடி 11 அங்குலம் எப்ப சாய ஆரம்பிச்சுதுங்கறத தீபிகா சொல்லுவா.

தீபிகா – அந்த கோபுரத்தில 294 / 296 படி இருக்கு.

மங்களம்– அது என்னாம்மா 294 / 296 ங்கற மொத்தம் எத்தினி படி கரெக்டா சொல்லு.

தீபிகா– அதாவது மாமி அந்த டவரின் 7 ஆவது தளத்தில வடக்கு பார்த்த படிக்கட்டில 2 படி குறைவா இருக்கும் அந்த கோபுரத்த 12 ஆவது நூற்றாண்டில கட்டிகிட்டு இருக்கும்போது அது கட்டப்பட்டிருந்த இடத்தின் அஸ்திவாரம் இருந்த இடம் மிகவும் சாஃப்ட் ஆக இருந்ததால் அந்த கோபுரத்தின் வெயிட்ட தாங்காம அது சாயத் தொடங்கியது 14 ஆவது நூற்றாண்டில அந்த கோபுரம் கட்டி முடிக்கப்பட்டப்போ அது மோசமாகி 1990 ல் சாய்வு 5.5 டிக்ரியாச்சு.

அலமேலு – இப்போ அதன் சாய்வு 4 டிக்ரியா இருக்குன்னு வசுமதி சொல்லுச்சே.

தீபிகா – ஆமாம் மாமி 1993 லேர்ந்து 2001 வரை அதை ரிப்பேர் பண்ணூனாங்க அதனால் அதன் சாய்வு 3.97 டிக்ரியா குறைஞ்சுது அததான் வசுமதி 4 ந்னு சொல்லியிருக்கும் அதை ரிப்பேர் பண்ன ஏன் லேட்டாச்சுன்னு இப்ப சொல்றேன்.

அந்த கோபுரத்தின் இறுதி கட்டமைப்பாக 1173 இல் தொடங்கப்பட்ட மணிக்கோபுரம், 185 அடி (56 மீட்டர்) உயரத்தில் நிற்க வடிவமைக்கப்பட்டது மற்றும் வெள்ளை பளிங்கு கட்டப்பட்டது.மென்மையான தரையில் கட்டிடத்தின் அடித்தளங்களை சீரற்ற முறையில் குடியமர்த்துவது கவனிக்கப்பட்டபோது அதன் எட்டு தளங்களில் மூன்று முடிக்கப்பட்டன.அந்த நேரத்தில், இத்தாலிய நகர அரசுகளுக்கு இடையே

போர் வெடித்தது, மற்றும் கட்டுமானம் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு நிறுத்தப்பட்டது. அந்த இடை வெளி சாய்ந்து கொண்டிருந்த கோபுரத்தின் அஸ்திவாரத்தை ஓரளவுக்கு ஸ்திரமாயிற்று.

அலமேலு – அது சரிம்மா அப்பிடி சாஞ்சிகிட்டு இருந்த டவர எப்படி மேலும் சாயாம தடுத்தாங்க.

கோமதி – என்னா ரிப்பேர் பண்ணினாங்கன்னு நான் சொல்றேன்.

அஸ்திவாரங்கள் சிமெண்ட் க்ரூட் ஊசி மற்றும் பிரேசிங் மற்றும் வலுவூட்டல் பல்வேறு வகையான மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளன, ஆனால் 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டமைப்பு இன்னும் குறைந்து கொண்டிருந்தது, வருடத்திற்கு 0.05 அங்குல (1.2 மிமீ) விகிதத்தில், மற்றும் சரிவு ஆபத்தில் இருந்தது.1990 இல் கோபுரம் மூடப்பட்டது மற்றும் பொறியாளர்கள் ஒரு பெரிய நேராக்க திட்டத்தை மேற்கொண்டதால் அனைத்து மணிகளும் அமைதிப்படுத்தப்பட்டன. பூமி அடித்தளங்களுக்கு அடியில் இருந்து உறிஞ்சப்பட்டது, ஒல்லியை 17 அங்குலங்கள் (44 செ.மீ) முதல் 13.5 அடி (4.1 மீட்டர்) வரை குறைத்தது; இந்த பணி மே 2001ல் முடிக்கப்பட்டது, மேலும் இந்த கட்டமைப்பு பார்வையாளர்களுக்கு மீண்டும் திறக்கப்பட்டது. கோபுரம் மேலும் அகழ்வாராய்ச்சி இல்லாமல் நேராக தொடர்ந்தது, மே 2008 சென்சார்கள் இயக்கம் இறுதியாக நிறுத்தப்பட்டது என்று காட்டியது, மொத்தம் 19 அங்குல (48 செ.மீ).குறைந்தபட்சம் 200 ஆண்டுகளுக்கு கோபுரம் நிலையாக இருக்கும் என்று பொறியாளர்கள் எதிர்பார்த்தனர்.

அலமேலு – சரிம்மா ரொம்ப விரிவா பிசா கோபுரத்தைப் பத்தி சொன்னீங்க நாங்க இனிமேல் அதுக்குப் போறதுக்கு சான்ஸ் குறைச்சல்தான் அதனால் உங்க மூலம் அதப் பத்தி தெரிஞ்சுகிட்டோம்.

மங்களம் – சரிம்மா இத்தோட இன்னைக்குப் போதும் மீதிய அடுத்த சந்திப்ல பேசுவோம்.

ஆண்டாள் – என்ன மங்களம் இன்னைக்கு சீக்கிரமே முடிச்சுட்டாப்புல இருக்கே.

மங்களம் – இல்லே இல்ல இன்னைக்கு வெளியில் கொஞ்சம் வேலை இருக்கு அதான் அதையும் முடிச்சுகிட்டு வீட்டுக்குப் போகலாம்னு.

அத்துடன் எல்லோரும் கலைகிறார்கள்.

உ

சித்தமல்லி அய்யனார் துணை

நமது கார்குல மக்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

வணக்கம்!

நான் திருக்கடையூர் தேவஸ்தான அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். இத் திருக்கோவிலில் நடத்தப்படும் அனைத்து விதமான பரிஹார ஹோமங்கள், சஷ்டி அப்தபூர்த்தி, சதாபிஷேகம், ஆயுஷ்ஹோமம் ஆகியவைகள் மிகவும் சிறப்பான முறையில் பூஜைகள் செய்விக்கப்படும்.

மேலும்

- *தங்குவதற்கு ஆரோக்யமான சகல வசதிகளுடன் கூடிய தூய்மையாக அமையப்பெற்ற தங்கும் இடம்.*
- *உயர்தரமான சுவையுடன் கூடிய உணவு ஏற்பாடு,*
- *வீடியோ, போட்டோ எடுத்தல் ஆகியவற்றிற்கும் உரிய ஏற்பாடு சிறப்பாக செய்து தரப்படும்.*

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

மா. ஞானப்பிரகாசம் பிள்ளை

S/o. ச. மாசிலாமணிப் பிள்ளை, 3/62, தேவஸ்தானக் குடியிருப்பு,

தெற்கு வீதி, திருக்கடையூர் (Po), தரங்கம்பாடி (Tk)., நாகபட்டினம் மாவட்டம்.

அலைபேசி : **94870 33370, 94882 20937, 88702 51787**

E-mail : gprakasam64@gmail.com Website : www.60mkalyanam.com

குறிப்பு : கோவிலுக்கு என்னை நேரில் சந்திக்க வருபவர்கள் போன் செய்துவிட்டு பின்பு வரவும்.

மங்கல சந்திப்பு

விண்ணப்பப் படிவம்

பெயர் :
பிறந்த தேதி :
கோத்திரம் :
நட்சத்திரம் :
ராசி :
உயரம் :
எடை :
நிறம் :
கல்வித் தகுதி :
பணி விபரம் :
பணிபுரியும் நிறுவனம்:
பணிபுரியும் இடம் :
வருட வருமானம் :
தந்தையார் பெயர் :
தந்தையார் பணி :
தந்தையார் பூர்வீகம் :
தாயார் பெயர் :
தாயார் பணி :
தாயார் பூர்வீகம் :
சகோதரர்கள் :
சகோதரிகள் :
பிறந்த ஊர் :
திருமண நிலை :
தொடர்பு முகவரி :

அலைபேசி எண் :
மின்னஞ்சல் :

திருச்சி கார்காத்தார் சங்கம்

19வது மங்கல சந்திப்பு

அன்பு சொந்தங்களே... வணக்கம் !

சிறப்பு : இது திருச்சி சங்கத்தின் ராசியான மங்கல சந்திப்பு இது வரை 1000க்கு மேற்பட்ட திருமணங்கள் நடத்த உதவிய சந்திப்பு.

நீங்கள் செய்ய வேண்டியது : இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தினை முறையாக எல்லா காலங்களையும் விடுதலின்றி நிரப்பிட வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி : மணி பிரிண்டர்ஸ்,
C15/1, 5வது மெயின் ரோடு, இராமலிங்கநகர், உறையூர், திருச்சி – 620 003.

பதிவு கட்டணம் : ரூ.600/- (ரூபாய் அறுநூறு மட்டும்) மண்டப வாடகை, மதிய விருந்து, தேநீர், புத்தகம், அஞ்சல் செலவு ஆகியவற்றிற்கான செலவுக்காக மட்டும். இத்தொகையை காசோலையாகவோ, வரைவோலையாகவோ / NEFT மூலம் **Trichy Karkathar Sangam, Indian Bank, Thiruvanaikovil Branch, Trichy-5. A/c No. 451248110 IFSC : IDIB000S110** என்ற வங்கி கணக்கிலோ செலுத்தலாம்.

நாள் : 15.08.2022 திங்கட்கிழமை
இடம் : **சீனிவாசா ஹால்**
மத்திய பேருந்து நிலையம் அருகில்,
திருச்சி – 620 001.

நேரம் : காலை **9.05** மணி முதல்
மதியம் **1.00** மணி வரை

மங்கல சந்திப்பு நாள் அன்று எடுத்து வர வேண்டியவை :

5 ஜாதக நகல்கள், **5** பயோடேட்டா, புகைப்படங்கள்

விழைவு : தங்கள் பதிவு மற்றும் மேலான வரவு

வாழ்த்து : வாரிசுகளுக்கு நல்ல வரனும், நல்வாழ்க்கையும் அமைய வாழ்த்துகிறோம்.

பதிவுக்கு கடைசி நாள் : 10.08.2022

நவிலு. **N.B. பாலசுப்ரமணியன்** அமைப்பாளர் / திருமண மையம்	**C.சபாபதி** இணை அமைப்பாளர் 94459 17361	**T.ராஜராஜன்** இணை அமைப்பாளர் 98429 88772
M. பாலசுப்ரமணியன் தலைவர் / திருச்சி கார்காத்தார் சங்கம் 98424 44322	**C.சுப்ரமணியன்** செயலாளர் 98424 75125	**N.பாண்டியன்** பொருளாளர் 94879 96520

சக்தி பீடங்கள் - ஓர் பயணம்.

ஏப்ரல் இதழ் தொடர்ச்சி.

மார்ச் 9–ம் தேதி காலை மாதா வைஷ்ணவி தேவியின் தரிசனம். பல கதைகள் கூறப்படுகின்றன. ஆதிபராசக்தி, துர்க்கை லட்சுமி, சரஸ்வதி, மூவரையும் இணைத்து ஒரு பெண் உருவைக் கொடுத்தார். அவளே வைஷ்ணவி தேவி, உலக நன்மைக்காக அவ்விடத்தில் அம்மன் தவமிருப்பதாக ஐதீகம். இராமரிடம் அத்தேவி தன்னை மணக்குமாறு வேண்ட, அவர் "காத்திரு; இந்த யுகத்தில் சீதா தேவி மட்டுமே எனக்குரியவள்" என்றதால், இன்னமும் காத்திருப்பதாக ஐதீகம். கோவிலை அடைய பல வழிகள். மலை அடிவாரத்திலிருந்து 14 கி.மீ. மலையேறினால் கோவிலை அடையலாம். 4 கி.மீ. குதிரையில் பயணித்து, பின் பாட்டரி கார்கள் மூலமாகவோ, கீழிலிருந்து மேல் வரை நான்கு நபர்கள் தூக்கும் டோலி மூலமாகவோ, ஹெலிகாப்டர் மூலமாகவோ (ஆனால் போக 4 கி.மீ. வர 4. கி.மீ குதிரையில் பயணிக்க வேண்டும்) கோவிலை அடையலாம். 4 கி.மீ. குதிரை சவாரி அல்லது நடைப்பயணத்திற்குப் பின் கேபிள் கார் வசதியும் உண்டு. நாங்கள் சென்ற போது கேபிள் கார் பழுதாகிவிட்டபடியால், ஒரு குழுவினர் டோலியையும், ஒரு சிறு குழுவினர் குதிரை, பாட்டரி கார், ஹெலிகாப்டர் பயணத்தையும் மேற்கொண்டனர். இப்பயணத்திற்கு ரூ. 4500–ம், டோலி பயணத்திற்கு ரூ. 7500–ம் கட்டணம். டோலி தூக்குபவர்களுக்கு ஆகும் சாப்பாட்டுச் செலவு தனி. தனியாக சென்றால் வைஷ்ணவி தேவி கோவில் அங்கிருக்கும் பைரவநாத் கோவில், அர்த்தகுவாரி குகை (இங்கு தான் தேவி ஒன்பது மாதம் தவம் இருந்ததாக கூறுகின்றனர்) சிவகோரி குகை (இங்கிருந்து அமர்நாத்திற்கு ஒரு பாதை செல்கிறது) போன்றவைகளையும் நேரமிருப்பின் பார்த்து வரலாம். வைஷ்ணவிதேவியின் தரிசனம் பைரவநாத் தரிசனமின்றி நிறைவு பெறாது என்பது ஐதீகம். நாங்கள் மிகவும் வற்புறுத்தியதால், எங்களின் வழிகாட்டி தரிசனத்திற்கு ஏற்பாடு செய்தார். டோலி நிறுத்துமிடத்திலிருந்து கோவிலுக்கு பல படிகள் ஏறிச்செல்ல வேண்டும். அங்கிருந்த பாதுகாப்பு படை அதிகாரி தேனியைச் சேர்ந்த தமிழர் திரு. மதன் என்பவர். அவர் எங்களிடம் Gate No 5 க்கு நேரே சென்று விடுங்கள் என்று கூறினார். நாங்கள் எங்கள் கைப்பைகளையும், காலணிகளையும் பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்து, பின் வாயில் எண் 5 க்குச் சென்றோம். அது V.I.P. நுழைவாயில். அதனால் தரிசனம் அற்புதமாக கிடைக்கப்பெற்றோம். முதல்

குகையில் அழகிய அம்மனைத் தரிசித்து, அடுத்த குகையில் முன்காலத்திலிருந்த மூன்று கற்களாக இருக்கும் அம்மனையும் தரிசித்து வெளியேறி, கேபிள் கார் நுழைவுச்சீட்டு வாங்கி, கேபிள் கார் மூலம் பைரவர் கோயிலை அடைந்தோம். மலையேறி கருவறை அடைந்து பைரவரைத் தரிசித்து, வைஷ்ணவிதேவி வந்து டோலியில் கீழே இறங்கினோம். இந்த யாத்திரையில் இக் கோவிலில் மட்டும் தான் விபூதி பிரசாதமும், ஒரு வைஷ்ணவிதேவி காசும் பிரசாதமாக கிடைத்தது. டோலி தூக்கியர்களில் சிலர் மிகவும் உதவியாக இருந்ததைக் குறிப்பிட்டேயாக வேண்டும். ஒருவர் வழிகாட்டியாக எங்களுடன் அனைத்து சந்நிதிகளுக்கும், பைரவர் கோவிலுக்கும் வந்தார். ஓரிருவர் வயதான எங்களை கைப்பிடித்து மேலே ஏற உதவினர். கீழே வரும்போது எனது டோலிக்காரர்கள் அர்த்தகுவாரி குகையை கீழிருந்து காட்டினர். பின் அம்மனின் பாதக்கமலங்கள் இருந்த ஒரு கோவிலைத் தரிசனம் செய்வித்தனர். பின் கீழிறங்கி தங்கியிருந்த விடுதியை அடைந்தோம்.

மறுநாள் காலை ஸ்ரீநகர் பயணம், வழியில் இரண்டு மணி நேரம் எங்கள் பயணம் மலைச்சரிவினால் தடைப்பட, மாலை சுமார் 6 மணிக்கு ஸ்ரீ நகரில் பந்தாசதுக்கம் எனுமிடத்தில் இறங்கி, இரு சிற்றுந்துகள் மூலம் ஹோட்டலை அடைந்தோம். எங்கள் பெட்டிகள் இரவு 8 மணிக்கு மேல் ஹோட்டலை அடைந்தது. நேரமிருந்தும் ஹோட்டல் பொறுப்பாளர்கள் எங்களைப்பாதுகாப்பு கருதி வெளியே வரவே அனுமதிக்கவில்லை. காலையில் அருகில் இருந்த தால் லேக் சென்று ஷிகாரா எனும் ஓடத்தில் ஏரியை இரண்டு மணி நேரங்கள் சுற்றி வந்தோம். ஒரு படகிற்கு 5 பேர், நபருக்கு Rs. 500/- படகிலிருந்தபடியே ஆறு இடங்கள் காண்பிப்போம் எனக்கூறி, Golden Lake, Gulfaam Lake, Nehru Park எனும் ஒரு சிறிய பூங்கா, Open Dal Sonovan (Bollywood Movies எடுக்கப்பட்ட படகு வீடுகள் சுற்றிலும்) Floating Market, Vegetable Land, Floating Land (நர்கெட் என்னும் புல் வளருமிடம், ஓலைச்சுவடிகளாக அக்காலத்தில்

பயன்படுத்திய புல்), மீனா பஜார் என காண்பித்தனர். நடுவில் ஒரு துணிக்கடையிலும், ஒரு உலர்கனி, குங்குமப்பூ வாங்கவென ஒரு கடையிலும் நிறுத்தினர். ஏரியில் இருந்து திரும்பி, சரஸ்வதி அம்மன் கோவில் சென்றோம். சுமார் 80 படிகள் ஏற வேண்டும். சுயம்பு அம்மன், அம்மன் உருவம் இல்லை. ஒரு பாறையாக செந்தூரம் பூசப்பட்டு இருந்தது. அருகிலிருந்த படிகளில் ஏறி அம்மனைச் சுற்றி வர முடிந்தது. மதியம் ஆதி சங்கராச்சாரியார் கோவிலுக்குச் சென்றோம். சிற்றுந்து நின்ற இடத்திலிருந்து நிறைய ஏற்றத்தில் நடக்க வேண்டி இருந்ததுடன், அடிவாரத்திலிருந்து 243 படிகள் ஏற வேண்டும் என அங்கிருந்த கேரளாவைச் சேர்ந்த ஒரு பாதுகாப்பு படைவீரர் கூறியதால், எங்களில் சிலர் ஏறுவதைத் தவிர்த்து கீழே இருந்த நாற்காலிகளில் தஞ்சம் புகுந்தோம். மலையின் மீது ஒரு பெரிய சிவலிங்கமும், சிறிது கீழே இறங்கினால் ஒரு குகையில் ஆதிசங்கரரின் படமும் இருந்ததாக கூறினர். பின் இந்திராகாந்தி நினைவுப் பூங்கா (Tulip Garden) காண மிகுந்த ஆசையுடன் சென்றோம். 24 ரூபாய் நுழைவுச்சீட்டு வாங்கி உள்ளே நுழைந்தால் எண்ண ஒரு ஏமாற்றம்;. மார்ச் 25–ஆம் தேதிதான் Tulip Garden திறக்கப்படும் என்றனர். அதனால் சிறிது நேரம் பூங்காவில் சுற்றி விட்டு, பின் ஷாலிமர் / மொகல் பூங்கா சென்றோம். அங்கும் நுழைவுச்சீட்டு Rs 24 இப்பூங்காவில் சில பல மலர்களும், நீருற்றுகளும் கண்டு ரசித்தோம். பின் ஹோட்டலுக்குத் திரும்பினோம். அடுத்த நாள் காலை குல்மார்க் பயணம். ஆறடி உயர பனிப் போர்வை. வயதானாலும் நம்மை அறியாமல் ஒரு குதூகலம்! அதில் ஸ்லெட்ஜில் அமர்ந்து ஒருவருக்கு பின்னால் ஒருவர் உதவி செய்ய, பனிமுகட்டில் மேலும், கீழும் அவ்வண்டி ஏறி இறங்க பயணம் செய்து ரசித்தோம். அங்கும் அப்பனிப் போர்வையில், Khlanmarg, Golf course (கோடையில்) Igloo House, Monkey Hill, Straw Berry Vallay (கோடையில்) டோக்ரா அரசர்களின் குலக் கோவிலான சிவன் கோவில் ஆகியவற்றைக் காண்பித்தனர். அக்கோவிலுக்குச் செங்குத்தான படிகள் ஏற வேண்டுமென்பதால், நாங்கள் யாருமே முயற்சிக்கவில்லை. மாலை ஸ்ரீ நகர் திரும்பி, கடைகளில் சிறிது ஏறி, இறங்கி ஓய்வு எடுக்கச் சென்றதுடன் படிக்கும் உங்களுக்கும் ஒரு மாத ஓய்வு! இக்கட்டுரையின் தலைப்புக்குள் அடுத்த பாகத்தில் தான் நுழைகிறோம்.

– (பயணம் தொடரும்)

திருமதி. வனஜா இளங்கோவன்.
6369291286

SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRASEKAR, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

CS TEXTILE PROCESS

Office : NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : www.cstextiles.in
Email : chitra@cstextiles.in
Factory : Kasipalayam, Tirupur
Our Buyers : 1. FILA (UK)
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. LIFESTYLE (INDIA)

"QUALITY IS OUR LIFE"

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/6 செல்வி **பா. திவ்யா** மூலம் 2ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : சாத்துக்கூடல் விருப்பம் : பொருத்தமான வரன்.	14.12.93	B.E., C.S.,	Accenture, Chennai	திரு. S. பாலகிருஷ்ணன், வடக்குத் தெரு, சாத்துக்கூடல் அஞ்சல், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம் – 606 110. Cell : 99529 20903
B 2/6 செல்வி **S.S. அஸ்வினி** அஸ்வினி வானதரிய பூர்வீகம் : சூரியனார் கோவில் விருப்பம் : சமபடிப்பு, வேலையில் உள்ள வரன்	13.08.98 5'	B.Tech., (CSE)	Infosys	திரு. S. சரவணன், B1, சந்தன மரவீதி, வட்டம்–9, நெய்வேலி – 607 801. Cell : 94435 39979, 86374 34170
B 3/6 செல்வி **S. நிவேதிதா** கேட்டை பருவுட பூர்வீகம் : மயிலாடுதுறை	06.04.99 168 cm	M.C.A.,		திரு. S. செந்தில்வேலன், No. 2, தெற்கு வீதி, திருவிழந்தூர், மயிலாடுதுறை – 609 001. Cell : 75981 79139
B 4/6 செல்வி **Dr. க. சேது பாரதி** கார்த்திகை முதல் பாதம் பருவுட பூர்வீகம் : அங்கராயநல்லூர் விருப்பம் : மருத்துவதுறை சார்ந்த வரன்.	05.12.95 170 cm	B.D.S.,	பல் மருத்துவர் தனியார் மருத்தவமனை	திரு. சி. கண்ணன், B1, Door No. A36/7, 4வது தெரு, இந்து காலனி, நங்கநல்லூர், சென்னை – 600 061. Cell : 94456 02832
B 5/6 செல்வி **M. கிருத்திகா** விசாகம் தென்னைபிரிய பூர்வீகம் : இறையூர் விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்	12.11.85 5' - 5"	B.Com.,	Accounts	திரு. T. முத்துக்கிருஷ்ணன், A3/L, உதயலட்சுமி அபார்ட்மெண்ட்ஸ், ராகவேந்திரபுரம் 2வது தெரு, ஸ்ரீரங்கம், திருச்சி Cell : 96777 43586
B 6/6 செல்வி **மு. திவ்யபிரியா** கேட்டை 2ம் பாதம் வஞ்சினமுட பூர்வீகம் : செந்துறை – அரியலூர் (Dt.) விருப்பம் : டிகிரி முடித்த நல்ல பணியில் உள்ள வரன்	02.06.96 5' - 4"	B.A. (English)		திரு. ச. முருகேசன் பிள்ளை, 1/53, நடுத் தெரு, வஞ்சினபுரம் (PO), செந்துறை (Tk.) அரியலூர் (Dt.) - 621 714. Cell : 96263 97559, 85319 86109
B 7/6 செல்வி **C. மீனா** புனர்பூசம் பாகம் 2 சாத்துகுட பூர்வீகம் : மாறாக்குறிச்சி, செந்துறை (TK) விருப்பம் : பணியில் உள்ள வரன்	1.11.96 5¼'	MCA.,	I.T. Company Chennai	திரு. சிதம்பரம் பிள்ளை, வடக்குத் தெரு, மாறாக்குறிச்சி, அசுவீரன்குடிகாடு (PO), செந்துறை (TK), அரியலூர் (Dt) – 621 719 Cell : 99432 24864 (W), 78678 33264
B 8/6 செல்வி **R. உமாமகேஸ்வரி** ஆயில்யம் 4ம் பாதம் வஞ்சினமுட பூர்வீகம் : ஓகளூர் விருப்பம் : பணியில் உள்ள வரன்	28.06.98 5' - 8"	B.E. E.C.E.	-	திரு. R. ராஜேந்திரன் பிள்ளை, 1/69, பெருமாள் கோயில் தெரு, ஓகளூர் (PO), குன்னம் (Tk), பெரம்பலூர் (Dt.) - 621 108. Cell : 96553 59610, 91590 47132

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 9/6 செல்வி **V. மகாலக்ஷ்மி** ரோகிணி பெண்ணாகட பூர்வீகம் : கன்னியநத்தம் விருப்பம் : M.B.B.S. மற்றும் M.S. / M.D. படித்த நல்ல வரன்	26.02.96	M.B.B.S. M.D. (General Medicine)		திரு. C. விஜயகுமார், 25, M.G.R. நகர், சாமுண்டிபுரம், திருப்பூர் – 641 603. Cell : 93616 16619, 95666 99442 E-mail : sarasvijay1968@gmail.com
B 10/6 செல்வி **E. இளயாழினி** சித்திரை 2ம் பாதம் அங்கனுட பூர்வீகம் : புத்தகரம்	12.04.98 5' - 4"	B.E. (ECE) MBA	System Engineer, Infosys Ltd.,	திரு. P. இளவழுதி, 400, வெள்ளாளர் தெரு, புத்தகரம், திருவாளப்புத்தூர் (PO), மயிலாடுதுறை – 609 205 Cell : 94421 58482
B 11/6 செல்வி **B.V. அட்சயா** ஆயில்யம் ஷேதரிய பூர்வீகம் : நந்தீஸ்வரமங்கலம் விருப்பம் : சமபடிப்பு, வேலையில் உள்ள வரன்.	11.08.99 5'	B.Tech., Bio Technology	Episource India Pvt. Ltd., Rs. 20,000/PM	திரு. C. வேல்முருகன், நந்தீஸ்வரமங்கலம் (PO), ஸ்ரீமுஷ்ணம் (Tk). Cell : 99762 52642, 93616 06299
B 12/6 செல்வி **மு. வித்யா** ரோகிணி குழுமுட பூர்வீகம் : ந.பூலாமேடு, சிதம்பரம் விருப்பம் : நல்ல பண்புள்ள, படித்த வேலையில் உள்ள வரன்.	05.06.97 155 cm	M.Sc., (Mathematics) B.Ed.,		திரு. முத்து நாராயணன், 11/8, செல்வ விநாயகர் கோவில் தெரு, புது பெருங்களத்தூர், சென்னை– 600 063. Cell : 99652 54653, 98427 60526
B 13/6 செல்வி **தி. மகாலட்சுமி** மகம் 2–ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : சாத்த நத்தம் நடுத் தெரு விருப்பம் : அரசு மற்றும் தனியார் துறையில் வேலையில் உள்ள வரன்.	07.04.98 152 cm	B.E.,		திரு. சொ. திருநாவுக்கரசு பிள்ளை, KCV அரிசி மண்டி, மேற்கு மெயின் ரோடு, பெண்ணாடம் – 606 105. Cell : 94439 53964, 99769 89131
B 14/6 செல்வி **K. ரூபசுவாதிகா** உத்திரட்டாதி செஞ்சிலுட பூர்வீகம் : சி. சாத்தமங்கலம் – சிதம்பரம் (Tk)	20.06.95 162 cm	B.E. (ECE)	Continental Automotive, Bangalore Rs. 11 Lakhs/PA	திரு. K.G. குமாரசாமி, C11, Co-op Bank Road, Block 16, Neyveli - 607 801. Cell : 94420 33990
B 15/6 செல்வி **R. சண்முகப்பிரியா** பரணி வளதரிய பூர்வீகம் : எண்ணநகரம் (சிதம்பரம் அருகில்) விருப்பம் : B.E., M.E., MBA படித்த பணியில் உள்ள வரன்	17.10.97 160 cm	B.Tech. (Civil)	தனியார் நிறுவனம் சென்னை	திரு. N. இரத்தினகுமார், 17, அனந்தீஸ்வரன் கோவில் அக்ரகாரத் தெரு, சிதம்பரம் – 608 001. கடலூர் மாவட்டம். Cell : 70330 92554 / 94429 09915

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 16/6 செல்வி **B. அனுசுயா** அனுஷம் மானுட பூர்வீகம் : இளந்தோப்பு	26.07.96 167 cm	B.E. (E&I)	Transaction Processing Trainer Miramed Ajuba Solutions Pvt. Ltd., Thoraipakkam, Chennai	திரு. S. பாலு, வெள்ளாளர் தெரு, இளந்தோப்பு, மயிலாடுதுறை – 609 201. Cell : 98417 76183
B 17/6 செல்வி **கௌ. ரோஷிணி** ரோஹிணி அரசுடையார் பூர்வீகம் : தஞ்சாவூர் விருப்பம் : Bangalore or Bangaloreக்கு Transfer வசதி உள்ள சமபடிப்பு, நல்ல வேலையில் உள்ள வரன்	16.09.95 154 cm	B.E. (Computer Science) M.Sc., (Cyber Forensics and Information Security	Associate in MNC (Bangalore)	திரு. N.Gowrishankar 14/47, Valluvar Street, Jagannatha Nagar, Arumbakkam, Chennai - 600 106. Cell : 96772 33791 Phone : 044–2363 8284

நட்பு என்பது மறக்க இயலா உறவு

(இலைய. மணி.,
இலையமுதுகூடம்–ச.மணிவண்ணன்
அலைபேசி: (9364488002, 9486355660)

வாழ்வில் ஆணோ, பெண்ணோ, வாழ்வில் ஒரு சிறந்த நட்பு அல்லது எதிரபார்ப்புகள் இல்லாத நண்பர்கள் இருந்தால் என்ன நடக்கும்.... ?????

- தடுமாறும் போதும், தடம்மாறும் போதும் தாங்கிப் பிடித்து கீழே விழாமல் காப்பாற்ற நட்பு தேவை.
- வாழ்வில் விழும் அடிகளை தன் முதுகில் தாங்கிப் பிடிக்க நண்பர்களே வருவார்கள்.
- வாழ்வில் விழும் போதெல்லாம் கை கொடுத்து தூக்கிப் பிடித்து, தோளில் சாய்த்து ஆறுதல் கூற நண்பர்களால் மட்டுமே இயலும்.
- சோர்வுற்றிருக்கும் நிலையில் உற்சாகமாவும், அன்பு காட்டவும் நண்பர்களால் மட்டுமே இயலும்.
- தவறு செய்யும் முன் ஆயுதம் எடுக்காமலே மிரட்டி உருட்டி நம்மை சரியான பாதையில் செலுத்த கட்டாயம் மீசை வளர்க்காவிட்டாலும் முரட்டு நண்பர்கள் தேவை.
- ஊர் உலகை சுற்றி வரவேண்டுமா நல்ல நண்பர்களுடன் செல்லுங்கள். புதியதோர் உலகைக் காட்ட நண்பர்கள் வேண்டும்.
- துன்பம் வரும் நேரத்தில் உங்களை சிரிக்க வைக்க நண்பர்களால் மட்டுமே இயலும். இத்தகைய சூழல்களைக் கடக்க தோணியில் ஏறி வந்து உங்களை கரை சேர்க்க நண்பர்களால் மட்டுமே இயலும்.
- நாம் சொல்வதில் தவறு இருந்தால் களைவதும் நட்பு, வள்ளுவரின் வாக்கின் படி உடுக்கை இழந்தவனின் கையாய் இருப்பதும் நல்ல நட்பு.

எந்த எதிர்பார்ப்புகள் இல்லாமல் கிடைக்கும் இத்தகைய நண்பர்கள் இருந்தால் நீங்கள் எதனை இழந்தாலும் தோல்வியின் கைகள் உங்களை தொட்டுவிட இயலாது. வெற்றி தேவதை வெள்ளை உடையுடுத்தி கையில் கோப்பையுடன் தங்கள் வீட்டுக் காவலில் காத்திருப்பார்.

இத்தகைய நண்பர்கள் ஏற்கனவே இருப்பார்கள். எந்த சூழலிலும் அவர்களை கைவிடாதீர்கள். அவர்களும் உங்களை விட்டு பிரியாமல் இருப்பார்கள்.

இத்தகைய நண்பர்கள் அமையவில்லையே என வருத்தம் கொள்ள வேண்டாம். நீங்கள் மனம் திறந்து கதவை திறந்து வையுங்கள். மேற் சொன்ன எல்லா திறமையும் உள்ள நண்பர்கள் உங்கள் அருகிலேயே இருப்பார்கள்.

நாற்பது ஆண்டுகள் நட்புதான் நட்பு என்பதல்ல. நான்கு நாட்கள் பழகினாலும் நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.

நண்பன் இருந்தால்.... ஒரு நண்பன் இருந்தால்... நல்ல நண்பன் இருந்தால்... உலகமே நம் கையில்....

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/6 செல்வன் **ச. அஜய்குமார்** பூராடம் நன்னுட பூர்வீகம் : 20. மடப்புரம் – மயிலாடுதுறை	15.10.91 175 cm	B.E., E.C.E.,	Senior Application Engineer, D.T. Tech Solutions, Guindy, Chennai Rs. 70,000/PM	திரு. ப. சண்முகம், 1/228B, குறிஞ்சித் தோட்டம், பரசலூர், செம்பனார்கோவில் அஞ்சல், தரங்கம்பாடி வட்டம் – 609 309. Cell : 9442108319, (W) 9176161842
G 2/6 செல்வன் **A. மணிவாசகம்** மகம் விஸ்வராய பூர்வீகம் : பெண்ணாடம்	02.06.96	B.E. (EEE)	Technician, Compass India Support Services (P) Ltd., L&T Info Tech, Chennai	திரு. அரிகிருஷ்ணன், தொளார் (PO), பெண்ணாடம் – 606 105. Cell : 95244 61518, 94815 31781
G 3/6 செல்வன் **கே. மணிவேல்** கேட்டை முதுனுட பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)	15.02.93 6' - 00"	B.E. (EEE),	வணிகவரி துறை	திரு. T. கேசவன், 5/234-2, புதிய அம்பேத்கர் நகர், ஜாகிர் ரெட்டிபட்டி, சேலம் – 636 302. Cell : 94422 59692
G 4/6 செல்வன் **G. விக்னேஷ்வரன்** ரேவதி தனபாலுட விருப்பம் : சமபடிப்பு, பணியிலுள்ள வரன்.	04.06.94 175 cm	B.E. (Mech) Engg. M.E. (INDL) Engg.	Assembly Dept. Manager, HUF Group, Tennessee, USA	திரு. S. கணேசன், No. 12/882, இராமசாமி சாலை, கே.கே. நகர் (மேற்கு), சென்னை – 600 078. Cell : 95001 33229
G5/6 செல்வன் **ஆ. கார்த்திகேயன்** மூலம் 3ம் பாதம் களப்பாள பூர்வீகம் : பெண்ணாடம்	30.10.92 183 cm	B.E. (Mech)	Mechanical Engineer at SECOIII (UAE) Rs. 12 Lakhs/PA	திரு. சபா ஆறுமுகம் பிள்ளை, 69, அக்ரஹார தெரு, பெண்ணாடம் – 606 105. திட்டகுடி TK, Cell : 98944 88227 / 77081 05999
G 6/6 செல்வன் **ர. அருள்செல்வம்** பூரம் காருட பூர்வீகம் : ப. திருமாளம் விருப்பம் : பட்டம் பயின்ற பெண்	06.12.93	B.E. (EEE)	Deputy Manager JSW Steel Ltd., Salem Rs. 8.6 Lakhs/PA	திரு. P. ரகு, 2/132, கீழத் தெரு, ப. திருமாளம் (PO), பூந்தோட்டம் (Via), Cell : 94884 89398, 63747 92562
G 7/6 செல்வன் **தி. அருண்** சுவாதி பாண்டுவராய பூர்வீகம் : மல்லியக்கொல்லை விருப்பம் : U.G. டிகிரி முடித்த வரன்.	26.05.91 5' - 8"	M.E., M.,B.A.,	Lecturer, Elumalaiyan Polytechnic College Kollumangudi Rs. 1,50,000/PA	திரு. M. திருஞானசம்பந்தம், பிளாட் நெ. 10, முதலாவது குறுக்குத் தெரு (கிழக்கு), வலம்புரி நகர், மயிலாடுதுறை – 609 001. Cell : 94438 54127
G 8/6 செல்வன் **கு. ஹரிஹரன்** புனர்பூசம் 2ம் பாதம் விளந்துட பூர்வீகம் : இருக்கை– நாகப்பட்டிணம் விருப்பம் : பணியில் உள்ள வரன்.	09.10.93 178 cm	MCA.,	TCS, Chennai Rs. 7.8 Lakhs/PA	திரு. சி. குமரவேல், 1/80, தெற்குத் தெரு, இருக்கை, வடுகச்சேரி (அஞ்சல்), கீழ்வேளூர் வட்டம் நாகப்பட்டிணம் – 611 109. Cell : 93445 18764, 90423 39175

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/6 செல்வன் **S. குருபிரசாத்** அவிட்டம் 4–ஆம் பாதம் சேமங்கலுட பூர்வீகம் : கொழையூர் விருப்பம் : வேலையில் உள்ள வேலைக்கு செல்ல விருப்பமுள்ள பட்டதாரி பெண்.	03.03.92 180 cm	B.E., (EEE) Diploma in I.S	Safety Engineer (MESC LLC) UAE	திரு. Dr. K. செந்தில்நாயகம், 3/84, மெயின் ரோடு, மூங்கில் தோட்டம், மன்னம்பந்தல் (PO), மயிலாடுதுறை, Cell : 96987 64709
G 10/6 செல்வன் **M. யுவராஜன்** கேட்டை பருவுட பூர்வீகம் : பாங்கல் விருப்பம் : சமபடிப்பு, வேலைக்கு செல்லும் நல்ல குணம் உள்ள பெண்.	02.06.96 5' - 11"	B.E.,	HCL, Chennai Rs. 4.25 Lakhs /PA	திரு. G. மதியரசன், 12, அவையாம்பாள்புரம், மயிலாடுதுறை – 609 001. Cell : 89402 48709
G 11/6 செல்வன் **S. ராம்நாத்** பூசம் கேதுவராய பூர்வீகம் : நாஞ்சலூர் விருப்பம் : வேலை பார்க்கும் வரன்.	17.01.95 5'- 11"	Dip. Automobile	TVS Showroom, Bangalore	திரு. சிவக்குமார், 120, விநாயகர் கோவில் தெரு, Dr. அம்பேத்கார் நகர், St. தாமஸ் மவுண்ட், சென்னை – 600 016. Cell : 92832 75524
G 12/6 செல்வன் **R. வேல்முருகன்** விசாகம் வங்காரமுட பூர்வீகம் : பின்னலூர்–கடலூர் மாவட்டம்	22.03.83 5' - 3'	M.Com,	தனியார் நிறுவனம் நெய்வேலி Rs. 3.5 Lakhs/PA	திரு. R. ஞானதேசிகன், 10/37, திருநகர் முதல் மெயின் ரோடு, ஓமக்குளம் அருகில், சிதம்பரம் – 608 001. Cell : 76396 85457
G 13/6 செல்வன் **அ. சாரதிராஜன்** பூசம் பிராங்குட பூர்வீகம் : கொத்தவாசல் விருப்பம் : சமபடிப்பு	23.11.94 180 cm	B.E. (EEE)	Integreon Managed Solutions, Mumbai, Rs. 4,80,000/PA	திரு. R. அசோகன், 119, கம்பர் சாலை, சிவஜோதி நகர், சிதம்பரம் – 608 001. Cell : 94429 82700, 89032 82700
G 14/6 செல்வன் **G. சுந்தரேசன்** மிருகசீரிடம் 2ம் பாதம் வேளா பூர்வீகம் : கொண்டத்தூர் விருப்பம் : நல்ல குணமுள்ள வரன்.	03.05.95 160 cm	B.E. (Mech)	Business விநாயகம் ஸ்டோர்ஸ் ஸ்டேஷனரி, ஜெராக்ஸ், கேம் சென்டர், மொபைல் சர்வீஸ் பெண்ணாடம் Rs. 20000/PM	திரு. P.G. ராமமூர்த்தி, ராணி மெடிக்கல்ஸ், 150, கடை வீதி, பெண்ணாடம் – 606 105. கடலூர் (DT) Cell : 99761 77910, 91596 54000
G 15/6 செல்வன் **S. சாய்சைலேஷ்** ரேவதி தனவாருட பூர்வீகம் : ஆழ்வார்குறிச்சி – தென்காசி மாவட்டம் விருப்பம் : சென்னையில் பணியில் உள்ள, பணிபுரிய விருப்பமுள்ள பொருத்தமான வரன்.	30.04.92 5' - 7"	B.E. (Mech)	Engineer (HR) Vortex Customer Solutions India Pvt. Ltd. Chennai Rs. 4 Lakhs/PA	திரு. S. சுந்தரம், S2, Arka Camilica Appt., 5th Cross Street, Ambal Nagar, Pallikaranai, Chennai - 600 100. Cell : 94434 28803 (W) 90034 31854 (W)
G 16/6 செல்வன் **B. ஆனந்தன்** ஆயில்யம் 1ம் பாதம் பல்லவராய பூர்வீகம் : திருவாரூர்	29.05.90 176 cm	B.Tech (IT)	Software Development Engineer, Pluribus Networks, Bangalore Rs. 36 Lakhs/PA	திரு. இரா. பாலசுப்பிரமணியன், 22, ஸ்ரீ செஞ்சுடையப்பர் நகர், தனலட்சுமி நகர் (விரிவாக்கம்), ஐந்து தலைப்பு வாய்க்கால், உமாமகேஸ்வரபுரம் – 612 103. Cell : 97867 79505, 96774 61691

90-வது பிறந்த நாள்

மயிலாடுதுறை வட்டம் தலைஞாயிறு வேளா நினைவில் வாழ் சோமு பிள்ளை – பாப்பு அம்மாள் ஆகியோரின் மகனும், எங்கள் தந்தையுமாகிய உயர்திரு. **T.S. தியாகராஜன்** (Co-Operative Audit Officer - Retd) அவர்கள் **21–04–2022** அன்று **90**–வது அகவையை எட்டியுள்ளார் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்த்திய அனைவருக்கும் நன்றி.

என்றும் தங்கள் நல்லாசியுடன்

T. சுப்புலட்சுமி (மனைவி)

மகள்கள் - மருமகன்கள் :

தெய்வத்திருவாளர்கள் **கலா - V. மனோகரன்**

ஹேமா - S. பாலசுப்ரமணியன் – சென்னை–91.

உமா - G. சீனிவாசன் – சென்னை–61.

மகன் - மருமகள் :

T. முருகேஷ் - விஜயலட்சுமி – சென்னை

பேத்திகள் :

M. தீபா– சிங்காரவேலன் – அயர்லாந்து

B. அனிதா - விஷால் – அமெரிக்கா

S. சங்கீதா - சண்முகசுந்தரம் – சென்னை

M. ஷாலினி – சென்னை

பேரன்கள் :

M. வெங்கடேசன் - ராசிதா – சென்னை.

B. மணிகண்டன்-அன்னபூரணி– அமெரிக்கா

S. ஸ்ரீகாந்த் – சென்னை

T.M. லோகேஷ் – சென்னை

கொள்ளு பேரன் - பேத்திகள்

S. கீர்த்தி, S. ஜெயவைகரன், V. மோசிகீரன், M. தாரா, S. சித்தாரா

No. 2, பூம்புகார் தெரு, சிட்லபாக்கம், சென்னை–64. Mobile : 94440 30291

K. சங்கர் - P. விஜயகுமார் இல்லத் திருமண விழா

தெய்வத்திரு. கனகசபை பிள்ளை – திருமதி. நாகலட்சுமி மற்றும் திரு.தியாகராஜன் – திருமதி. சுமதி ஆகியோரின் பேரனும் திரு. K. சங்கர் – திருமதி. S. உமாமஹேஸ்வரி அவர்களின் மகனுமாகிய திருநிறைச்செல்வன் **S. ஆனந்த கனகராஜ்**, B.Tech., M.Sக்கும், தெய்வத்திரு. பழனியப்பபிள்ளை – திருமதி. ஜானகி மற்றும் திரு. ராமகிருஷ்ணபிள்ளை – திருமதி. மணிமேகலை ஆகியோரின் பேத்தியும் திரு. P. விஜயகுமார் – திருமதி. V. சுபஸ்ரீ அவர்களின் மகளுமாகிய திருநிறைச்செல்வி **V. மேஹவர்தினி,** B. Tech., M.S. க்கும் எல்லாம் வல்ல இறைவன் அருளால் கடந்த **15.04.2022** அன்று அமெரிக்காவில், California, San Jose, Silver Creek Valley Country Club- ல் திருமணம் சிறப்புற நடைபெற்றது. அத்திருமணத்திற்கு வந்திருந்து வாழ்த்திய உறவினர்களுக்கும், நேரடி ஒளிபரப்பின் மூலம் திருமண நிகழ்வை கண்டு வாழ்த்திய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. **K. சங்கர்**

திருமதி. **S . உமாமஹேஸ்வரி**

திரு. **P. விஜயகுமார்**

திருமதி. **V. சுபஸ்ரீ**

சதாபிஷேக விழா தம்பதியர் வாழ்க

விழா தம்பதியர் : திருமிகு. **ஏ.ஆர். சுவாமிநாதன்** - திருமதி. **எஸ்.சுசீலா அம்மாள்**

03.06.2001ல் ராஜ் TV யில் உழைப்பால் உயர்ந்த உத்தமர் என்ற விருது A.R.S.அவர்கள் பெற்றார்.

ஏக்கருக்கு 100 டன் கரும்பு வெட்டியதற்காக நகர பண்பாட்டு கழகத்திடம் விருது A.R.S.அவர்கள் பெற்றார்.

ஏ.ஆர்.சுவாமிநாதன் அவர்கள் விவசாயம் மட்டுமின்றி, விவசாயத்தோடு தொடர்புடைய செந்தில் பைப்ஸ் & எலக்ட்ரிக்கல்ஸ் என்ற நிறுவனம் தொடங்கி எதிர்மறையாக கருத்துச் சொன்னவர்களுக்கு மத்தியில் நேர்மறை எண்ணத்துடன் நேர்மையான உழைப்புடன் வணிகத்தில் ஈடுபட்டு - எங்களையும் ஈடுபடுத்தி இனிதே வளர்த்த எங்களின் பெற்றோரை வணங்கி மகிழ்கின்றோம். குறிப்பாக எங்கள் தந்தையை வணங்கி மகிழ்கிறோம். ஆண்டாஞ்சேரியில் வேரென விவசாயம் இருப்பினும் மயிலாடுதுறையில் விருட்சமாய் வாணிபம் வளர்ந்திருக்கும் நிலையை எண்ணி பெருமகிழ்வும், பேருவுவகையும் அடைகின்றோம். இந்த வெற்றிக்குப் பின்னால் எங்கள் தந்தையின் கடின முயற்சி, கறை படாத சிந்தனை கலங்காத உள்ளம், காலத்தில் முடிவெடுத்தல் கருணை உள்ளம், கனிவான வார்த்தை ஆடம்பரம் இல்லாத வாழ்க்கை அத்துணையும் மொத்தமாய் அடங்கி இருக்கிறது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். எங்கள் தந்தை ஏ.ஆர்.சுவாமிநாதன் - எஸ்.சுசீலா அம்மாள் அவர்களின் - அகவை எண்பதின் நிறைவு விழாவிற்கு (சதாபிஷேக விழா) வருகைபுரிந்து சிறப்பித்து வாழ்த்திய அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி !!!

நன்றியுடன்

Lion.A.R.S.மதியழகன் - சத்யா
G.சிவராம் - அபிநயா
S. ஆதிரன்
செல் : 9842422460

செந்தில்பைப்ஸ்,
மயிலாடுதுறை

A.R.S.செந்தில்குமார் - கலைவாணி
S.கார்த்திகேயன் - நிவேதா
செல் : 9965522460

வாழ்க மணமக்கள் ....

மயிலாடுதுறை ஆண்டாஞ்சேரி திரு.A.R.சுவாமிநாதன் - திருமதி.S.சுசீலா மற்றும் மயிலாடுதுறை புத்தகரம் திரு.G.இராமச்சந்திரன்-திருமதி R.சிவகாமசுந்தரி இவர்களின் பெயரனும் A.R.S.செந்தில்குமார் - கலைவாணி இவர்களின் அன்பு குமாரர் **S.கார்த்திகேயன்** B.E., M.S. சென்னை, பெரும்பாக்கம், தெய்வத்திருவாளர்கள் முருகேசன் - கஜாம்பாள், தெய்வத்திரு. வேதாச்சலம் - திருமதி. மீராபாய் இவர்களின் பெயர்த்தியும் திரு.M.சுவாமிநாதன் - திருமதி.ஷகிலா இவர்களின் அன்பு மகளுமாகிய திருவளர்செல்வி.S.**நிவேதா** B.E., M.S., இவர்களின் **திருமண வரவேற்பு 01.04.2022 வெள்ளிக்கிழமை** மயிலாடுதுறை, சிக்னேச்சர் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. வரவேற்பு விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பித்த திரு.A.M.விக்ரமராஜா (மாநில தலைவர் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு) அவர்களுக்கும்,மாவட்ட தலைவர் திரு.A. தமிழ்ச்செல்வன் (ATS) அவர்களுக்கும், மாவட்ட செயலர் திரு.D. நவநீதம் அவர்களுக்கும் மாவட்ட செய்தி தொடர்பாளர் திரு. V. குணசேகரன் அவர்களுக்கும் மயிலாடுதுறை வணிக பெருமக்களுக்கும், உறவினர்களுக்கும், கார்குல நண்பர்களுக்கும் மற்றும் சிறப்பாக சேவை செய்த சங்க பொறுப்பாளர்களுக்கும் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றியுடன்

Lion.A.R.S.**மதியழகன்- சத்யா**
G.**சிவராம் - அபிநயா**
S. **ஆதிரன்**
செல் : 9842422460

செந்தில்ஸ்பைஸ் & எலக்ட்ரிக்கல்ஸ்,
மயிலாடுதுறை

A.R.S.**செந்தில்குமார்**
கலைவாணி செந்தில்குமார்
செல் : 9965522460

மணமகன் தேவை

பெயர்	செல்வி **ப. திவ்யபாரதி**
படிப்பு	M.Arch.,
வேலை	Working in Private Company as an Architect
பிறந்த தேதி	07.05.1995
நட்சத்திரம்	பூசம்
கோத்திரம்	அங்கனுட
பூர்வீகம்	புதுத்துறை, சீர்காழி
தகப்பனார்	**ச. பரிமேலழகன்,** B.Sc., FCA Chartered Accountant, Chennai
தாயார்	Late **இரா. பூங்கோதை,** B.Sc., B.Ed.,
முகவரி	24, கற்பக விநாயகர் தெரு, திட்டை ரோடு, சீர்காழி Cell : 94883 77678, 93455 34682
குறிப்பு	சட்டப்படி விவாகரத்து ஆனவர்
விருப்பம்	சமகல்வித் தகுதி உள்ள மற்றும் தகுந்த வேலையில் உள்ள வரன். வயது வித்தியாசம் ஐந்து ஆண்டுகளுக்கு மிகாமல்.

பெயர்	செல்வி **பிரியதர்சினி R.**
படிப்பு	B.E. (EEE)
வேலை	Software Professional at IBM Rs. 13.4 Lakhs / PA + Variable Pay
பிறந்த தேதி	10.11.1994
உயரம்	162 cm
நட்சத்திரம்	அவிட்டம்
கோத்திரம்	பூவணுட
பூர்வீகம்	இளநாங்கூர்
தகப்பனார்	**இராமநாதன் K.,** Retd. Aavin Employee
தாயார்	**மலர்விழி R.,** House Wife (சென்னை)
முகவரி	49/24, Sabari Sastha Kudil, Thirupattan Street, Chidambaram. Cell : +91 94430 73951
குறிப்பு	லக்னத்தில் கேது, 7–ல் இராகு உள்ளது.

மணமகன் தேவை

பெயர்	செல்வி **இரா. ஸ்ரீநிதி**
படிப்பு	B.Sc. (DLAN), M.L.I.S.,
பிறந்த தேதி	21.02.1998
உயரம்	158 cm
நட்சத்திரம்	மூலம் 2 பாகம்
கோத்திரம்	கூடலுட
பூர்வீகம்	கூடலூர், திட்டக்குடி (TK)
தகப்பனார்	**வே. இராமலிங்கம்**
தாயார்	**தையல் நாயகி (எ) திவ்யா**
முகவரி	190/113, கங்கை வீதி, பெரியார் நகர் (வடக்கு), விருத்தாசலம் – 606 001. கடலூர் மாவட்டம் Cell : 94863 88299, 94880 12833

பெயர்	செல்வி **மோ. அபிநயா**
படிப்பு	B.E. (EEE)
வேலை	Production Editor Sinjore Technologies, Thanjavur.
பிறந்த தேதி	21.09.1995
உயரம்	5' - 4"
நட்சத்திரம்	ஆயில்யம் 3–ம் பாதம்
கோத்திரம்	சணமுடை
பூர்வீகம்	உடையார் பாளையம்
தகப்பனார்	**கோ. மோகன் பிள்ளை**
தாயார்	**மோ. மலர்கொடி** (திருநாரையூர்)
முகவரி	A/2, சீத்தா நகர், சிவாஜி நகர் வழி, தஞ்சாவூர் – 613 001. Cell : 94424 75666, 94424 75777
விருப்பம்	சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன்.

வாழ்த்துகிறோம்

கலியுக கர்ணன்,
கார்குல வள்ளல்,
கல்வி கடவுள்,
எங்களை வாழ வைக்கும்
தெய்வத்திற்கு இன்று
(20.06.2022) 77வது
பிறந்த நாள் வாழ்த்துக்கள்

வாழ்த்தும் நெஞ்சங்கள்
காவனூர் **சி. தாண்டவமூர்த்தி,**
பூமதி மற்றும் **குடும்பத்தினர்கள்**

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
31–05–1949

மறைவு :
16–05–2022

தி.ச. பாலசுப்ரமணியன்

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருள் நகரில் வசிக்கின்ற திருமதி. பா. பிரேமா அவர்களின் கணவரும் எங்களது தந்தையாருமாகிய திரு. **தி.ச. பாலசுப்ரமணியன்** அவர்கள் 16–05–2022 திங்கட்கிழமை அன்று சிவலோக பிராப்தி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

சகோதர - சகோதரிகள்

ச. கற்பகவிநாயகம் - க. விஜயகுமாரி

ந. கனிமொழி - நடராஜன்

ச. சண்முகநாதன் - ச. தேன்மொழி

சீ. மங்கையர்க்கரசி - சி. சீனிவாசன்

அ. சிவகாமசுந்தரி - அன்பழகன்

ம. தையல் நாயகி - மணிவாசகம்

மனைவி

பா. பிரேமா

மகன் - மகள்

பா. கௌதமன் - கௌ. காயத்ரி

பா. பாலப்ரியா - நா. ராஜகணேஷ்

பேரன் பேத்தி

கௌ. கருண் ரா. அனன்யாஸ்ரீ

கனவு நனவாகியது !

Dr. Prof. T. சீனிவாசன். Mobile : 9442524543

மயிலாடுதுறையில் A.V.C. கல்லூரி மிகவும் பிரசித்திப் பெற்றது. 2022 கல்வி ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழு நிபுணர்கள் வருகை தந்து Grade 'A plus' status A.V.C. கல்லூரிக்கு வழங்கியது அறிந்து மிகவும் மகிழ்ச்சியுற்றேன். வருகை தந்த நிபுணர்கள் வணிகவியல் துறையின் வளர்ச்சி கண்டு மிகவும் பாராட்டினார்கள் என்பதை அறிந்தேன்.

என் எண்ணங்கள், நான் A.V.C. வணிகவியல் துறையில் பணியாற்றிய கால நிகழ்வுகளை நோக்கி (பின் நோக்கி) சென்றன. கல்வி ஆண்டு 1968–இல் வணிகவியல் துறை ஆரம்பிக்கப்பட்டது. நான் ஜூன் 1969–ல் வணிகவியல் துறை விரிவுரையாளராக பணியில் சேர்ந்தேன். மே மாதம் 1998–இல் பணி நிறைவு பெற்றேன். அதில் ஆறு ஆண்டுகள் வணிகவியல் துறைத் தலைவராக பணியாற்றினேன். இத்துறையில் முனைவர் (Ph.D) பட்டப்படிப்பு துவங்க வேண்டும் என்பது என் கனவு, அதற்கு தேவையான முயற்சியில் ஈடுபட்டேன். தேசிய அளவில் கருத்தரங்குகள் நடத்தினேன். தரமான இதழ்களில் (Standard Journals) ஆராய்ச்சி கட்டுரைகள், சக ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் வெளியிட்டேன். பல்கலைக்கழக மானியக்குழு நிதியுதவி வழங்கியது. வணிகவியல் துறை கணினி மயமாகியது!!

வணிகவியல் துறையின் சாதனை அடிப்படையில் முனைவர் பட்டப்படிப்பு (Full time / Part TIme) பல்கலைக்கழக மானியக்குழு வழங்கி அனுமதி அளித்தது.

பல்கலைக்கழக மானியக்குழு A.V.C. கல்லூரிக்கு 'தன்னாட்சி' வழங்கியது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி B.Com., பட்டப்படிப்பில் மொழிப் பாடத்திற்கான 2 தாள்கள் பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே வணிகவியல் துறை பாடமான மாற்றினேன். 'வாணிபத் தமிழ்' என்று ஒரு தாளும், 'வருமான வரி சட்டமும் செயல்முறையும்' (Income-tax Law & Practice) என்றொரு தாளும் வணிகவியல் துறையே நடத்தும்படி மாற்றி அமைத்தேன். தமிழகத்தில் உள்ள மற்ற கல்லூரி வணிகவியல் துறை சார்ந்த பேராசிரியர்கள் – இச்சாதனையை 'ஒரு துணிச்சலான முடிவு' என்று பாராட்டினார்கள்.

என் பணிக்காலத்தில் பலர் முனைவர் பட்டம் பெற்று மற்ற கல்லூரிகளில் முதல்வராக பணியாற்றுகிறார்கள் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியுற்றேன். வணிகவியல் துறை, ஆராய்ச்சி துறையில் A.V.C. கல்லூரி வரலாற்றில் முதன்மை இடத்தை அடைந்தது. 2022– ம் கல்வி ஆண்டு A.V.C. கல்லூரிக்கு "A Plus" Grade Status பல்கலைக்கழக மானியக்குழு வழங்கியது அறிந்து மிகுந்த மகிழ்ச்சியுற்றேன். முனைவர் பட்டம் பட்டியலின் எண்ணிக்கை 73 என்று அறிந்தேன். ஆராய்ச்சி துறையில் வணிகவியல் துறையில் முதன்மை இடத்தை பெற்றது மூலம் என் வாழ்நாளின் கனவு நனவாகியது.

சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**
தொ.பேசி: 044–26532182
Email: thiagu1943@gmail.com

சோம்பல் எல்லாவற்றையும் கடினமாக்கும், சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிமையாக்கும்.

வெற்றியே உங்கள் குறிக்கோள்!

உலகப் புகழ்பெற்ற கூடைப்பந்தாட்ட வீரர் மைக்கேல் ஜோர்டான் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்! அவர் பள்ளிக்கூடத்தில் கூடைப் பந்தாட்டத்தில் விளையாடத் தகுதியில்லாதவர் என்று நிராகரிக்கப்பட்டவர். அவர் அப்போது சோர்ந்திருந்தால் உலகுக்கு மிகப்பெரிய கூடைப்பந்தாட்ட வீரர் கிடைத்திருக்கமாட்டார். ஐன்ஸ்டின் அவரது ஆசிரியரால் மண்டு என ஆசீர்வதிக்கப்பட்டவர். சாமர்த்தியம் போதாது என்று பிராகிரஸ் ரிபோர்ட் குறிப்புடன் பள்ளியிலிருந்து வெளியேற்றபட்டார். ஐன்ஸ்டின் அப்போதே கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்திருந்தால் உலகம் மாபெரும் விஞ்ஞானியை இழந்திருக்கும். கார்தொழிற்சாலையை நிர்மானிப்பதற்கு முன்பாக ஹோண்டா ஒரு சாதாரண மனிதர். கார்களுக்குப் பயன்படுத்தப்படும் பிஸ்டன்களை புதிய முறையில் வடிவமைத்தார். அப்பிஸ்டனை எடுத்துக்கொண்டு போய் டயோட்டா கார் கம்பெனியை அணுகினார். அக்கம்பெனியின் இன்ஜினியர்கள் ஆரம்பத்தில் ஹோண்டாவைப் பார்க்காமலேயே வெளியே அனுப்பிவிட்டார்கள். டயோட்டா கம்பெனி இன்ஜினியர்கள் ஹோண்டாவைப் பார்த்து கேலிசெய்தார்கள். ஹோண்டா வெறுத்துப் போய் ஓய்ந்துவிடவில்லை. தனது பிஸ்ட்டனின் தனித்தனிமையை சளைக்காமல் விளக்கினார். சில வருடங்களில் பிஸ்டன் செய்து தர டயோட்டாவின் ஆர்டரே கிடைத்தது. ஹோண்டா தனது பொருள், பணம், அறிவு, உழைப்பு என்று அத்தனையையும் மூலதனமாகப் போட்டு பிஸ்டன் தயாரிக்கும் கம்பெனியைத் துவங்கினார். தொழிற்சாலை பணி முடிவடையும் சமயம் ஜப்பானில் நில நடுக்கம் ஏற்பட்டு ஹோண்டா தொழிற்சாலை தரைமட்டமாகியது. ஆனால் ஹோண்டா நம்பிக்கை சிதறவில்லை! அவர் மீண்டும் தொழிற்சாலை அமைக்கும் பணியை ஆரம்பித்தார். தொழிற்சாலை அமைத்து இதோ அடுத்தவாரம் உற்பத்தி துவங்கிவிடும் என்ற நிலையில் இரண்டாம் உலகப்போர் ஆரம்பமானது. எதிரி வீசிய குண்டுகளால் ஜப்பான் நாடே உடைந்து சிதறிய இடிபாடுகளுக்குள் சிக்கி ஹோண்டா தொழிற்சாலை தவிடு பொடியாகியது. ஹோண்டா தனது தொழிற்சாலை, சொத்து, நண்பர்கள் என்று பலவற்றை இழந்தாலும் தன்னம்பிக்கையை மட்டும் இழக்கவில்லை. தொடர்ந்து போராடினார். மூன்றாவது முறையாகத் தொழிற்சாலையை நிர்மானித்தார். இன்று உலகம் முழுதும் பரபரப்பாக விற்பனையாகிக்கொண்டிருக்கும் ஹோண்டா கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் பற்றி அனைவருக்கும் தெரியும். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாட்டு கார் கம்பெனிகளை கதிகலங்கவைத்துக் கொண்டிருக்கின்றன.

நம்மில் பலர், சின்ன சின்ன சோதனைகள் வந்தாலே வாடி வதங்கி விடுகின்றோம். பிரச்சனைகள் வந்தால் பின்வாங்கி விடுகின்றோம். ஹோண்டாவை உங்கள் மனக்கண்முன் நிறுத்துங்கள். வெற்றியை அடைந்தே தீருவது என்ற எண்ணம் தீ போன்று உங்கள் உள்ளத்துள் கனன்று கொண்டே இருக்கட்டும். தீ அணைய அனுமதியாதீர்கள்! வெற்றி எனும் மலை உச்சியை அடையவேண்டுமாயின் கல்,முள்,காட்டு விலங்குகள், கடுங்குளிர், பனிமழை என்று நிறைய இடற்பாடுகள் வருவது இயற்கை! இவற்றுக்காக மனம் தளர்ந்துவிடாது. நீங்கள் துவங்கும் எக்காரியத்திலும் வெற்றி என்பதே உங்களது இலக்காக இருக்கட்டும்.

கணிதப்புதிர்:



1. ஒருவனிடமிருந்த பணத்தில் ஐந்தில் மூன்று பாகத்தை செலவழித்த பிறகு 8 ரூபாய் மிஞ்சியது. அப்படியென்றால் அவனிடம் இருந்த பணம் எவ்வளவு?

2. கடிகாரத்தில் சின்னமுள் பெரிய முள் என்று இரண்டு உள்ளதல்லவா? அவை 24 மணி நேரத்தில் ஒன்றையொன்று எவ்வளவு முறை கடந்து செல்லும்?

திருக்குறள்

சொல்லுக சொல்லின் பயன் உடைய, சொல்லற்க
சொல்லின் பயன் இலாச் சொல்.

ஒருவன் தனக்கும் பிறர்க்கும் பயன் தரத்தக்க சொற்களையே பேச வேண்டும். பயன் தராத சொற்களைப் பேசுதல் தவிர்த்தல் வேண்டும்.

கடி ஜோஸ்

1. ஒரு பூனைக்கு முன்னால் பாலும் இருக்கிறது எலியும் இருக்கிறது என்றால் பூனையின் கண் எதன் மீது இருக்கும் ?
2. டைனிங்டேபிள் ஏன் வெட்கப்படுகிறது ?
3. தயிர் ஏன் வெள்ளையாக இருக்கிறது ?
4. மீசை நரைப்பதற்கு முன்பே தலை மயிர் நரைத்து விடுகிறதே ஏன் ?
5. நீங்க ஒரு புதுக்கவிதை எழுதியிருக்கேன்னு சொன்னீங்க. எதை வைச்சு ?

ஒரு பந்தயம்

ஒரு சிப்பாயை மற்றொரு முகாமிற்கு மாற்றினார்கள்.அவனது அதிகாரி அவனிடம் ஒரு கடிதம் கொடுத்தனுப்பினார். கடமை தவறாதவன் ஆனால் பந்தயம் கட்டுவது தான் இவனது பலவீனம் என அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. புதிய முகாமிலிருந்த அதிகாரி அக்கடிதத்தை படித்துவிட்டு இது ரொம்ப கெட்டப்பழக்கம் எதற்கெல்லாம் பந்தயம் கட்டுவாய் ? என்று கேட்டார். எதற்குவேண்டுமானாலும். உங்கள் முதுகில் ஒரு பெரிய மச்சம் இருக்கிறது என்கிறேன். நூறுரூபாய் பந்தயம் என்றான். எனக்கு முதுகில் மச்சம் கிடையாது. நீ பந்தயத்தில் தோற்றுவிட்டாய். வேண்டுமானால் நீயே பார். என்று கூறித் தனது சட்டையை கழற்றிக் காட்டினார். மச்சம் இல்லாது போகவே தான் தோற்றுவிட்டதாக ஒப்புக்கொணடு நூறு ரூபாய் கொடுத்தான்.

புதிய அதிகாரி பழைய அதிகாரிக்கு பெருமையாக கடிதம் எழுதினார். அவனுக்கு சரியான பாடம் கற்பித்துவிட்டேன். இனிமேல் யாரிடமும் பந்தயம் கட்டமாட்டான் என்று நடந்ததை விவரித்திருந்தார். உடனே பதில் வந்தது. நீங்கள்தான் தோற்றுவிட்டீர்கள். புதிய இடத்தில் வேலைக்கு சேர்ந்த அன்றே உங்களுடைய சட்டையை கழற்ற வைப்பதாக என்னிடம் 500ரூபாய் கட்டியிருக்கிறான். வெற்றி அவனுக்குத்தான்.

இவை தெரியுமா?

1. ஈ ல் என்ற கடல் மீன் 600 வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடியது.
2. சப்தமே செய்யாத விலங்கு ஒட்டகச்சிவிங்கி.
3. உடல் எடையில் மூளையின் எடை 3% தான்.
4. சனி என்ற கோள் தண்ணீரில் மிதக்கும் அளவிற்கு எடை குறைவானது.
5. சூரியனின் மையப்பகுதியின் வெப்பம் 1.5 கோடி டிகிரி.
6. இறைச்சியைவிட வேர்க்கடலையில் புரதம் அதிகம்.
7. பின் நோக்கிப் பறக்கும் திறன்கொண்ட பறவை ஹம்மிங் பேர்டு.
8. மிகக்குறைந்த நாள் வாழக்கூடிய பூச்சி ஈசல்.
9. தலைகீழாக நடக்கும் உயிரினம் ஸ்லோத்.
10. எறும்புகளின் கொடுக்கில் உள்ள அமிலம்,ஃபார்மிக் அமிலம்.
11. பாலில் உள்ள அமிலம் லாக்டிக் அமிலம்.
12. மிகச்சிறந்த அறிவுத்திறன் கொண்ட நீர் வாழ் உயிரினம் டால்ஃபின்.
13. யாக் எருமை காணப்படும் நாடு திபெத்.
14. மாலைக்கண் நோயின் மறுபெயர் நிக்டலோப்பியா.

15. யானை தன் காதுகளை அசைத்துக் கொண்டிருப்பதன் காரணம்,தனது உடலின் வெப்ப நிலையை சமப் படுத்துவதற்கு.

விடுகதைகள்

1. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வாலில்லை. இது என்ன ?
2. விரித்த பாயை சுருட்டமுடியாது. இது என்ன ?
3. வெள்ளி ருபாய் துள்ளி விழுகிறது. இது என்ன ?
4. குட்டி போடும். ஆனால் எட்டிப் பறக்கும். இது என்ன ?
5. அறைகளோ ஆயிரம், அத்தனையும் ஒரே அளவு. இது என்ன ?
6. இதயம் போல துடிக்கும், இரவு பகல் விழித்திருக்கும். இது என்ன ?
7. முள்ளுக் கோட்டைக்குள் மோகினி உறங்குகிறாள். இது யார் ?
8. முதுகுமேல் இருப்பது கூடு. முத்தம்மாளுக்கு அது வீடு. இது என்ன ?
9. முட்டிக் குதிரைக்கு முன்னூறு கால். இது என்ன ?
10. வந்தும் கெடுக்கும், வராமலும் கெடுக்கும். இது என்ன ?

உப்பை திருடிய ஆறு

ஒரு நாள், இரவு மடத்தில் படுத்திருந்த ஐந்து சீடர்களும் குருவும் தூக்கம் பிடிக்காமல் கதை பேசிக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் ஒரு கதையை சொல்லிக்கொண்டிருந்தனர். கடைசியாக ஐந்தாவது சீடனான பேயன் கதை சொல்லும் முறை வந்தது. நீங்களெல்லாம் தெரிந்த கதையை சொல்லிவிட்டனர் எனக்கு எந்தக் கதையும் தெரியாது. ஆனால் நான் சிறுவனாக இருந்தபோது எனக்கு தாத்தா ஒரு கதை சொன்னார். அந்த கதையை நான் உங்களுக்குச் சொல்கிறேன் என்றான். பரமாத்ம குருவும் சீடர்களும் நான்கு பேர்களும் தாத்தா சொன்ன கதையை சொல்லு என் ஆவலாகக் கேட்டார்கள்.... எனது தாத்தா இருந்த ஊரில் ஒரு உப்பு வியாபாரி இருந்தார். அவர் கொஞ்ச தூரத்திலுள்ள உப்பளங்களிலுருந்து உப்பை வாங்கி கழுதையின் மேல் ஏற்றிக்கொண்டு அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களில் உப்பு வியாபாரம் செய்து வந்தார்.



ஒரு நாள் உப்பு வியாபாரி கழுதையின் மேல் உப்புடன் ஒரு ஆற்றைக்கடந்து செல்லும்போது கழுதையின் மேல் இருந்த ... உப்பை ஆறு திருடித் தின்றுவிட்டது.. என்றான். எப்படி உப்பை ஆறு திருடி தின்றிருக்கும் என்று மற்ற நான்கு சீடர்களும், பரமார்த்த குருவும் ஆச்சரியத்துடன் கதையை மேலும் சொல்லுமாறு கேட்டுக் கொண்டார்கள். பேயன் தாத்தா சொன்ன கதையை தொடர்ந்து சொல்லலானான். இந்த சமயம் வெயில் காலம் உப்பளத்துக்குச் சென்ற உப்பு வியாபாரி நான்கு மூட்டைஉப்பை விலைக்கு வாங்கி கழுதையின்மேல் ஏற்றி ஊரைநோக்கி வந்துகொண்டிருந்தார். வரும் வழியில் ஆற்றைக்கடக்க வேண்டியிருந்தது. உப்புமூட்டையோடு கழுதையும் வியாபாரியும் ஆற்றின் மையத்துக்கு வந்துவிட்டனர். ஆற்றின் தண்ணீரில் குளித்தால் உஷ்ணம் குறையும் என்று எண்ணிய வியாபாரி தண்ணீரில் முழ்கி சிறிதுநேரம் குளிக்க ஆரம்பித்தார். கழுதையும் சூரியனின் வெப்பம் தாளாமல் உப்பு மூட்டையுடன் ஆற்றில் மூழ்கி குளிக்க ஆரம்பித்துவிட்டது. ஆற்றின் நீரில் மூழ்கியதால் கழுதையின் மேல் இருந்த உப்பு மூட்டைகள் கரைந்து விட்டன. சுமைகுறைந்ததும் கழுதையும் உப்பு வியாபாரியும் கரையேறினர். கரையேறிதும் கழுதையின் முதுகில் உப்புமூட்டை இல்லாமல் வெறும் கோணிப்பை மட்டும் இருப்பதைக்கண்டு வியாபாரி திடுக்கிட்டான்.

எப்படி உப்பு போயிருக்கும்? நாம் ஆற்றில் இருக்கும்போது உப்புமூட்டை இருந்தது! கரையேறும்போது இல்லையென்றால் ஆற்றில்தான் இருக்கும் என்று நினைத்து ஆற்றில் இறங்கி தேடலானான் உப்பு வியாபாரி.எவ்வளவு தேடியும் மூட்டையிலிருந்த உப்பு கிடைக்காததால் திரும்பவும் கரைக்கு வந்து மீண்டும் கோணிப்பையை சோதனை செய்தான் உப்பு வியாபாரி. கோணிப்பை வைத்தபடியே இருக்கும்போது உப்புமட்டும் இல்லையென்றால் இந்த ஆறு தையலைப் பிரிக்காமலே நான்கு மூட்டை உப்பையும் திருடி தின்றுவிட்டதே என்று மனம் வருந்தி, வாய்க்குவந்தபடி ஆற்றை சபித்துவிட்டு கழுதையுடன் ஊர் வந்துசேர்ந்தான் உப்பு வியாபாரி. தாத்தா சொன்ன கதையை பேயன் சொல்லியதை க் கேட்டு பரமார்த்த குருவும் சீடர்களும் உப்பை சாமர்த்தியமாக ஆறு தின்றுவிட்டதே என்று எண்ணி பலமாக வாய்விட்டு சிரித்தார்கள்.

இல்லாத செய்திகள்

1. யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை.
2. மண்ணுளிப் பாம்புக்கு கண்களில்லை.
3. சுண்டெலிக்கு வியர்ப்பதில்லை.
4. பறவைகளுக்கு பற்களில்லை.
5. கோலா கரடி நீர் அருந்துவதே இல்லை.
6. ஆப்கானிய நாட்டில் ரயில்களே இல்லை.
7. சந்திரனில் வாயுமண்டலம் இல்லை.
8. அல்போனியா நாட்டில் மதங்கள் இல்லை.
9. சவுதி அரேபிய நாட்டில் ஆறுகள் இல்லை.

10. பிரான்ஸ், பெல்ஜியம் நாடுகளில் சினிமாவுக்கு சென்சார் இல்லை.
11. பறவை இனங்களில் சில அடைகாப்பது இல்லை.
12. பாலில் இரும்பு சத்து இல்லை.
13. காற்றுக்கு நிறமில்லை.
14. மாட்டின் மேல் தாடையில் பற்கள் இல்லை.
15. அயர்லாந்து நாட்டில் கவிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஓவியர்களுக்கு வருமான வரி கிடையாது.

தன்னம்பிக்கையை வளருங்கள்

அண்மைக் காலங்களில் பெற்றோர் குழந்தைகளின் உடல் நலம், நடத்தை மற்றும் பள்ளி வீட்டுப்பாடம் இவற்றின்மீது கவனம் செலுத்துகிறார்கள் என்றாலும் இதைவிட முக்கியமான பொறுப்பினுக்கு முக்கியத்துவம் தரத்தவறிவிடுகிறார்கள். அதுதான் குழந்தையை தன்னம்பிக்கை உடையவர்களா வளர்ப்பது! இது ஒன்றும் மந்திரம் இல்லை. குழந்தைகளது பணிகளை நீங்களே வலியச்சென்று ஏற்காதீர்கள். சில பொதுவான செயல்களைச் செய்வதற்கு தினமும் பயிற்சி தாருங்கள். பொறுப்பினைத் தாருங்கள்.

1. குழந்தைகளுக்கென நேரத்தை ஒதுக்குங்கள்

பள்ளியிலிருந்து சோர்வுடன் வரும் குழந்தையிடம் என்ன டெஸ்ட் வைத்தார்கள்?மார்க் எவ்வளவு? யார் முதல் மார்க் வாங்கியது? என்றெல்லாம் கேள்விகள் கேள்விக்கணைத் தொடுக்காதீர்கள்.களைப்பு நீங்க ஏதேனும் சாப்பிடக்கொடுத்த பின் பள்ளியில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி கேட்டுத்தெரிந்கொள்ளுங்கள்.அவரது நண்பர்கள் யார்? யாருடன் விளையாடுகிறார்கள் என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.

2. உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள்

சிறுசிறு முறைகளில் நீங்கள் காட்டும் அன்பினை உணரச்செய்யுங்கள். காலை நேரத்தில் எழுவது அவர்களுக்கு சிரமமாகத் தோன்றினால் கடிகாரத்தில அலாரத்தை சற்று முன்கூட்டியே வைத்து முன்னதாக எழுப்பத் துவங்குங்கள். கடைசி நேரத்தில் அவசரப் படுத்தாதீர்கள். நீங்களும் கோபமடையாதீர்கள். பதட்டமடையாதீர்கள்.

3. குழந்தையைப் பாராட்டுங்கள்

குழந்தையை பாராட்டுவதற்குக் காரணம் கண்டறியுங்கள். ஒவ்வொருவரும் தன்னை கவனிக்க வேண்டுமென்றுதான் விரும்புவார்கள். உங்கள் வீட்டு உறவினர் ஒருவருக்குத் திருமணம் என்றால் உங்களை கவனிக்கிறார்களா? அழைப்பு வருகிறதா? என எதிர்பார்க்கிறீர்கள் இல்லையா? இதில் குழந்தை விதி விலக்கல்லவே! நேரம் கிடைக்கும் போது பலமுறை பாராட்டுங்கள்.

4. குழந்தை முக்கியமாக உணரப்படட்டும்

உங்களது சமுகத்தில், குடும்பத்தில் அக் குழந்தை முக்கியமென்பதாக உணரச்செய்யுங்கள்.

குழந்தைக்கு ஏதேனும் பொறுப்பினைத் தேடிக்கொடுங்கள். மேஜை அமைப்பது, உட்காருமிடம், சாப்பிடும் மேஜை இவற்றை துடைத்து அழகுபடுத்தும் பணியைத் தாருங்கள்.குழந்தை வளர்ந்தவர்களாக ஆகும்போது பெரிய வேலைகளைக் கொடுங்கள். தவறுகளை பெரிது படுத்தாதீர்கள். நிறைவுகொள்ளுங்கள். அவர்களின் சிறு செயல்களையும் சிறப்பாகச் செய்ததாகப் பாராட்டுங்கள்.

5. தோல்விகளை ஏற்க பயிற்சி அளியுங்கள்

நாம் ஒவ்வொருவருமே ஏதேனும் ஒரு வகையில் தோல்வியடைகின்றோம், தவறு செய்கின்றோம் என்பதை குழந்தைகளுக்கு ஒவ்வொரு பெற்றோரும் முக்கியமாக உணர்த்துங்கள். தோல்வி என்பதோடு உலகம் முடிவடைந்து விடுவதில்லை. அறிவியலார்களின் வாழ்க்கை வரலாற்றை கதையாகக் கூறுங்கள். அவர்கள் தோல்விகளிலிருந்துதான் வெற்றியைக் கண்டார்கள் என்பதை குழந்தைகளுக்கு நன்கு தெளிவுபடுத்துங்கள். மேற்கூறிய இக் குறிப்புகளை மனதில் கொண்டு பெற்றோர் குழந்தைகளை தன்னம்பிக்கை கொண்டவர்களாக உருவாக்கலாமே!

உணர்வை மதித்தல்

ஓட்டப்பந்தயத்திற்கென ஓடும் ஒருவர் தம்மடன் நிகராக ஓடுபவர் விழுந்துவிடுகையில் சிரிக்கக் கூடாத மனநிலையைக் கொண்டவராக இருக்கவேண்டும். ஒரு சகமனிதரை எதிரியாகப் பார்க்காததோரு உணர்வு மட்டுமே மனிதத்தை வளர்க்கப்பார்க்கும். வெற்றி ஒரு போதை. புகழுக்கானபாடுபொருள். ஆனால் நிலைத்தல் என்பது வாழ்தல். நாட்களை, வருடங்களைக்கடந்து வாழ்தலே நிலைத்தல் ஆகும் நிலைப்பதற்கு வெறுமனே வெற்றி போதுமானதல்ல. உடனிருப்போரின் உணர்வை மதித்தலும் நிலைப்பின்பாடு பொருளாகும்.

கணிதப்புதிர் விடைகள் : 1. ரூபாய் 29, 2. 22 முறைகள்

விடுகதை விடைகள்;

1. அகப்பை	2. கோலம்	3. மீன்	4. வௌவால்	5. தேன்கூடு
6. கடிகாரம்	7. பலாக்கனி	8. நத்தைக்கூடு	9. ஊமத்தம்மங்காய்	10. மழை

CREW PUBLIC CHARITABLE TRUST

40, சப்தகிரி காலனி, சென்னை–83.

சங்க நிர்வாகிகளுக்கு அன்பான வேண்டுகோள்.

வரும் 2022 – 2023 ஆம் கல்வி ஆண்டிற்கு, கலை மற்றும் அறிவியல், பொறியியல், மருத்துவம், பாலிடெக்னிக், I.T.I. படிக்கும் ஏழ்மையான மாணவ மாணவியர்களை மட்டும், கல்வி உதவிக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்தவும்.

புதியதாக ஆரம்பிக்கப்பட்ட கிளைச் சங்கங்களின் நிர்வாகிகள், மாநில சங்கத்திடமிருந்து பெற்ற அங்கீகார கடிதங்களின் நகல்களுடன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

சம்பந்தப்பட்ட கிளைச்சங்கங்களின் கீழ் உள்ள ஊர்களிலுள்ள மாணவ மாணவிகளின் விண்ணப்பங்களை மட்டும் பரிந்துரை செய்து அனுப்பவும். இதர ஊர்களிலுள்ள மாணவ மாணவிகளின் விண்ணப்பங்களை பரிந்துரைக்க வேண்டாம்.

கிளைச்சங்கங்களில் நிர்வாகிகளாகப் பணிபுரிந்த பின், விலகிய முன்னாள் நிர்வாகிகள், விண்ணப்பங்களை பரிந்துரைக்க வேண்டாம்.

கார்காத்தார் ஒப்புரவு இதழில் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்தை கிழித்து அல்லது XEROX நகல் எடுத்து அனுப்ப வேண்டாம். கணினியில் டைப் செய்து உபயோகிக்கவும்.

கல்லூரியில் முதலாம் ஆண்டு சேரவிருக்கும் மாணவ மாணவிகள் கவுன்சிலிங் முடித்து கல்லூரி கட்டணம் கட்டிய (நகல்) ரசீதுடன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

மாணவ மாணவிகளின் விண்ணப்பங்களில் பரிந்துரை செய்யாமல், சங்க நிர்வாகிகள், அவர்களின் Letter Pad களில் அல்லது தனியாகக் கடிதங்களில் பரிந்துரை செய்து, அதில் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.

தந்தையை இழந்த / பிரிந்த மாணவ மாணவிகளின் பள்ளிக்கல்வி விண்ணப்பங்களையும் அனுப்பலாம். சங்க நிர்வாகிகள், தாங்கள் அனுப்பும் விண்ணப்பங்களுக்கு வரிசை எண்கள் கொடுக்கவும்.

மாணவர்களிடமிருந்து பெறப்படும் அசல் விண்ணப்பங்களை CREW அறக்கட்டளைக்கு அனுப்பி, நகலை, சங்க நிர்வாகிகள், தங்களுடன் வைத்திருக்கவும்.

மேற்படி விண்ணப்பங்களை சரிபார்த்து பரிசீலனை செய்து, ஏழ்மையான மாணவர் / மாணவி என்பதை உறுதிசெய்த பிறகு, தலைவர், செயலர் ஆகிய இருவரும் கையொப்பமிட்டு CREW அறக்கட்டளை, சிறுசேரி என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 15–06–2022 க்குப் பிறகு அனுப்பவும்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 30–11–2022 முடிய பெறப்படும்.

மாதிரி விண்ணப்பம் மற்றும் STAMP RECEIPT இத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

தி.நெ. முத்துகுமாரசாமி,
கௌரவ ஆலோசகர்.

ச. வெங்கடேசன்,
தலைவர்,
CREW அறக்கட்டளை.

CREW அறக்கட்டளை,

40 சப்தகிரி காலனி சென்னை – 83

கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பம்

(கல்லூரி மாணவ, மாணவிகள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

அனுப்புநர், தேதி : / / 2022

பெறுநர் :

நிறுவனர் அவர்கள்
CREW PUBLIC CHARITABLE TRUST
சென்னை–83.

பொருள் : கல்வி உதவித்தொகை விண்ணப்பம் சமர்ப்பிப்பது – தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

CREW PUBLIC CHARITABLE TRUST மூலம் என்னுடைய கல்லூரி கல்விக்காக (College Study), தாங்கள் பண உதவி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் தேவையான விபரங்களை கீழே கொடுத்துள்ளேன்.

1. மாணவன் / மாணவி பெயர் :
2. தந்தை / தாய் / காப்பாளர் பெயர் :
3. மாணவன் / மாணவி முழுமையான நிரந்தர முகவரி :

4. தொலைபேசி, கைபேசி எண் :
5. படிக்கப்போகும் வகுப்பு (2022 – 23–ஆம் கல்வி ஆண்டு) :
   (கல்லூரியில் எந்த ஆண்டு என்று அவசியம் குறிக்கவும்)
   மருத்துவ படிப்பிற்கு அரசு ஒதுக்கீடு 7.5 % யின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவராயின் அதனை குறிப்பிடவும் : ஆம் ..... , இல்லை .....
6. கல்லூரி விபரங்கள் :
7. கல்லூரியிலிருந்து பெற்ற உத்தேச கல்விக்கட்டணத்தின் நகல் (Estimate Copy) :
8. கடந்த தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் நகல் :
9. பெற்றோர்கள் பார்க்கும் தொழில் மற்றும் மாத வருமானம் :
10. பெற்றோர்களின் தொலைபேசி / கைபேசி எண் :
11. சென்ற ஆண்டுகளில் CREW அறக்கட்டளை மூலம் பெற்ற தொகை:
    1. 2018 – 2019 ..... :
    2. 2019 – 2020 ..... :
    3. 2020 – 2021 ..... :
    4. 2021 – 2022 ..... :
12. சென்ற ஆண்டு மற்றும் இந்த ஆண்டு கட்டிய கல்விக்கட்டண ரசீதுகளின் நகல்களை இணைத்துள்ளேன். } ரசீது எண் தொகை தேதி

13. குறைந்த பட்சம் தேவைப்படும் தொகை : ரூபாய்

14. குடும்பத்தில் முதல் பட்டதாரியா : ஆம் இல்லை

15. கல்லூரி கல்விக்கு, வங்கிகள் வழங்கிய கடன்தொகை : ரூபாய்.
(முதல் ஆண்டு முதல் இறுதி ஆண்டு முடிய)

16. மாணவர் அல்லது பெற்றோரின் நடப்பில் உள்ள
வங்கி கணக்கு விபரங்கள் **(தெளிவாக)**
(Account must be Active) :

17. வங்கியின் பெயர் மற்றும் கிளை :

18. கணக்கு வைத்திருப்பவர் பெயர்:

19. வங்கி கணக்கு எண் :

20. கணக்கு எண்ணுக்குரிய
IFSC Code No :

* 21. வங்கி கணக்கு புத்தகத்தின் முதல்
பக்கத்தின் நகலை அல்லது Cancel செய்த ஒரு
காசோலை (செக்) நகலை இணைக்கவும்.

நன்றி

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
1) மாணவன் / மாணவி கையொப்பம்.

2) தந்தை / தாய் / காப்பாளர் கையொப்பம்

பூர்த்தி செய்த விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி :
CREW TRUST
No. 9 / D-12, Sipcot IT Park,
Siruseri, Chennai - 603103.
Mobile No. 9445451604.

CREW PUBLIC CHARITABLE TRUST

Registered Document No. 290/2010
40, Sapthagiri Colony, Jafferkhanpet, Chennai-83

DATE.....

PAYMENT VOUCHER

Received with thanks from the CREW Public Charitable Trust a sum of Rs..... (Rupees.....) having been deposited in .... Bank .....Branch, A/C No. .....for my studies at the institution ..... / as a helping measure towards my livelihood.

Revenue Stamp

Receiver's Signature

Name .....

Address .....

.....

Mobile No.....

Encl: Xerox Copies of Receipts of tuituion fees etc.,

வியப்பூட்டும் பிரபஞ்சம்
கோள்களைச் சுற்றிவரும் நிலாக்களின் (Moons)
எண்ணிக்கை – 214

பூமியைச் சுற்றிவரும் ஒரே ஒரு நிலா (சந்திரன்)

அக்ரி த. இராமலிங்கம்
முன்னாள் கூடுதல் இயக்குநர்,
சென்னை–91. செல் : 9445102249

சூரியனைச் சுற்றிவரும் உருண்டையான, எடைமிகுந்த வான்பொருட்கள், கோள்கள் அல்லது கிரகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட கோள்கள் – 8, குறுங்கோள்கள் – 5 என்றும் அவைகளைப் பற்றிய அறிவியல் செய்திகள் மற்றும் தகவல்கள், இதற்கு முன்பு எழுதிய கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டன. நிலாக்கள் அல்லது சந்திரன்கள் (Moons) என்பவை, கோள்களைச் சுற்றிவரும் பிரபஞ்ச பொருட்கள், சூரியனுக்கு அருகில் முதலாவதாக உள்ள புதன், அதற்கு அடுத்து உள்ள வெள்ளி ஆகிய இரு கோள்களுக்கும் நிலாக்கள் கிடையாது. மூன்றாவது கோளான நாம் வாழும் பூமிக்கு ஒரே ஒரு நிலா. அன்றாடம் நாம் காணும் நிலா பூமியைச் சுற்றி வருகிறது. செவ்வாய் கிரகத்திற்கு இரண்டு வியாழன் கோளுக்கு 79, சனி என்ற கோளுக்கு 82, யுரேனஸ் கோளுக்கு 27, நெப்டியூன் கோளுக்கு 14 நிலாக்கள், ஆக மொத்தம் 205 நிலாக்கள், ஆறு கோள்களைச் சுற்றி வருகின்றன. குறுங்கோள்களில் புளூட்டோவுக்கு – 5, ஹவ்மியாவுக்கு –2, எரிஸ் மற்றும் மேக்மேக் ஆகிய குறுங்கோளுக்கு தலா ஒரு நிலா உண்டு. செரிஸ் என்று குறுங்கோளுக்கு நிலா கிடையாது. மேற்கண்ட முறையில் நான்கு குறுங்கோள்களுக்கு 9 நிலாக்கள் உள்ளன. ஆகவே பிரபஞ்சத்தில் 214 (205 + 9) நிலாக்கள், 6 கோள்களையும், 4 குறுங்கோள்களையும் சுற்றி வருகின்றன.

பூமியைச் சுற்றிவரும் ஒரே நிலா – சந்திரன் :

நாம் காணும் பூமியின் நிலா (Moon), சந்திரன், திங்கள், மதி, அம்புலி என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. பூமிக்கும், நிலவுக்கும் உள்ள சராசரி தூரம் 3,84,403 கி.மீ ஆகும். நிலா பூமியை ஒரு நீள் வட்டப்பாதையில் சுற்றி வருகிறது.

1. அமாவாசை, பௌர்ணமி, தேய்பிறை, வளர்பிறை :

சந்திரன், தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக்கொள்வதற்கும், நாம் வாழும் பூமியை ஒருமுறை சுற்றி வருவதற்கும் ஆகும் காலம் ஒன்றுதான். அதாவது 29.32 நாட்கள். ஆகவே பூமியில் உள்ளவர்கள், நிலவின் ஒரே பக்கத்தை (One side) எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். சந்திரனுக்கும், பூமிக்கும் சுய ஒளி கிடையாது. இரண்டுமே, சூரிய ஒளியைப் பெற்று ஒன்றுக்கொன்று பிரதிபலித்துக் கொள்கிறது. சூரியனுக்கும், பூமிக்கும் இடையில் சந்திரன் ஒரு நேர்கோட்டில் வரும்பொழுது, சந்திரனின் ஒளிரும் பகுதியை நாம் காணமுடியாது. இருண்ட பகுதியைத்தான் நாம் பார்க்கிறோம். அன்றுதான் அமாவாசை எனப்படுகிறது. சந்திரன் பூமியின் அடுத்த பக்கத்திற்கு செல்லும்பொழுது, அதாவது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி ஒரு நேர்கோட்டில் வரும்பொழுது, பூமியிலுள்ள நாம் சந்திரனின் ஒளியூட்டப்பட்ட பகுதியை காண்கிறோம். அன்றுதான் பௌர்ணமி, சந்திரன் தன்னுடைய பாதையில் பூமியைச் சுற்றி வர 29 நாட்கள் எடுத்துக் கொள்வதால், அதில் பாதி அளவான 14.5 நாட்கள் வளர்பிறை என்றும், அடுத்து வரும் 14.5 நாட்கள் தேய்பிறை என்றும் கூறப்படுகிறது.

2. சந்திரனின் ஈர்ப்பு சக்தியும் கடல் அலைகளும் :

சந்திரன், பூமிக்கு அருகில் இருப்பதால், அதனுடைய ஈர்ப்பு சக்தி கடலில் அலைகளை ஏற்படுத்துகிறது. சூரியனுடைய ஈர்ப்பு சக்தியும், சந்திரனுடைய ஈர்ப்பு சக்தியுடன் சேர்த்து கொள்வதால், அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் கடல் அலையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படுகிறது.

3. சந்திரன் பற்றிய ஆய்வுகள் :

சோவியத் யூனியன் 1958, 1959–ஆம் ஆண்டுகளில் 15 ரோபேட்டிக் விண்கலன்களை, விண்வெளியில் செலுத்தி சந்திரனைப் பற்றிய ஆய்வை தொடங்கியது. அமெரிக்காவிலுள்ள NASA அமைப்பானது 1961–ஆம் ஆண்டு தன் ஆய்வுகளை தொடங்கி 21–07–1969 அன்று நெயில் ஆம்ஸ்ட்ராங் என்ற விண்வெளி வீரரை நிலவில் இறக்கி நடக்கச் செய்தது. மூன்றாவது நாடாக ஐப்பான் 1990–ல் ஒரு விண்கலத்தை அனுப்பி, நிலவின்

சுற்றுவட்டப்பாதையில் செலுத்தியது European space Agency-2004–ம் ஆண்டு ஒரு விண்கலத்தை அனுப்பி நிலவிலுள்ள வேதியியல் மற்றும் கனிமப் பொருட்களை கண்டறிய முயற்சி செய்தது. சீன நாடானது, 2007–ல் தன் ஆய்வை தொடங்கியது. இந்தியாவின் ISRO, 2008–ல் சந்திராயன்–1 என்ற விண்கலத்தை நவம்பர் 2008– முதல் ஆகஸ்ட் 2009 வரை சந்திரனைச் சுற்றி வரச் செய்து, அவ்விண்கலம் அனுப்பிய புகைப்படங்கள் மூலம் நிலவின் புறத்தோற்றம், மற்றும் வேதியில் தன்மைகளை ஆய்வு செய்தது. சமீபத்தில் ISRO, மங்கல்யான் என்ற விண்கலத்தை ஆர்பிட்டர், லேண்டர் மற்றும் ரோவர் ஆகிய கருவிகளுடன் அனுப்பி லேண்டரை சந்திரனின் மேற்பரப்பில் தரையில் இறக்க முயற்சி செய்த பொழுது இஸ்ரோ நிலையத்திலிருந்து பிரதமர் மோடி முன்னிலையில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. அந்த காட்சியை உலக நாடுகள் உற்று நோக்கின. லேன்டர் கருவி, சந்திரனின் மிக அருகில் சென்றதும், மெதுவாக இறங்காமல், வேகமாக இறங்கி, உடைந்தது, அம்முயற்சியில் மிகச் சிறிய கோளாறு ஏற்பட்டதால், தோல்வியில் முடிந்ததை பொறுத்துக் கொள்ள முடியாத இஸ்ரோ தலைவர் சிவன் அவர்கள் மோடி முன்னிலையில் கண் கலங்கி அழுதார். பிரதமர், இஸ்ரோ தலைவர் சிவன் அவர்களின் தோளில் தட்டிக்கொடுத்து ஆறுதல் சொல்லியதை உலக நாடுகளிலுள்ள பலர் தொலைக்காட்சி மூலம் கண்டனர். மேற்கண்ட நிகழ்வு நடந்த தேதி எனக்கு நினைவில்லை.

4. சந்திரனின் புறத்தோற்றம் :

சந்திரனின் மேற்பரப்பில் எரிமலைகள், எரிமலை குழம்பு ஓடியதற்கான அடையாளங்கள் உள்ளன. நீண்ட பள்ளங்கள் (craters), மேட்டுப் பகுதிகள், சமவெளிகள், பள்ளத்தாக்குகள் உள்ளன. அரைக்கோள வடிவிலான (Dome shaped) 8 முதல் 10 கி.மீ. விட்டமும் பலநூறு மீட்டர்கள் உயரமும் கொண்ட Lunar Domes என்றழைக்கப்படும் குன்றுகள் உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

5. பள்ளங்கள் (Impact craters) :

அஸ்டிராய்டுகள் மற்றும் மீட்டியோராய்டுகள் என்று சொல்லப்படுகிற சூரியனைச் சுற்றிவரும் பாறைகளில் பல, சந்திரன் மீது கோடிக்கணக்கான ஆண்டுகளாக மோதியதால் சந்திரனின் மேற்பரப்பில், ஒரு கிலோ மீட்டருக்கு மேல் அகலம் கொண்ட மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளங்கள் உள்ளன. அந்த பள்ளங்கள் சிலவற்றிற்கு, அறிவியல் வல்லுநர்கள் மற்றும் வானியல் வல்லுநர்களின் பெயர்கள் இடப்பட்டுள்ளன. சந்திரனின் தென் துருவத்தில் 2500 கி.மீ. விட்டமும் 13 கி.மீ. ஆழமும் கொண்ட மிகப்பெரிய பள்ளம் உள்ளது. இஸ்ரோ நிலையத்திலிருந்து அனுப்பப்பட்ட மங்கல்யான் என்ற விண்கலம், நிலவை நெருங்கியபொழுது நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்ட காட்சிகளில் சந்திரனின் மேற்பரப்பில் கிண்ண வடிவிலான பல பள்ளங்களை நம்மால் துல்லியமாக காணமுடிந்தது. சந்திரனில் வலுவான காற்று மண்டலம் இருந்தால், மேற்கண்ட பள்ளங்களை ஏற்படுத்திய, அஸ்டிராய்டுகள் மற்றும் மீட்டியோராய்டு பாறைகள் காற்று மண்டலத்தில் நுழையும் பொழுது எரிந்து போயிருக்கும்.

6. சந்திரனில் காணப்படும் பாறைத் துகள்களும் புழுதியும் (Moon Dust) :

அஸ்டிராய்டுகள் எனப்படும் பாறைகள், மீட்டியோராய்டுகள் எனப்படும் சிறு பாறைகள் மற்றும் வால் நட்சத்திரங்கள், கோடிக்கணக்கான ஆண்டுகளாக தொடர்ந்து சந்திரனின் மேற்பரப்பில் மோதியதால், சந்திரனின் மேற்பரப்பிலுள்ள பெரும் பாறைகள் உடைக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு சிறுகற்களாகவும், துகள்களாகவும் மாற்றப்பட்டன. மேற்கண்ட பொருட்கள் Moon dust அல்லது Regolith என்றழைக்கப்படுகின்றன.

7. சந்திரனின் உள்கட்டமைப்பு :

சந்திரனின் மையப்பகுதியில், இரும்பு உலோகம் கொண்ட பாறைகள் உள்ளன. அதன் வெளிப்புறத்தில் இரும்பு குழம்பு (liquid Iron) உள்ளது. அதற்கும் வெளிப்புறத்தில் 1200 கி.மீ. தடிமனுக்கு இரும்பு மற்றும் மக்னீசியம் கொண்ட பாறைகள் உள்ளன. மேற்கண்ட மூன்று அடுக்குகளின் வெளிப்புறத்தில் Mantle என்று சொல்லப்படுகிற வெளிப்புற பாறைகள் உள்ளன.

– (தொடரும்)

ஆதாரம் : நாசா மற்றும் விக்கிபீடியோ, இணையதளங்கள்.

வருந்துகிறோம்

சென்னை அண்ணாநகர் முனைவர் ச. கற்பகவினாயகம் அவர்களின் சகோதரர் திரு. பாலசுப்பிரமணியம் (வயது 72) அவர்கள் 16–5–22 அன்று இயற்கை எய்தினார்.

****

பூர்வீகம் பனங்காடி திரு. V. பொன்னுசாமி பிள்ளை (TNEB Rtd) அவர்களின் மனைவி பொ. சகுந்தலா அம்மையார் 17–4–22 அன்று இயற்கை எய்தினார்கள்.

எனது இந்தியா!

ஐ.நா. பாதுகாப்பு
சபையின்
தலைமைப் பொறுப்பில்
'எனது இந்தியா'
என்ற பெருமிதத்தோடு
என் எழுதுகோல் நிமிர்கிறது!

''வாய்மையே வெல்லும்''
என்ற வாசகம் தாங்கிய
எனது அரசால்
என் வாழ்க்கை சிறக்கிறது !

ஐந்து கோடி டன்
உணவுதானிய உற்பத்தி
முப்பது கோடியாய் உயர
என் வயிறு நிறைகிறது !

முப்பதாயிரம் கி.மீட்டர் சாலை
ஐம்பத்தெட்டு
லட்சமாய் அதிகரிக்க
என் பயணம் இனிக்கிறது

தங்கம், வெள்ளி, வெண்கலமென
ஏழு பதக்கங்களை வென்ற
'எழுச்சிமிகு இந்தியாவில் நான்'
என்ற பெருமை எனக்கு !

'விக்ரம்' கப்பலென்றும்
'பொக்ரைன்' அணுகுண்டென்றும்
ராணுவத்தின்
ராட்சஸ பலத்தோடு
தாய் மண்ணில்
பாதுகாப்போடு நான்

'ஆரியபட்டா' விலிருந்து
'மங்கள்யான்' என வளரும்
விண்வெளி ஆராய்ச்சி
'நிலவினில் நீர்' என்ற
கண்டு பிடிப்போடு
சிகரம் தொட
என் சிறகுகள் உயர்கிறது !

கால்நடை வளர்ப்பிலும்
பால் உற்பத்தியிலும்
உலகின் உச்சம் தொட்டது
'இந்தியா' என்ற மகிழ்ச்சி !

மூவர்ணக் கொடியில்
எனது முகவரி !
வாழ்க பாரதம் !
வெல்க மணிக்கொடி !

மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.
9578286891

इंडियन बैंक Indian Bank
इलाहाबाद ALLAHABAD
HOME LOAN
Cell : 93458 04981 / 79040 62298

➤ Housing Loan ➤ Repairs / Renovation ➤ Extension of Building ➤ Commercial Building
➤ Take over Loans from Other Banks ➤ Mortgage Loans ➤ NRI Housing Loans ➤ Car Loans
Business Loans, OD, OCC, Against Property, MSME Loans
Ln.T.RAMAMOORTHY,
Home Loan Counselor, indian Bank, Chidambaram
E.mail : matrimonycdm@gmail.com

ஆழ்மனதின் அற்புதங்கள்

நம் ஆழ்மனம் அண்டத்திற்கு ஒப்பானது. இதனை ஆங்கிலத்தில் சப் கான்ஷியஸ் மைண்ட் எனக் குறிப்பிடுகின்றனர். இதற்கு வேறு பெயரும் உண்டு. அது முடிவு இல்லாப் பேரறிவு. இறையியலாளர்கள் இதனை ஆன்மா என்றும் இறைவன் என்றும் போற்றுகின்றனர்.

ஆழ்மனதின் செயல்பாடு :

நமது மூளையின் 95 சதவீத செயல்பாடு நமது ஆழ்மனதில் நடைபெறுகிறது. நாம் பிறந்தது முதல் நமது ஆழ்மனதிற்கு நமது தினசரி தேவைகளையும், உணர்ச்சிகளையும், கலாச்சாரத்தைப் பின்பற்றவும் தொடர்ந்து பயிற்சி அளித்து வருகிறோம். அதனாலேயே தினசரி கடமைகளின் பொழுது எந்த ஒரு சவாலும் நமக்கு ஏற்படுவது இல்லை. எடுத்துக்காட்டாகச் சிறு குழந்தையாக நாம் இருக்கும்போது உணவை அள்ளி உண்ண அறிந்திராத நாம் சிறுக சிறுக அதை நம் மூளைக்குப் பயிற்றுவிக்கும் பொழுது உணவு உண்ணுதல் எளிதாகிறது. இதனை நமது மூளை தனி புரோகிராமாக பதிவிட்டுக் கொள்கிறது. ஒரு முறை அது பதிவிடப்பட்டுவிட்டால் கணினியின் ஹார்ட் டிஸ்க்மெமரி போன்று அது நிரந்தரமாகப் பதிவாகின்றது. நாம் கற்றுக்கொள்ளும் அனைத்துமே தனித்தனி புரோகிராம் போன்று நமது மூளையில் பதிவாகி நம்மை இயக்கி வருகிறது. ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்து கொண்டே இருக்கும் பொழுது அதற்கான அறிவை பெற்று அது ஆழ்மனதில் நம் குணங்களாக, நமது பழக்கமாக மாறிவிடுகிறது.

மகிழுந்து ஓட்ட நாம் கற்றுக்கொள்ளும் பொழுது தொடக்கத்தில் அதன் ஒவ்வொரு பாகங்களையும் கட்டுப்படுத்த மிகுந்த கவனம் செலுத்துகிறோம். அதில் நாம் தொடர் பயிற்சியை மேற்கொள்ளும் பொழுது அது நம் ஆழ்மனதில் பதிவாகிவிடுகிறது. அதன் பின்னர் நம்மால் மிக எளிமையாக அச்செயலில் ஈடுபட முடிகிறது. அப்பொழுது நமது உடலின் பாகங்களை நம் ஆழ் மனது அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து இயக்க துவங்குகிறது. இத்தகைய தனித்துவ மிக்க ஆழ்மனதில் நாம் தொடர்ந்து ஈடுபடும் செயல்களும் நம்மை அறியாமலே பதிவிடப்படுகின்றன. நாம் தினசரி தொலைக்காட்சி பார்த்து வரும்பொழுது அது நமது பழக்கங்களில் ஒன்றாகி அது இன்றி நாம் மகிழ்வாக வாழ்வது இயலாத என்ற பிம்பத்தை ஏற்படுத்துகிறது.

சிலர் புகை, மதுப்பழக்கங்களை தொடர்ந்து செய்து வர அதற்கு அடிமையாகிவிடும் நிலையும் இதனாலேயே ஏற்படுகிறது.

அசாதாரண ஆற்றல் :

ஆழ்மனதிற்கு எண்ணங்களை உயிர்ப்பிக்க வைக்கும் ஆற்றல் உண்டு. ஆழ்மனதிற்கு மொழி லாஜிக் முதலியவை கிடையாது. இவ்வுலகில் கூறப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் எதுவுமே ஆழ்மனதிற்கு இல்லை. இதற்குக் காலமோ வெளியோ இல்லை இதில் நாம் காட்சிப்படுத்தும் மற்றும் கற்பனை செய்திடும் நிகழ்வுகளை உயிர்பெறச் செய்திடும் அசாதாரண ஆற்றல் உண்டு. நம் வாழ்வின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றப் பாதைகளை ஆழ்மனதில் சித்தரித்து தினமும் காட்சிப்படுத்த அது உயிர்பெற்று நம் வெற்றியைத் தீர்மானிக்கும்.

இருந்தும் இதனை மிகவும் கவனமாகக் கையாளுதல் அவசியம். சிறுவர்கள் சிலர் கேளிக்கை சித்திரங்கள் தினமும் பார்க்கும் பழக்கமுடையவர்களாக மாறி வருகின்றனர். அதில் சிலர் அதனைக்கண்டு மகிழ்ந்து அதனை மீண்டும் மீண்டும் கற்பனை செய்து தன் மனத்திரையில் ஓட்ட துவங்குகின்றனர். கற்பனை சித்திரங்கள் புறவடிவம் பெற இயலாத நிலையில் அது அவர்களின் அகத்தில் நிஜமாகி அவர்களை மனரீதியாகவும், உணர்வு ரீதியாகவும், உடல் ரீதியாகவும் வெகுவாக பாதிக்கத் தொடங்குகிறது எனக் குழந்தை நல வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். நிஜ வாழ்வில் நிகழ விரும்பாத, இயலாத காட்சிகளை நம் மனத்திரையில் ஒரு போதும் காட்சிபடுத்தல் கூடாது. மேலும் எதிர்மறை எண்ணங்களும், பகையுணர்வும் நம் வளர்ச்சிக்குத் தடை விதிப்பன என்பதை நாம் உணர வேண்டும்.

பிரார்த்தனையின் அவசியம் :

1902–ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து எடின்பர்க் மாகாணத்தில் சொற்பொழிவு ஒன்றில் நீதிபதி தாமஸ் டுரோவர்டு அவர்கள் பேசும்பொழுது நமக்கு உள்ளேயும் வெளியேயும் ஒரே ஒரு சக்திதான் உள்ளது என்பதே அடிப்படை உண்மை என்று குறிப்பிட்டுள்ளார்.

நமக்கான கேள்விகளை நாம் உள்ளார்ந்து செலுத்தும் பொழுது அதற்கான விடைகளை அள்ளித்தரவல்லது நம் ஆழ்மனது நமது எண்ணங்களை நிஜமாக்கும் ஆற்றல் கொண்டது. இதனால் எதிர்கால நிகழ்வுகளையும் காட்சிப்படுத்த முடியும்.

ஆழ்மனதின் செயல்பாடுகளை நன்கு உணர்ந்தவர்களாக நம் முன்னோர்கள் வாழ்ந்து வந்திருந்தனர். மெய்ஞ்ஞானம் பெற்ற மணிவாசக பெருமான் திருவாசகத்தில்

உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்று

எனக் குறிப்பிட்டு தன்னை உள்ளிருந்து வழிநடத்துபவர் எல்லாம் வல்ல சிவபெருமான் என்பதை உணர்ந்து பூரிப்படைந்தார். அவர் ஆழ்மனதை சிந்தை என்று போற்றுகிறார். நாம் இறைவனிடம் செய்யப்படும் தினசரி பிரார்த்தனையே நம் வாழ்வின் வழிகாட்டி அதுவே அமைதியான நிலையான பேரின்ப வாழ்வைப் பெற்றுத்தரும்.

ஆழ்மனம் கனவுகளிலும், உள்ளுணர்வு வழியேயும் நமக்கான தகவல்களை வழங்குகிறது. நமது பிரார்த்தனையில் நாம் ஆன்மாவோடு தொடர்பு கொள்கிறோம். தினமும் பிரார்த்தனை செய்வதன் மூலம் தெய்வீக அன்பு நம்மைச் சூழ்ந்து நாம் செல்லும் இடத்திற்கு நமக்கு முன்னால் சென்று நம் பாதையை மகிழ்ச்சிகரமானதாகவும், புகழ் மிக்கதாகவும் ஆக்குகிறது.

அமெரிக்க தத்துவவியலாளர் ரால்ஃப் வால்டோ எமர்சன் என்பவர் நம் ஒவ்வொருவருக்கும் வழிகாட்டுதல் உள்ளது. நாம் உன்னிப்பாக காதுகொடுத்து கேட்டால் சரியான வார்த்தை நம் காதில் விழும் என்று குறிப்பிட்டுள்ளார். மனிதனாகிய நாம் வினையும் எதிர்வினையும் என்ற விதியை கையாண்டு வாழ்ந்து வருகிறோம். எதை நாம் மனதில் விதைக்கிறோமோ அதையே நம் வாழ்வினில் எதிர்கொள்கிறோம். நம் மனதில் நம்பிக்கையை விதைக்கும் பொழுது அது நமக்கு நேர்மறை எண்ணங்களைத் தோற்றுவித்து நம் வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

– இரா. திவ்யா சத்யபிரகாஷ்,
மயிலாடுதுறை.
9443785700

கார்காத்தார் திருமண சேவையில் 18 ஆண்டுகள்!
SHRIRAM MATRIMONY SERVICES
ஸ்ரீராம் திருமண தகவல் நிலையம்
SMS Service available
76/1, வ.உ.சி. தெரு, சிதம்பரம்- 608001. Mob: 94862 23030
இப்போது இணையத்தில் உங்கள் SHRIRAM MATRIMONY
www.shrirammatrimony.org
e-mail: matrimonycdm@gmail.com

ஒரு முறை பதிவுக்கட்டணம் மட்டும் - திருமணம் முடியும் வரை இணையதளத்தில் வரன்களை பார்வையிடலாம், கட்டுப்பாடுகள் இல்லை
SMS Service-க்கு தனிக்கட்டணம்.

வாழ்த்துகிறோம்

மேலையூர் லேட் திரு. N. மலரவன் – திருமதி. நீலா இவர்களின் புதல்வி M. கலைசெல்வி க்கும், திரு. C. ஜோதி–பத்மினி இவர்களின் புதல்வன் J. நவின் க்கிற்கும் ஆறுபாதி ஸ்ரீ அபிராமி திருமண மகாலில் 13.5.2022 அன்று திருமணம் இனிதே நடைபெற்றது. சீர்காழி சங்கத்தின் சார்பாக சந்தன மாலை அணிவித்து வாழ்த்து மடல் வாசித்து வழங்கப்பட்டது.

தெய்வத்திரு. ச. குத்தாலம் பிள்ளை, நலமுடன் திருமதி. மீனா அவர்களின் பேத்தி செல்வி முத்துகிருத்திகா என்ற சௌமியா – செல்வன் சு. சொர்ணகாந்த் என்ற கார்த்தி இவர்களின் திருமணம் திருநெல்வேலி என்.ஜீ.ஓ காலனி வரசித்தி விநாயகர் கோவில் முருகன் சன்னதியில் 20–05–22 அன்று சிறப்பாக நடைபெற்றது.

திருவிளையாடற் புராணம்
மாயப் பசுவை வதைத்த படலம் - 29.

"சிவகாமியின் செலவன்"

டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்.

சமணர்கள் மாயப் பசுவினை ஏவுதல்.

சமணர்கள் ஏவிய நச்சுப்பாம்பு வடிவெடுத்த அரக்கனை அனந்தகுண பாண்டியன் கொன்றுவிட்டான். இச்செய்தியை அறிந்த சமணர்கள் மேலும் சினங்கொண்டனர். ஓரிடத்தில் அவர்கள் ஒன்றாய்க் கூடினர். முன்னர் அனுப்பிய யானையைக் கொன்றனர். அதேபோல் இன்று சென்ற பாம்பையும் கொன்றனர். 'இனிமேல் என்ன செய்யலாம்' என்று அடுத்த சூழ்ச்சியைப் பற்றி ஆலோசித்தனர்.

"சைவர்கள் பசுவிற்குத் துன்பம் செய்யமாட்டார்கள். எனவேஇம்முறைமாயப்பசுவை விடுப்போம்" என்று முடிவெடுத்தனர். உடனே மீண்டும் ஒரு வேள்வியைச் செய்தனர். அப்பொழுது அந்த ஓமகுண்டத்திலிருந்து கொடிய அரக்கனான ஓர் அவுணன் வெளிவந்தான். அவனிடம் அவர்கள் "நீ பசு வடிவெடுத்துச் சென்று மதுரையையும் பாண்டிய மன்னனையும் அழித்து வா" என்று ஏவினர்.

மாயப்பசு மதுரை மீது பாய்தல் :

அந்த மாயப் பசு தன் கொம்புகளால் மண்ணைக் குத்தியும், விண்ணில் உள்ள மேகங்களைத் தன் கொம்புகளில் குத்திச் சேர்த்துக்கொண்டும் மதுரை மாநகரை நோக்கிப் பாய்ந்தது. வழியில் தென்பட்ட குன்றுகளைப் பெயர்தெரிந்தது. வழியில் எதிர்ப்பட்ட மக்களையும் முட்டித் துன்புறுத்தியது. இடி போலப் பேரொளி செய்தது. எமனைப்போல மதுரையை நோக்கி வெறிகொண்டு பாய்ந்தோடி வந்தது. இதனைப் பாண்டிய மன்னன் அறிந்தான்.

பாண்டியனும் மதுரை மக்களும் இறைவனை வேண்டல் :

மன்னனும் மக்களும் என்ன செய்வதென்று புரியாமல் ஒரு நொடி திகைத்தனர். உடனே ஒரே வழி சோமசுந்தரப் பெருமானிடம் முறையிடுவதே என்று உணர்ந்தனர். எல்லோரும் திருக்கோயில் சென்றனர். நடந்தவற்றை எல்லாம் கூறி முறையிட்டனர். இதனைக்கேட்ட பெருமான் அவர்களுக்கு அருள் புரிந்தார். இடப நந்தியை அழைத்தார். 'நீ உடனே சென்று சமணர்கள் விடுத்த கொடிய மாயப்பசுவை வென்று வருவாயாக' என்று கூறி அருளினார்.

இடப நந்தி தோற்றப் பொலிவுடன் வருதல் :

கூற்றுவனும் அஞ்சும் வண்ணம் சினந்து எழுந்தது நந்தி. அதன் கண்கள் தழல்போல் சொதித்தன. நாக்கு நாசியினைத் துழாவியது. கடைவாயில் நுரை வழிந்து ஒழுகியது. தலை விண்ணுலகைத் தொட்டு நின்றது. நெற்றிப்பட்டம் சிறந்து விளங்கியது. வளைந்த கொம்புகளில் செம்மணிப்பூன், பிறைச்சந்திரனைக் கேது என்னும் பாம்பு சுற்றிக்கிடந்தாற் போலக் காணப்பட்டது. முதுகிலே பொற்கவசம், கதிரவனைப் போல் விளங்கியது. கொம்பிலே கட்டப்பெற்ற கவரிக்குஞ்சம் பிறைமதி கதிர்போல் தொங்கியது. நெற்றிக்கு முன்னே முத்தாலாகிய முகவட்டுப் பொலிந்து விளங்கியது. பின்னலாகிய மாட்டுச்சதங்கை மாலை கல்லென்று வாய்விட்டு ஆர்த்தது. கழுத்தில் வீரமணி நாவசைத்து ஒலித்தது. நான்கு கால்களிலும், தண்டையும், சிறு சதங்கையும், அரசிலை வடிவாகச் செய்த மாலையும், சிலம்பும் ஒன்று சேர்ந்து ஒலித்தன. காளை தன் கால்களால் நிலத்தைக் கிளறி அண்டத்தையும், எட்டுத் திசைகளையும் மூடுமாறு புழுதி எழுப்பியது. பெருமூச்சுவிட்டது. கொம்பினால் குத்தி மண்ணைக் கோத்துக் கொண்டு மேகத்தை எதிர்க்கக் கிளம்பியது போல் விண்ணை நோக்கிய வண்ணம், கண்களினின்றும் கனல் சிதறி விரைந்து சென்றது.

இடப நந்தி மாயப் பசுவைக் கொன்றமை :

இடப நந்தி மாயப்பசுவை இடையறாது துரத்தியது. வீர விளையாட்டு விளையாடியது. மலைச்சிகரங்களை தூளாக்கித் தூர வீசி எறிந்தது; மரக்கிளைகள் முறியுமாறு எடுத்து வீசியது. இவ்வாறு மாயப்பசுவிற்கு ஊறு நேராமல் அதே நேரம் தன் ஆண்மை நிறைந்த பேரழகை இடப நந்தி காட்டியது. உடனே மாயப்பசு இடபர் மீது காமுற்றது. மலரம்பால் ஏறுண்டு காமம் மிகுந்தது. உயிரோடு வீரியத்தையும் விட்டுக் கீழே வீழ்ந்தது. உடனே அதன் உடல் மலை

வடிவமாக மாறியது. இது மதுரையை அடுத்துள்ள பசுமலையாக இன்றும் நிகழ்கின்றது. இதனைத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் "……கோ உயிர்விட்ட பின்னர், சீரிய பிறங்கலாக்கித் திருவிளையாடல் காணப் பார்மிசை வழங்குவித்தான். பசுமலை என்ன வாங்கு" என்று குறிப்பிடுகின்றது.

அதனைக்கண்ட மதுரை மக்கள் மட்டற்ற மகிழ்ச்சி எய்தினர். அனந்தகுணபாண்டியனின் திண்ணிய தோள்கள் பூரித்தன. கதிரவன் உதித்தகாலை இருள்கெட்டு ஓடுதல் போலச் சமணர்கள் யாவரும் வெட்கித் தலை குனிந்து புறமுதுகிட்டு ஓடினர்.

இடபமலை : உலகம் அறிய வேண்டி இடபநந்தி தன்னுடைய தூல உடலை இடபமலையாக அங்கே விளங்கிட நிறுத்திவிட்டுச் சூக்கும உடலுடன் மதுரை நாயகனை அடைந்து வணங்கியது. அவர் திருவருள் புரிந்து "நீ முன்னைய வடிவொடு இங்கேயே இரு" என்று அங்கேயே இருக்கச் செய்தார்.

"இந்த இடப மலைதான் சோலைமலை எனவும் அழகர் மலை எனவும் இன்று விளங்குகின்றது.

மதுரை மக்களும் மன்னனும் பெருமகிழ்ச்சியடைந்தனர். சந்நிதியில் இருந்த இடபரின் திருவடியை வணங்கிச் சென்றனர். சோமசுந்தரப் பெருமான் நந்திதேவரின் வெற்றிப் பெருமிதத்தைக் கண்டு மீனாட்சியம்மையொடு களிப்புடன் விளங்கினார்.

இராமபிரான் இடப மலையில் வந்து தங்குதல் :

இராமன் இலங்கைக்குச் செல்லுகையில் வாரைப் படைகள் சூழ, இலக்குவன், அனுமான், சுக்ரீவன் முதலாய வீரர்களோடும் அந்த இடபக்குன்றில் வந்து தங்கினான். அதனை அறிந்த அகத்தியர் அங்கு வந்து இராமனுக்கு ஆக்கமொழி கூறி மதுரைப்பதியின் சிறப்பினைச் சொல்லியருளினார்.

இராமன் சொக்கலிங்கப் பெருமானைச் சென்று தரிசித்து வர விரும்பினான். அகத்தியருடன் சென்று பொற்றாமரைக் குளத்தில் நீராடி, நீறுபூசி பெருமானின் திருவடிகளை அன்போடு வணங்கினான். தனது எண்ணிய கருமங்கள் உண்மையாக அருள்புரிய வேண்டினான். பெருமான் அசரீரியாக ஆசிர்வதித்து அருள் புரிந்தான்.

இராமன் இலங்கை சென்று, வென்று இராமேச்சரத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து பூசித்து அருள் பெற்று இராவணனைக் கொன்ற பழியினின்று நீங்கினான். பின்னர் மதுரை சென்று சோமசுந்தரக் கடவுளை சீதையுடன் சென்று வணங்கிப் பின் அயோத்தி சென்றான். திருஞானசம்பந்தரும் இச்செய்தியைத் தமது தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இராமனின் இந்த வரலாறு திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தில் சொல்லப்படவில்லை.

அனந்த குணபாண்டியன் இறைவன் திருவடி அடைதல் :

அனந்தகுணபாண்டியன் குலபூடணனைப் பெற்றான். வளர்த்து ஆளாக்கினான். பின் ஆட்சியை அவனிடத்தில்ஒப்படைத்தான்.சோமசுந்தரக்கடவுளின் திருவருளால் சிவபுரத்தையடைந்து பேரின்பப்பேற்றினைப் பெற்றுய்ந்தான்.

ஜெய்ஸ்ரீ தகவல் மையம்

19/2 வள்ளலார் கோயில் சன்னதி தெரு, மயிலாடுதுறை. அலைபேசி : 94434 88125

கார்குல பெரியோர்கள் தங்கள் வரன் பற்றிய விபரங்களை பதிவு செய்து ஏற்ற வரன்களை எங்கள் ஆலோசனையுடன் பெற்றுச் செல்லலாம். தாங்கள் ஜாதகம் கொடுத்தால் தங்கள் அனுமதியுடன் மட்டும் தரப்படும். நிர்வாக செலவிற்கு பதிக்கட்டணம் மட்டும் பெறப்படும். பதிவு செய்தவர்களுக்கு மட்டும் பதிவு கார்டு கொடுக்கப்படும். திருமணம் முடிந்த பின் பதிவு நீக்கப்படும். பதிவுக் கட்டணம் ரூ. 200/- மட்டும். எங்கள் இப்பணி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அலுவலக நேரம் சனிக் காலை 10.00 மணி முதல் 12.30 வரை, மாலை 4.30 மணி முதல் 7.30 வரை, மற்ற நாட்களில் மாலை 4.30 முதல் 7.30 வரை, ஞாயிறு விடுமுறை

நிறுவனர் **எஸ். ஜெயம்** வாழ்த்துக்களுடன் **எம். சத்தியபால்**

கடிதத் தொடர்பு முகவரி : **எஸ். ஜெயம்,** 10, மயூரநாதர் மேல வீதி, மயிலாடுதுறை-609 001.

அர்த்தமும் ! அனர்த்தமும் !

Dr. A. சுகாசினி, சிதம்பரம்.

தமிழிலே சில சொற்களுக்கு பலவிதமான கருத்துக்கள் (Meaning) உள்ளன. சில சமயங்களில் அவைகள் எதிர்மறை கருத்துகளாகக் கூட இருக்கும். உதாரணத்துக்கு, நாற்றம் = வாசனை (கெட்ட வாசனையை துர்நாற்றம் என்பார்கள்). அத்தகைய சொற்களிலே ஒன்று 'சும்மா'.

பெரும்பாலான வீடுகளிலே தினப்படி சகஜமாக பேசப்படும் சும்மாக்கள்;

1) சும்மாதான் உட்கார்ந்திருக்கே ஏணையை தாலாட்டேன்.
2) சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான்.
3) சும்மா பேச்சுக்கு சொன்னேன், டிபன் வேண்டாமென்று. நீ நிஜமுன்னு நம்பிட்டியா ?
4) சும்மா ! சும்மா ! நச்சரிக்காதே, வெறுப்பேற்றி கோபத்தை கொடுக்காதே.
5) சும்மான்னு இருந்தா கூட வம்பு பண்கிறார்கள்.
6) நீ சும்மா கிட ! நான் என்ன செய்யனும்னு எனக்கு தெரியும்.
7) கடன்காரன் வந்தான்னா, சும்மானாச்சிக்கு நான் இல்லையென சொல்லி சமாளிச்சிடு.
8) அவனை சும்மா இருக்கச் சொல்லு ! மீதியெல்லாம் நான் பார்த்துக்கிறேன்.
9) எப்ப பார்த்தாலும் அவன் ஏன் சும்மா செவனேன்னு உட்கார்ந்திருக்கான் ?
10) சும்மா வந்தாலும் சுமந்துகிட்டு வந்தாலும் அம்மாகளுக்கு சேய்யிடம் உள்ள தாய் பாசம் மட்டும் மாறாது.
11) அவன் சும்மா இருப்பானேயொழியபந்தாவெல்லாம் பண்ணமாட்டான்.
12) அவன் செய்த பாவத்துக்கு கடவுள் அவனை சும்மா விடமாட்டான்.
13) அவன் சும்மா சும்மா நம்மை முறைக்கிறானே! எதுக்காக இருக்கும் ?
14) சும்மாவே இருப்பவனுக்கு சுகதுக்கத்தை பிரித்து பார்க்க தெரியாது.
15) சும்மா விளையாட்டுக்கு கூட திட்டக்கூடாது. சமயத்திலே அதுவே வினையாகிவிடும்.
16) பையன் வீட்டிலே சும்மா உட்கார்ந்திருக்கான். நான் ஈட்டிகாரனுக்கு வட்டி கட்டி கிட்டு இருக்கேன்.
17) சும்மா இருப்பேன்னு பேசவந்தேன். வம்ப விலைக்கு வாங்கக் சொல்கிறியே.
18) சும்மா சும்மா திட்டாதே, வம்புக்கிழுத்து வையாதே.
19) இங்கிருந்த பணத்தை பார்த்தாயானு கேட்டதும் பயந்திட்டியா! சும்மாதான் கேட்டேன்.
20) உன் பையன் ஊர் ஊராய் போய்கொண்டு இருக்கானு சொன்னேயே என்ன வேலை ? சும்மா சுத்தரதுதான் அவன் வேலை.
21) சும்மா கிடந்த பூச்சியை மடியில் கட்டிக்கொண்டு குத்துதே குடையுதே என்றான்.
22) ஏன் பொய் சொன்னாய் ? கோவித்துக்கொள்ளாதே! சும்மா உன்னை ஏமாற்றுவதற்குதான் சொன்னேன்.
23) சும்மா சும்மா என் பின்னால் சுத்தாதே. தண்டனை பெற்று பின் தவிக்காதே.
24) நானும் உன் கூட வருகிறேன் என்றதும் பயந்திட்டியா ? சும்மா சொன்னேன்.
25) சும்மா சொல்லக்கூடாது. அவன் உண்மையிலேயே அந்த வேலைக்கு தகுதியானவன்தான்.
26) உங்க வீட்டிலிருந்து வந்தப்ப சும்மாதானே வந்த! இப்ப என்ன வைரநெக்லஸ் கேக்குது ?
27) கூட வந்து குழிபறிப்பவனை விட சும்மா இருந்து வழிகாட்டுபவனே ஆயிரம் மடங்கு நல்லவன்.
28) சும்மா உம்முன்னு உட்கார்ந்திருக்கானேன்னு பார்த்தா! சரியான நேரத்தில் சாட்டை அடி கொடுக்கிறான்!
29) சும்மா இருக்கிறவன்களை சீண்டக்கூடாது. 'சாது மிறண்டா காடு கொள்ளாது' என்று சொல்லுவார்கள்.
30) சும்மா இருப்பவனெல்லாம் ஊமையுமில்லே! வாய் சவடால் பேசுபவனெல்லாம் வஸ்தாதுமில்லே!
31) வீண் வம்பு பேசாமல் சும்மா இருந்தால் நம்மை சோம்பேரி என்கிறார்கள். ஆனால் ஊமை மாதிரி நடிச்சி காரியம் சாதித்துக்கிறான் என்கிறார்கள்.
32) கோபுர வாசலிலே சும்மா காற்று வாங்க உட்கார்ந்திருந்தேன். பார்த்தவர்களெல்லாம் காசு போட்டுட்டு போறாங்க!
33) வாய் திறந்து பேசினா வம்பை விலைக்கு வாங்குகிறேனு சொல்லுறாங்க. பேசாம சும்மா இருந்தா பெரிய பந்தா பண்ணிகிறான்னு சொல்லுகிறார்கள். என்ன உலகம் இது ?

சில வார்த்தைகள் சொல்லப்படும் இடத்துக்கு ஏற்ப கருத்துக்கள் மாறுபடும். ஆதலின் பேசும்போதும் எழுதும்போதும், இடம் பொருள் ஏவல் அறிந்திருத்தல் நலம் பல தரும். இக்கருத்து சும்மா சொல்லப்படவில்லை! அனுபவம் கற்றுத்தந்த பாடம்!!

("சும்மா" பற்றி ஏற்கனவே பல கட்டுரைகள் வெளிவந்துள்ளது. இனியும் சும்மா, சும்மா (அடிக்கடி) அதைப்பற்றி எழுதுவதை தவிர்க்கவும்.)

–ஆசிரியர்

நீரிழிவு நோய் பற்றிய ஒரு கண்ணோட்டம்

நீரிழிவு நோய் சித்த மருத்துவத்தில் மேகநீர், மதுமேகம், பிரமேகம் எனக் கூறப்பட்டுள்ளது.

நோய் வரும் வழி

"கோதையர் கலவி போதை, கொழுத்த மீனிறைச்சி போதை பாதுவாய் நெய்யும் பாலும் பரிவுடன் உண்பீராகில் சோத பாண்டுருவமிக்க சுக்கிலப் பிரமேகந்தான் ஓது நீரிழிவு சேரவுண்டென வறிந்து கொள்ளே" என்று அகத்தியர் பாடல் 1200ல் கண்டுள்ளது.

நீரிழிவு நோயாகிய மேகநீர் உற்பத்திக்குக் காரணம் இன்னதென கூறுமிடத்து அளவுகடந்த நெய்ப்பு, இனிப்புச் சுவையுள்ள பொருள்களை உண்ணல், பால், கள், இறைச்சி, மிகச் சுவையான மீன் இவற்றை அதிகமாக உண்ணுவதாலும், வெறுப்பைத் தரத்தக்க உணவு, வேகாத பொருள், மந்தப் பொருள், ஈரம் சேர்ந்த சோறு இவற்றை அதிகம் உண்பது, நோயுள்ள பெண்கள் அல்லது முதிர்ந்த வயதுள்ள பெண்களுடன் உறவு வைத்துக்கொள்ளுதல், மிகுபோகம், தூக்கமில்லாமை, காலவரையில்லா தூக்கம், அளவு கடந்து தாம்பத்திய சுகத்தில் ஈடுபடுதல், சிறுநீரை மிகுதிபடுத்தும் உணவு, புதிய அரிசி உணவு, வெல்லம் இவைகளை அதிகமாக உண்ணல், உடல் பருத்தல், பசித்தீயொழிதல், துன்பம், பயம் முதலியவைகள் இந்நோய் உற்பத்திக்கு காரணமாக பழமையான சித்தர்கள் நூலில் விளக்கப்பட்டுள்ளன.

உறவுகளில் விரிசல், அதிக கோபம், எண்ணம், சொல், செயல் இவற்றில் தூய்மை இன்மை, அவசரம், மனப்பரபரப்பு, மனஇறுக்கம், பொறாமை, பேராசை, அடுத்தவர்களைக் கெடுக்கும் எண்ணம், பழிவாங்கும் உணர்ச்சி, தவறான வழியில் பொருளீட்டல், பொதுசொத்து, கோயில் சொத்துகளை அபகரித்தல் போன்ற வக்ர குணங்களும் நீரிழிவு வரக் காரணங்களாகும்.

எளிமையான நடைப்பயிற்சி, தேகப்பயிற்சி இல்லாதவர்களுக்கும், ஒரே இடத்தில் மணிக்கணக்கில் அமர்ந்து பணிபுரிபவர்களுக்கும், எண்ணெய்க் குளியலை மறந்தவர்களுக்கும், நீண்டநாள் வாதம், பித்தம் இருதோஷம் அதிகரித்து உள்ளவர்களுக்கும் இந்நோய் வருகிறது.

ஆரம்பத்தில் மிகு பசி, அதிக அளவில் சிறுநீர் போதல், அதிதாகம் வறட்சி, வியர்வை பிசுபிசுத்தல், தாங்க முடியாத மூட்டு வலிகள், தோல்வியாதி, அரிப்பு படை, கட்டி மிகுதல், சிறுநீர்ப்பாதை முடிவில் புண் உண்டாகுதல் என்பனவும் உடல் திடீரென இளைத்தல் ஆகியவையும் நீரிழிவு நோயின் ஆரம்பகட்ட அறிகுறிகள்.

நீரிழிவு நோய் வந்தவர்களுக்குத் தாம்பத்யத்தில் சோர்வு ஏற்படும். சிலருக்கு ஆண்மைக் குறைவு ஏற்படும். புண் ஏற்பட்டால் ஆறாது. கண் பார்வை சிலருக்குக் குறைய வாய்ப்புள்ளது. பற்கள் வலுவிழக்கும். நீரிழிவு நோய் என்பது முழுவதும் குணப்படுத்த முடியாததாகும்.

நீரிழிவு நோய் பற்றிய ஆங்கில மருத்துவத்தின் கொள்கை:

உடலுக்குத் தேவையான இன்சுலினைக் கணையம் சுரக்கச் செய்யாத கோளாறு தான் நீரிழிவு. கணையம் இரைப்பைக்குப் பின்னால் உள்ள ஒரு சுரப்பி. போதுமான இன்சுலினை இது சுரக்காவிடில் நம் உணவில் உள்ள சர்க்கரைச் சத்து குளுக்கோசாக (எரிபொருளாக) ஆக்ஸிகரணம் செய்யப்படாமல் இரத்தத்திலிருந்து சிறுநீரகத்தால் வெளியேற்றப்படுகிறது. இதனால் பெருமயக்கம் ஏற்படுகிறது. இன்சுலின் ஊசி போட்டுக்கொள்வதால் கணையத்தில் பிறக்கும் ஹார்மோன் குறைவை இது ஈடு செய்துவிடும். வாய் மூலம் மருந்து எடுத்துக் கொள்வதால் இன்சுலின் ஜீரணமாகிவிடும். எனவே ஊசி போட்டுக் கொள்வதுதான் பாதுகாப்பு. கணையத்தைச் சுரக்கச் செய்ய வேறு ஒன்றும் வழி இல்லை. நீரிழிவு நோயை முழுவதும் குணப்படுத்த முடியாது. எனவே வாழ்நாள் முழுவதும் ஊசி போட்டுக் கொள்ள வேண்டியதுதான். நீரிழிவு நோய்க்கு மருந்துகளும் நவீன மருத்துவத்தில் கொடுக்கப்படுகின்றன.

சித்தா, ஆயுர்வேதிக், யுனானி போன்ற இந்திய மருத்துவமுறைகளில் அருகம்புல், கீழாநெல்லி, வில்வம், வெந்தயம், சிறுகுறிஞ்சா, ஆவாரம்பூ, நாவல்கொட்டை, வேப்பிலை, பாகற்காய், திரிபலா, கடலழிஞ்சில், சிறியாநங்கை போன்ற அனேக மருந்து பொருள்களை மருந்தாகத் தருகின்றனர். நீரிழிவு நோய்க்கு நீண்ட நாட்கள் மருந்து உண்ணும்போது வேதிப்பொருள்கள் கலந்த மருந்தை உண்பதைவிட சித்தா ஆயுர்வேதிக் மருந்துகளை உண்பது நல்லது. பல கம்பெனிகள் சூரணம், மாத்திரை, கேப்சுல்கள் தயாரித்து உபயோகத்தில் உள்ளது. நீரிழிவு நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் வேதிப்பொருள்கள் கலந்த சத்து மாத்திரையை உண்பதைவிட இயற்கைப் பொருள்களான அமுக்கறா, தண்ணீர்விட்டான் கிழங்கு, பூனைக்காலிவித்து, நிலப்பனங்கிழங்கு, நீர்முள்ளி, நன்னாரி, பாதாம் பருப்பு போன்ற மருந்துகள் இயற்கையோடு இணைந்த சத்துப் பொருள்கள் பக்கவிளைவற்றவை. பொதுவாக ஏற்படும் ஆண்மைக் குறைவுக்கும் நீரிழிவு நோயால் ஏற்படும் ஆண்மைக் குறைவுக்கும் சித்தா, ஆயுர்வேதிக், யுனானி போன்ற இந்திய மருத்துவத்தில் நல்ல மருந்துகள் உள்ளன.

பரமக்குடி சோலைமலை வைத்தியசாலையின் சர்க்கரைக்கொல்லிச் சூரணம் என்று ஒரு மருந்து சித்தா, ஆயுர்வேதிக் மற்றும் நாட்டுமருந்துக்கடைகளில் கிடைக்கும் தரமான மருந்துகளில் இதுவும் ஒன்று. காப்பி, டீ குடிப்பதைவிட நீரிழிவு நோயாளிகள் சம்பா கோதுமை, கேழ்வரகு மற்றும் சிறுதானியங்களைச் சேர்ந்த கஞ்சி சாப்பிடுவது மிகுந்த பலனளிக்கும். தேகம் நீட்டிக்க இத்துடன் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் மற்றும் பஞ்சகல்பம் தேய்த்துக் குளிப்பது மிகவும் நல்லது.

G. வெங்கடேசன், சித்த மருத்துவர்,
வள்ளலார் சித்த மருத்துவமனை, சிதம்பரம்.
9994644248

வாழ்க்கைத் துணை நலம்

சாந்தி சொக்கலிங்கம், கோவை.

மனிதப் பிறவி மீண்டும் வேண்டும் என்பார் அப்பரடிகள் இறைவனை வழிபடுகின்ற தம் வாழ்வில் வாழ்கின்ற என கடன் பணி செய்வதாக வாழ்கின்ற வாய்ப்பு அமைவதனால் மனிதப் பிறவியும் வேண்டுவதே இம் மானுடத்தே என்கிறார். வாராத வந்த மாமணி போன்ற இல்லறமும் துறவறமும் பேரின்ப வீட்டிற்கு நெறிப்படுத்துவதால் மனிதப் பிறவியை அரிது அரிது என்பார்கள். இல்லறம் துறவறம் என்னும் இருவழிகளில் நாம் செல்ல இனிதானது சுகமானது இல்லறமே. அதனால்தான் இல்லற வாழ்வு இயல்பு வாழ்வாக மலர்கிறது. இல்லறத்தில் தலையாய இடம் பெறுபவள் மனைவி மனைவியை மனைத்தக்க மாண்பு உடையாள்; இல்லாள், இல்லவள் என்றெல்லாம் பெயரிட்டு அழைக்கிறார் வள்ளுவர் ஓர் இடத்தில் கூட மனைவி என்றோ பெண்டாட்டி என்றோ அழைக்கவே இல்லை. இல்லாளின் சிறப்பு நோக்கியே இல்லாள் பற்றிய சிறப்புக் கூறும் பத்துப் பாடல்களுக்கும் வாழ்க்கைத் துணை நலம் என்று தலைப்பிட்டுப் பெருமை சேர்த்திருக்கின்றார்.

வாழ்க்கை, வாழ்வாங்கு வாழும் இல்லற வாழ்வுக்குத் துணையாக இருப்பதால் மனவைவி வாழ்க்கைத்துணை ஆகின்றாள் எல்லா இடத்திலும் நம்மை விட அறிவும் ஆற்றலும் அன்பும், அருளும் உடையவரே துணையாக இருக்க இயலும். வேலும் மயிலும் துணை என்பதால் இது விளங்கும். எனவே அத்தகைய சிறப்பும் சீர்மையும் மனைவிக்கு உண்டு. எல்லா நற்குணங்களும் அவளுக்கே அமைந்திருத்தல் வேண்டும். எல்லா நற்பண்புகளையும் தம் கணவரிடத்தும், தம் பிள்ளைகளிடத்தும் உண்டாக்கும் ஆக்க சக்தி அவளிடம் இருத்தலால் தான் நலம் தருகிறாள். வாழ்க்கைத் துணைநலம் என்பது மிக மிக அருமையான காரணப் பெயர்.

பெரியபுராணத்தில் வருகின்ற திலகவதியார்க்குக் கணவரைத் தேர்வு செய்யும் பெற்றோர்கள். குணம் பேசுகிறார்கள். குலமும் பேசினார்கள். இன்று பேசுகிற லௌகீகம் அன்றைய பெற்றோர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. கணவன் மனைவி பற்றிய பேசும் தொல்காப்பியம்.

அறம்புரி சுற்றமொடு ஏமஞ்சான்ற பிள்ளைகள் பெற்று அன்பு வழி சார்ந்து சிறப்புற அமைந்த இல்லற வாழ்வில் இன்பம் திளைத்தனர் என்று விளக்குகிறது. இதனைச் சுருக்கமாக 'காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பெறுவதே இன்பம்' என்பார் அவ்வை மூதாட்டி பத்துப் பொருத்தங்கள் எல்லாம் அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள் என்பதாலே நிறைவு பெறும்.

'மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தற் கீழ்
மைத்துனன் கைத்தலம்'

பற்றிய காலம் முதல் நாணத்துள் நயந்து சிவந்து வந்த பெண்ணை வாழ்க்கைத் துணைநலம் ஆகி இல்லறத்தில் பயணம் செய்யத் தொடங்குகிறது. பின்னர் செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சங்கள் தாம் கலக்கின்றன. அவனின்றி அவள் இல்லை. அவளின்றி அவனில்லை என்ற நிலைக்கு வாழ்க்கைத் துணை நலம் உயர்கிறது. உன்னதம் பெறுகிறது.

பொறுமையின் உறைவிடமான சீதாப்பிராட்டி அரசுக்கோலம் துறந்து ஆண்டிக்கோலம் தாங்கி வந்த ராகவனைப் பார்த்து 'நின் பிரிவினும் சுடுமோ? அக்காடு என்று பேசும்போது கற்பின் திண்மை மலையென நிமிர்கிறது. வாழ்க்கைத்துணைவி கற்பு போன்ற நற்பண்புகளால் தன்னை பாதுகாத்துக் கண்ணின் இமைபோல் தன் கடமையைச் சோர்விலாது தொடர்கிறாள். வரவு எட்டணா செலவு பத்தணா என்றில்லாமல் தன் கணவனின் வளத்திற்கேற்ப வாழ்க்கையைத் திட்டம் செய்து கொள்கிறாள். 'பானை பிடித்தவள் பாக்கியசாலி' என்ற பெருமைக்குரியவளாகிறாள். ஊரார் எல்லாம் காளை போன்று நிமிர்ந்த நன்னடை போடுகின்றானே? ஏன் தெரியுமா? அவன் வாழ்க்கைத்துணை நலத்தால்தான்! பலராலும் பலகாலம் மறுக்கப்பட்டு வந்த சொர்க்க உலகம் இவளுக்கு உறுதியாக வாய்க்கும் என்று பலரும் வியக்கின்றனர். மங்கலம் என்பது வாழ்க்கைத் துணை நலத்தால் தான் வந்ததுதான் என்று வள்ளுவனே பாராட்டி மகிழ்கின்றான்.

பெண் புறா ஒன்று வேடன் கைச் சிக்கியது தான் வசிக்கும் மரத்தடியில் வந்து விருந்தினராக நிற்கும் அந்த வேடன் பசி போக்க தன் பெண் புறாவை இழக்கத் தீ முட்டித் தந்ததாம் ஆண் புறா, அவனின் நீங்காத பசிக்குத் தானும் இரையாகி அத்தீயில் வெந்ததாம் ஆண் புறா, இல்லறத்தில் விருந்தினர்க்காக இப்படி ஒரு தியாக வரலாற்றை உருவாக்கியதை சிருஷ்டித்ததை ராமன் நினைத்து நெகிழ்கிறான்.

"பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்க வந்து
அமைந்த
பேதை வேடனுக்கு உதவி செய்து விறகிடை வெந்தீ
மூட்டி
பாடுறு பசியை நோக்கி தன்னையும் கொடுத்த
பைம்புள்
வீடு பெற்றுயர்ந்த வார்த்தை வேதத்தின்
விழுமியது அன்றோ"

என்றான்.

பிறர்க்காக உயிரையும் கொடுக்கும் இல்லற வாழ்வறம் நம் கண் முன்னே விரிகிறது. வாழ்க்கைத் துணை நலம் நன்மக்கள் பேற்றுடன் நிறைவு பெறுகிறது. பெண்மை தாயாகிச் செய்யும் கடமைகளை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஒரு கவிஞர்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும்
தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே"

என்ற வரிகள் வாழ்க்கைத் துணைநலத்திற்கு மகுடம் வைத்து அழகு பார்க்கின்றன.

இத்தகைய போற்றுதற்கரிய
பெண்மை துணைநலத்தைப் போற்றுவோம்!
வாழ்வினிலே வளம் பல பெறுவோம்!

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

நங்கநல்லூர்

22–5–2022 அன்று தலைவரது வரவேற்புடன் அவரது இல்லத்தில் ''மே'' மாதத்துக்கான கூட்டம் துவங்கியது.

திரு. V. இராஜவேலுவின் தந்தையார் வேணுகோபால் பிள்ளை மற்றும் திரு. S. சுரேஷ் அவர்களின் தந்தையார் C. சம்பத் (S.Rly Retd) மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

ஏப்ரல் மாதத்துக்கான கூட்ட அறிக்கை சங்க செயலாளரால் வாசிக்கப்பட்டது. ''நீர்மோர்'' வழங்கும் பணி தொடரப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருவதையும் குறிப்பாக அனுமார் கோவில் கும்பாபிஷேகத்தன்று 1500 க்கும் மேற்பட்டவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இந்த அரும்பணியினை கோவில் மண்டலாபிஷேக நிறைவு வரை தொடர்ந்திடவும், KBFன் BIZ connect நிகழ்ச்சியில் பரிசுபெற்றவர்களுக்கு பாராட்டும் வாழ்த்து தெரிவித்தும், பொருளாளர் சமர்ப்பித்த வரவு செலவு கணக்கினை குழு ஏற்றுக்கொள்ளவும், 21.6.2022 அன்று அன்னையர் மற்றும் தந்தையர் தினங்களுள் ஒருங்கிணைத்து நடத்திடவும் தீர்மானிக்கப்பட்டது.

20–3–2022 அன்று நடைபெற்ற ''மகளிர் தின'' விழாவில், மகளிர் அணியினர் தயாரித்தளித்த நாடகத்தில் நடித்த மகளிருக்கு, சங்க ஆலோசகர் ''மக்கள் சேவை நாயகன்'' திரு. T.N. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் தனது சொந்த பொறுப்பில் பரிசு வழங்கி மகிழ்ந்தார்கள். திரு. S. சம்பத்குமார் அவர்களால் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது. திரு. G. செந்தில்நாதன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

– க. சரவணன், தலைவர்.

அண்ணா நகர்

சங்க கூட்டம் 8–5–2022 அன்று கொரட்டூர் சங்க குடியிருப்பில் நடைபெற்றது. திரு. கலியபெருமாள் அவர்களின் மகள் திருமதி. ஜெயப்பிரதா அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தலைவர் திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆண்டு விழா 2–7–2022–ல் அண்ணாநகரில் உள்ள டி.கே. கல்யாண மண்டபத்தில் நடத்தவும், ஆண்டு விழாவிற்கு எவ்வளவு செலவு செய்வது என்று பற்றி தெரிவித்து ஒப்புதல் பெற்று கொண்டார்.

ஆண்டு விழாவிற்கு யார் யாரை அழைப்பது என்பது பற்றியும், யார் யாருக்கு சாதனையாளர்கள் விருது வழங்கலாம் என்பது பற்றியும், 10–வது மற்றும் 12–வது பொது தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற நம் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு சர்டிபிகேட் வழங்கி சிறப்பிப்பது பற்றியும் விழாவிற்கு வரும் அனைவரும் அறிமுகம் செய்து கொள்ள நேரம் ஒதுக்க வேண்டும் எனவும் பேசப்பட்டது. நிறைவாக திரு. சுகுமார் அவர்கள் நன்றியுரையுடன் நிறைவு பெற்றது.

என். ஆனந்தகணபதி, செயலர்.

9094682811

போரூர்

கொரானா நோய் காரணத்தால் நீண்ட நாட்களாக நிகழ்ச்சிகள் ஏதும் நடத்த முடியாத நிலையில் 24.4.22 அன்று சங்க செயற்குழு உறுப்பினர் திரு. மயூர் M. நடராஜன் அவர்கள் இல்லத்தில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அப்போது 15.5.22 அன்று ஆண்டுவிழா நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, கார்குல வள்ளல் S. வெங்கடேசன் பிள்ளை அவர்களின் ஆசியுடன் 15.5.22 ஞாயிறு அன்று மாலை 3 மணியளவில் ஸ்ரீஜெய் மாருதி மஹாலில் விளையாட்டு போட்டிகளுடன் நிகழ்ச்சி துவங்கியது. திரு. ரெத்தின சபாபதி போட்டிகளை நடத்தினார்.

சங்க மகளிர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர். உறுப்பினர்களின் அறிமுகம் செய்தல் திரு. கல்யாணசுந்தரம் கௌரவ தலைவர் அவர்கள் மூலம் நடைபெற்றது. தலைவர் இராமலிங்கம் வரவேற்புரையும் செயலாளர் S. சந்திரசேகரன் செயலறிக்கை வாசித்தார்.

சிறப்பு விருந்தினர்கள் திரு. செல்வகுமார் (மாருதி பவர்கண்ட்ரோல்), KKR சுரேஷ் மாநிலதலைவர், கைலை. சண்முகம் மாநில அமைப்பு செயலாளர், மனிதநேயம் முத்துகுமரசாமி, BTR சிவக்குமார், நற்குணம் சிறப்பு உரையாற்றினார். V.R. செந்தில்குமார் M.D. ராதா இன்ஜினியரிங் சிறப்பான

தகவல்களை வழங்கினார். A. சண்முக வேலாயுதம் E.P.L. தொழில் வளர்ச்சி பற்றியும் Dr. ஆண்டாள் R. சொக்கலிங்கம் (நிறுவன தலைவர் ஆண்டாள் வாஸ்து) அவர்கள் சிறப்பான உரையாடல் மற்றும் அனைவரின் கேள்விகளுக்கு சிறப்பான பதில் அளித்து விழா சிறப்பிக்கப்பட்டது.

விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து சிறுவர்களுக்கும் பரிசுகள் வழங்கபட்டது. திரு. ராஜரெத்தினம் அவர்கள் நன்றியுரையும் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் ஒத்துழைப்புடன் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

நன்கொடை வழங்கிய கார்குல சொந்தங்கள் அனைவருக்கும் போரூர் கார்காத்தார் சங்கத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

29.5.22 அன்று திரு. ரெங்கசாமி துணைசெயலாளர் அவர்கள் இல்லத்தில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் ஆண்டுவிழா வரவு செலவு கணக்குகள் பொருளாளர் K. பரமசிவம் மூலம் சரிபார்க்கபட்டது. செயற்குழு உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி அளித்த ரெங்கசாமி குடும்பத்தாருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

A. ராமலிங்கம், தலைவர்

94444 22813

குமராட்சி ஒன்றியம்

சங்கத்தின் பொதுகுழு கூட்டம் 8–5–22 அன்று சிதம்பரம் மேலவீதியில் உள்ள பெல்காம் அனந்தம்மாள் அறக்கட்டளை சத்திரத்தில் ஒன்றியத்தலைவர் திரு. A.G. சிவராமன் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

திரு. S. ராமச்சந்திரம் பிள்ளை வரவேற்றார். செயலாளர் R. முத்துக்குமரன் வரவு – செலவு கணக்குகளையும், நிதி வசூல் செய்த முழுவிவரத்தையும் வாசித்து ஒப்புதல் பெற்றார்.

கட்டிட நிதியை வசூல் செய்ய கட்டிட நிதி வசூல் குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டனர். திரு. செந்தில் வேலாயுதம் பிள்ளை, திரு. R. பாலசுப்பிரமணியம் பிள்ளை, திரு. ஆடியபாதம் பிள்ளை, திரு. T. வேல்முருகன் பிள்ளை, திரு. முத்துக்குமார் பிள்ளை மற்றும் திரு. S. சண்முகநாதன் பிள்ளை, திரு. T. புகழேந்தி பிள்ளை, திரு. V. தில்லைகோவிந்தராஜன் பிள்ளை மற்றும் திரு. நடராசன் பிள்ளை, திரு. கல்யாணராமன் பிள்ளை மற்றும் ராமலிங்கம் பிள்ளை ஆகியோர் முடிவு செய்யப்பட்டனர்.

மேற்படி சத்திரத்தை நமக்கு வழங்கிய உதவி பெல்காம் அனந்தம்மாள் அறக்கட்டளை சத்திரத்தின் நிர்வாகி அவர்களுக்கு நன்றியும், நன்றியுரை பொருளாளர் திருமதி. சு. திலகம் கூற நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிதே முடிந்தது.

R. முத்துக்குமரன், செயலாளர்.

9443879977

காட்டுமன்னார்கோயில் ஒன்றியம்.

சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் 01.05.2022 அன்று பொருளாளர் திரு. V. ராமகிருஷ்ணன் இல்லத்தில் நடைபெற்றது. தலைவர் திரு. R. பத்மநாபன் பிள்ளை தலைமை ஏற்றார். செயலர் திரு. V.R. ஞானம் அனைவரையும் வரவேற்றார். தலைவர் தனது உரையில் தற்போது இலங்கையில் நிலவி வரும் பொருளாதார நிலைமைபற்றி விரிவாகக் கூறினார். துணைத்தலைவர் திரு. S. ஜெயசீலன், நாம் நமது உறவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை தனது நகைச்சுவையான பேச்சின் மூலம் அனைவரையும் கவர்ந்தார். இணைச்செயலர் திரு. K. ராஜூ நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– செயலர், V.R. ஞானம்.

இறையூர்:

22.05.2022 ஞாயிறு அன்று தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு துணை தலைவர் சைவத்திரு T. திருநாவுக்கரசு அவர்கள் தலைமையிலும், மண்டல செயலாளர்கள் சைவத்திரு A.S. வேல்முருகன், R. ரவிஸ்வரன் அவர்களது முன்னிலையிலும், கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் சங்க ஆலோசகர் M. இராதாகிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். உறுப்பினர்கள் முன்னிலையில் புதியநிர்வாகிகள் A. தட்சணாமூர்த்தி– தலைவர், V. செல்வராஜ் – செயலாளர், R. மணிகண்டன் திருநாவுக்கரசு – பொருளாளர், துணைதலைவர்கள் M. இராமசாமி, V. இளங்கோவன், துணைசெயலாளர்கள் M. சுப்ரமணியன், S. வேல்முருகன் ஆகியோர்கள் புதிய நிர்வாகிகளாக பொறுப்பேற்றுக் கொண்டனர். விழாவில் சிறப்பு விருந்தினராக திட்டக்குடி தலைவர் A. வேணுகோபால் கொடிகளம் தலைவர் S. ராமலிங்கம், சங்க ஆலோசகர் R. பாலசுப்ரமணியன், S. சண்முகநாதன் மு.தலைவர், T. மணிகண்டன் மு.செயலாளர், C. முருகேசன் மு.பொருளாளர், மற்றும் G. திருஞானம் ஒருங்கிணைப்பாளர் அவர்கள் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள். செயலாளர் V. செல்வராஜ் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது. – V. செல்வராஜ், செயலாளர்

மேல பருத்திகுடி

7–5–22 அன்று சங்க கூட்டம் தலைவர் S. இராமச்சந்திரம் பிள்ளை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கௌரவத்தலைவர் திரு. J. வெங்கடேசம் பிள்ளை அவர்கள் குமராட்சி ஒன்றிய சங்க கட்டிடநிதி ரூபாய் 30000 வழங்கியதற்கு நன்றி பாராட்டி மற்றவர்களும் தங்களால் இயன்ற நிதியை விரைவில் வழங்கிட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

– S. இராமச்சந்திரன், தலைவர்.

9486455841

சீர்காழி :

சங்க செயற்குழு கூட்டம் 07–05–2022 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. K. சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. R. முரளிப்பிள்ளை அவர்கள் மங்கல சந்திப்பு நிகழ்ச்சி நடத்தலாம் என்று கூறினார்கள். மற்றும் புதிய உறுப்பினர்கள் 2 நபர் சேர்கைக்கு செயற்குழுவில் ஒப்புதல் பெறப்பட்டது. மங்கல சந்திப்பு நிகழ்ச்சி வரும் ஜூலை மாதம் (31–7–2022) அன்று நடத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. பொருளாளர் C. அகோரம் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

– குண அமுதன் பிள்ளை,

செயலாளர்.

மயிலாடுதுறை மகளிரணி

மகளிர் தினத்தை 300–க்கும் மேற்பட்ட மகளிர் இணைந்து கொண்டாடி மகிழ்ந்தனர். மகளிர் பாரம்பரியம் சார்ந்த செயல்பாடுகள், ஒற்றுமை வெளிப்பாடு திறமை முன்னெடுத்தல், பொழுதுபோக்கு இவ்வகையில் நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டது. குழந்தைகளுக்கு கார்குல வரலாறு, தமிழ் முக்கியத்துவம், திறன் வெளிப்பாடு, என நிகழ்ச்சிகள் செப்பனிடப்பட்டது. ஆண்கள் ஒத்துழைப்புடன் மகளிரின் முன்னெடுப்பில் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளும் திருமதி. டாக்டர். S. ஆஷா அவர்கள் மூலம் மருத்துவ விழிப்புணர்வும் ஆனந்தம் திரு. S. செல்வகுமார் சீரிய பேச்சில் மகளிர் மேம்பாடு பேசப்பட்டது.

மே மாதம் அன்னையர் தினம் வாட்ஸ் அப் மற்றும் இணைய வழியில் நற்செயல்பாடுகளுடன் நடந்தேறியது.

ஜூன் மாத யோகா தினம் 19, 20 அன்று காலை 11 முதல் 12 வரை மகளிர் உடல் சார்ந்த நோய்க்கான தீர்வாக யோகா மயிலாடுதுறை சங்க கட்டிடத்தில் கற்றுத்தரப்படும். 21–6–2022 யோகா தினம் அன்று காலை 9 மணி முதல் 10 வரை, ஆண், பெண், குழந்தைகளுக்கு உடல் ஆரோக்கியம் குறித்து பொதுவான யோகா கற்றுத்தரப்படும். மேலும் இணைய வழியாக 12–நாள் முழு உடல் நலம் குறித்து யோகா கற்றுத்தரப்படும். அதற்கான லிங் அது சமயம் மயிலாடுதுறை வாட்ஸ் அப் குரூப்பில் வெளியிடப்படும். இதில் அனைவரும் கலந்து கொள்ளும்படி மகளிர் அணியினர் கேட்டுக்கொள்கிறோம்.

– பில்டெக் அருள்மொழி,

தலைவி

செம்பொன்னார்கோவில்

சங்ககூட்டம் 06–05–22 அன்று சிறப்புத்தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை அவர்கள் இல்லத்தில் அவர் தலைமையில் அவரே இறைவணக்கம் பாடிடவும், சங்க செயலாளர் திரு. ச. நெடுஞ்செழியன் வரவேற்புரை ஆற்றிடவும், சென்ற மாத கூட்ட அறிக்கை மண்டல செயலாளர் திரு. கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும், வரவு செலவு அறிக்கை சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் அவர்கள் வாசிக்கவும் மேலும் சங்க 1–04–2020 முதல் 31–03–2022 வரை சங்க வரவு செலவு அறிக்கையும் தயார் செய்து அதனை பிரிண்ட் போட்டு, நகல் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கினார்கள். சிறப்பு தலைவரும், கணபதி நடனம் பிள்ளை அவர்களும் சங்க வளர்ச்சி ஒற்றுமை குறித்து பேசினார்கள். சங்க தலைவர் ஒன்றியத்திற்கு உட்பட்ட சில சங்கங்களுக்கு மாநில சங்கத்திற்கு சந்தா தானே முன்னின்று செலுத்தியது பற்றி தெரிவித்தார்.

சங்க மகளிரணி உறுப்பினர் பணி நிறைவு பெற்ற ஆசிரியை திருமதி. K. ரெத்தினாவதி அவர்கள் 39th தமிழ்நாடு மாஸ்டர்ஸ் “ATHLETIC Champion ship 2021” 5000 மீட்டர் ஓட்ட பந்தயத்தில் கலந்து கொண்டு இரண்டாவது இடம் பெற்று வெற்றி பெற்றுள்ளார். திருமதி. மு. ரெத்தினாவதி நன்றி தெரிவித்தார். 6.3.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தினை திருவிடைகழி கிராமத்தை சேர்ந்த திரு. மா. சிவக்குமார் – மலர்கொடி தம்பதியினர் ஏற்று போற்றி நடத்தினார்கள்.

- S. நெடுஞ்செழியன், செயலாளர்.

பரசலூர்

01–5–22 அன்று சித்தி விநாயகர் தெரு, வீ. கண்ணன் ராஜேஸ்வரி இல்லத்தில் திருமதி. இராஜேஸ்வரி கண்ணன் இறைவணக்கம் பாட வீ. கண்ணன் வரவேற்புரை நிகழ்த்த திரு. க. கோவிந்தராஜன் தலைமையில் கூட்டம் துவங்கியது.

சென்ற மாத அறிக்கையை செயலர் திரு. வீ. கண்ணன், நிதிய அறிக்கையை பொருளாளர் திரு. S.M. விஜய், கார் நிதிய அறிக்கையை தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை அவர்களும் வாசிக்க கூட்டத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. நிதிய அறிக்கை சம்மந்தமான பதிவேடுகள், மற்றும் அவசர கால நிதி 10,000/– (பத்தாயிரம்) உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டது.

பட்டணபிரவேச பெருவிழாவில் பரசலூர் கார்குல சொந்தங்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கினார்கள்.

பரிசு குலுக்கலில் ஆண்களுக்கான பரிசை A. ஜெயக்குமார் அவர்களுக்கும் பெண்களுக்கான பரிசை G. பானுமதி அவர்களுக்கும் முறையே கண்ணன், ராஜேஸ்வரி வழங்கினார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு திரு. G. சேகர் பிள்ளை அவர்கள் சால்வை அணிவித்தார்கள். திரு. A. ஜெயக்குமார் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

வீ. கண்ணன், செயலர்.

Cell : 9894960438

மணிக்கிராமம் :

சங்க கூட்டம் 13–5–22 அன்று ஸ்ரீ திருமேனி அழகர் கோவிலில் தலைவர் திரு. M. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. செயலர் இறைவணக்கம் பாட தலைவர் சிவபுராணம் வாசித்தார். செயலர் திரு. G. அன்பழகன் சென்ற மாத அறிக்கை வாசிக்கவும் பொருளர் திரு. T. கபிலன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது. மாரியம்மன் கோவில் தீமிதி திருவிழாவை திரு. கபிலன் முன்நின்று சிறப்பாக செய்து இருந்தார். அவருக்கு சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. ஜூன் மாதத்தில் சங்க உறுப்பினர்கள் இன்ப சுற்றுலா செல்வது என முடிவு எடுக்கப்பட்டது. வரும் கல்வியாண்டில் கல்வி உதவிதொகை பெற சங்க உறுப்பினர்கள் முன் கூட்டியே விண்ணப்பம் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இறுதியாக மணிக்கிராமம் மேலத்தெருவை சார்ந்த திரு. R. சரவணன் (G.R.T.) தந்தையார் திரு. இராசுப்பிள்ளை என்கிற இராஜேந்திரன் பிள்ளை இயற்கை எய்தியதற்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. திரு. V. ஜெயகுமார் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன், செயலர்.

மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு கார்காத்தார் சங்க மாதாந்திர கூட்டம் 05–05–2022 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் தலைவர் இறைவணக்கம் பாடவும், செயலாளர் திரு. R.K. ராஜசேகரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தியும் கூட்டம் இனிதே துவங்கியது.

மேலப்பெரும்பள்ளம் Late சீனிவாசம் பிள்ளை அவர்களின் மூத்த மகன் திரு. S. சந்தானகோபாலன் (கடலூர்) மற்றும் அவரது இளைய மகன் திரு. கலியபெருமாள் செங்குன்றம் அவர்களின் மகள் ஜெயபிரதா, கீழப்பெரும்பள்ளம் திருமதி. சிவகாமசுந்தரி அவர்களின் தாயார் திருமதி. சாராதாம்பாள் ஆகியோர் இயற்கை எய்தியதற்கு சங்கம் சார்பாக இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பொருளாளர் திரு. G. பாஸ்கரன் அவர்களால் 2021–22க்கு வரவு செலவு படிக்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டது. சங்க தலைவர் திரு. B. இலட்சுமணன் நன்றி கூற சங்க கூட்டம் இனிதே நிறைவேறியது.

- R.K. ராஜசேகரன், செயலாளர்.

Cell : 8526857111

இலையமுதுகூடம்

மாதாந்திர கூட்டம் 22–05–22 அன்று தலைவர் A. நடனம் இல்லத்தில் அவர்கள் தலைமையில் இறைவணக்கத்துடன் தொடங்கியது.

பொருளர் அவர்களால் வரவு செலவு கணக்கு படிக்கப்பட்டதையும், இந்த ஆண்டு பஞ்சாங்கம் அனைத்து உறுப்பினர்களுக்கும் தன் சொந்த செலவில் தானாக முன் வந்து வழங்க ஏற்பாடு செய்த V. அம்பலவாணன் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் பார்த்தம் பள்ளி பெருமாள் கோவில் திருக்கல்யாண வைபவத்தை இந்த ஆண்டு சிறப்பாக சங்கத்தின் மூலம் சிறப்பாக செய்ய ஏற்பாடு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

உறுப்பினர் திரு. G. சிவக்குமார் அவர்கள் சிற்றுண்டி வழங்கியமைக்கு நன்றி தெரிவித்து தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

A. நடனம்,
தலைவர்.

பூம்புகார்

சங்க கூட்டம் 01–05–22 அன்று செயலர் இறைவணக்கம் பாட, செயலரின் இல்லத்தில் நடைபெற்றது. தலைவர் திரு. ச. வரதராஜன் அவர்கள் தலைமையுரையாற்றினார். உறுப்பினர்களின் கலந்துரையாடல்களுக்குப் பிறகு திரு. சி. சந்தானம், ஆசிரியர் (ஓய்வு) அவர்கள் உரையாற்றினார். திரு. G.சௌந்தரராஜன் அவர்கள் தன்னுடையமகன் CREW அறக்கட்டளை அளித்த கல்வி உதவித்தொகை மூலம் கல்வியை முடித்துள்ளார் எனவும் அவர் வேலைக்குச் சென்று பெறும் முதல் சம்பளம் முழுவதையும் CREW அறக்கட்டளைக்கு நன்கொடையாகத் தரப்போவதாக உறுதியளித்துள்ளார்.

பொருளாளர் திரு. தி. ஜெயபாலன் அவர்கள் தமது 75–வது பிறந்தநாளை முன்னிட்டு உறுப்பினர்களுக்கு அன்பளிப்பாக கண்ணதாசனின் "அர்த்தமுள்ள இந்து மதம் – பாகம் –3" புத்தகத்தை வழங்கிச் சிற்றுண்டி மற்றும் தேநீர் விருந்தளித்தார். உறுப்பினர்கள் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்தும் நன்றியும் தெரிவித்தனர். திரு. பொன். அகோரம் அவர்களின் நன்றியுரைக்குப் பின் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- M. பரணீதரன், செயலர். 9443574217

விசலூர் :

மாதாந்திரக்கூட்டம் 15–5–2022 அன்று இறைவணக்கத்துடன் தலைவர் பொன். சொக்கலிங்கம் பிள்ளை தலைமையில் செயலர் ராமசெல்வம் பிள்ளை முன்னிலையிலும் நடைப்பெற்றது.

புதிய செயற்குழு உறுப்பினர்கள் சோமு. மணிகண்டன், ச. சண்முகம் பிள்ளை, S. சுந்தரமூர்த்தி பிள்ளை, N. இராதாகிருஷ்ணன் பிள்ளை, கோ. ராஜன் IOB, சோமு. வெங்கடேஷ் பிள்ளை, சங்க ஆலோசகர்களாக திரு. R. கல்யாணசுந்தரம் பிள்ளை, டாக்டர் R. கனகசபை பிள்ளை, R. அருணாசலம் பிள்ளை, V. தியாகராஜன் பிள்ளை & சன் சாய் பிரதர்ஷ், L. மணிப்பிள்ளை, P. மோகன் பிள்ளை, K. சிவப்பிரகாசம் பிள்ளை, K. முத்துகுமார் பிள்ளை, K. பரமசிவம் பிள்ளை, N. ரவி பிள்ளை, B. அறிவொளி பிள்ளை, M. கணேசன் பிள்ளை, L. மணிகண்டன் பிள்ளை, ராஜேந்திரன் S/o. சுப்ரமணிய பிள்ளை பெங்களூர் (விசலூர்), சோமு. கிஷோர்குமார் பிள்ளை, M. சரவணன் S/o. மருதவாணன் பிள்ளை,

இளைஞர் அணி துணைத்தலைவர் : V. குருமூர்த்தி பிள்ளை, இணைசெயலர். C. சரவணன் பிள்ளை, உறுப்பினர் K. அருண், R. அரவிந்த்.

சங்க மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர்களாகவும், செயற்குழு உறுப்பினராகவும், L. லலிதா, சோமு. மங்கையர்கரசி, R. கலைவாணி, பா. ரஞ்சிதா, K. ராணி, N. பேபி, R. மீனாட்சி இவர்களை விசலூர் சங்கம் அறிமுகம் செய்து இந்த மாத பௌர்ணமி உபயதாரர் : S. கந்தசாமி பிள்ளை அவர்களுக்கு நன்றிகள் நவில கூட்டம் இனிதே சுபம் ஆனது.

L. பாபு (எ) ராமசெல்வம், செயலாளர்

9750806991

கும்பகோணம்

செயற்குழு கூட்டம் 19–05–2022 அன்று பாணாதுறை வடக்கு வீதியில் தலைவர் TM. வைத்தியநாதன் அவர்கள் இல்லத்தில் அவர்களது தலைமையில் A.S. பழனி மற்றும் இராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. திரு. ஆனந்தன் இறைவணக்கம் கூற வரவேற்புரை A.S. பழனி ஆற்ற மங்கல சந்திப்பு மற்றும் விளக்க அறிக்கையை செயலாளர் விஜயகுமார் அவர்களுக்கும் மங்கல சந்திப்பு வரவு செலவு கணக்கு விபரத்தை பொருளாளர் V. சிவகுமார் அவர்கள் சமர்ப்பித்தார்கள்.

தருமபுரம் பட்டின பிரவேச நிகழ்ச்சியில் திரளாக கலந்துகொள்வது எனவும், சங்கத்தின் 26–வது ஆண்டு துவக்க விழாவை ஜூலை மாதத்தில் நடத்துவது எனவும், தலைவர் TM. வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் குழு அமைத்து செயல்படுத்துவது எனவும், புரவலர் நிதிக்குழு பொறுப்பு தலைவராக M. சாமிநாதன் (எ) இளங்கோ அவர்கள் செயல்படவும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் புரவலர் நிதிக்குழு தலைவராகவும் சிறந்த ஆலோசகராகவும் சங்க வளர்ச்சியில் பங்காற்றி 16–05–2022 அன்று மறைந்த திரு. T.S. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

S. விஜயகுமார், செயலாளர்.

வருந்துகிறோம்

தஞ்சாவூர் திருமதி. S. உஷாராணி அவர்களின் தகப்பனார் திரு. R. பத்மநாபன் அவர்கள் மறைவிற்கும், திரு. K.P. பன்னீர்செல்வம் அவர்களின் தாயார் திருமதி. வேதநாயகி அவர்கள் மறைவிற்கும் தஞ்சை நகர கார்காத்தார் சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறது.

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
01–02–1938

மறைவு :
14–06–2021

பின்னலூர் **S. சிவசுப்பிரமணியன்** (CSR ஓய்வு)
கூட்டுறவு சார்பதிவாளர் (ஓய்வு)
46/16, தேரடி பிள்ளையார் கோயில் தெரு, சிதம்பரம்.

நீங்காத உங்கள் நினைவுகள் நெஞ்சில் அலைமோதும்
நித்தமும் நினைத்து நினைத்து நெஞ்சம் தடுமாறும்
நீங்கள் சொல்லி கொடுத்த செயல்கள்யாவும் வந்து வந்து போகும்
உங்கள் அன்பு மட்டும் எங்களோடு உயிர் இருக்கும் வரை வாழும்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்

மகன் – **சிவ. கணேசன்**

மருமகள் – **G. ஜோதிலட்சுமி**

பேரன்கள் : **G. விஜய்,** B.E.,

G. கிஷோர்

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :
29.4.1960

மறைவு :
01.06.2021

திருவாரூர் மாவட்டம், குடவாசல் தாலுக்கா, இலையூர்,
தெய்வத்திரு, வெங்கடாசலம் பிள்ளை – சரோஜா அம்மாள் இவர்களின் மருமகளும்
எங்கள் உயிரினும் மேலான குடும்ப குல விளக்கு

திருமதி. **ப. பிரேமா,** M.A., B.Ed.,

தலைமை ஆசிரியர் (ஓய்வு)
அரசு மேல்நிலைப்பள்ளி, சுவாமிமலை
அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

என்றும் நினைவில் வாழும்

கணவர் : **வெ. வரது** (எ) **வரதராஜன்**
நெல்லுக்கடைத்தெரு, கும்பகோணம்,
மகன் : **வ. உப்பிலி** (எ) **ஸ்ரீகாந்த்,** M.B.A., பெங்களூர்.
மற்றும்
குடும்பத்தினர்

ஆக்கூர் இரா. கல்யாணசுந்தரம் பிள்ளை

(கார்காத்தார் சங்கம் தஞ்சாவூர் மாவட்ட தலைவர், சுழற்சங்க உறுப்பினர்)

100 வது பிறந்த ஆண்டு

தோற்றம் : 3–6–1922 மறைவு: 6–3–1991

உழைப்பால் உயர்ந்து, எங்களை உயர்த்தி, எல்லோருக்கும் நல்லது செய்து, உதாரணமாய் வாழ்ந்த உங்கள் ஆசியுடன் தாங்கள் வகுத்த பாதையில் பயனிக்கும்

மனைவி **க.சுலோச்சனா,**

மகன்கள், மறுமகள்கள், மகள்கள், மறுமகன்கள்,

மற்றும்

பேரன்கள், பேத்திகள்

Akkur R. KALYANASUNDARAM PILLAI

Birth Centenary

Birth : 3-6-1922

Demise: 6-3-1991

Founder: **Akkur Financial Chit Corporation Pvt Ltd,**
Akkur Panel Pins and Wire Nails Factory

Management and Staff:



முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

10.08.1943 - 05.06.2021

வையூர் ஆ.சண்முகம் M.A., M.Ed.,

மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணி ஓய்வு, நடராஜா நகர், சிதம்பரம்

வையூர் ஆறுமுகம் பிள்ளை அரும்பு ஆச்சி பெற்றெடுத்த சத்தியசீலரே
செஞ்சோற்று கடன் தீர்க்க தாய்மாமனுக்கு தோள் கொடுத்த நல்மருகனே
செய்நன்றி மறவா செந்தமிழ் சீலரே
மாணாக்கர்களுக்கு கல்விச் செல்வ ஆசானே
ஆங்கில இலக்கணத்தின் மறுகரையே
நட்பின் நடமாடும் களஞ்சியமே
அன்பின் அரவணைப்பே
தருமையின் சீடரே
எளிமையின் திரு உருவாய் என்றென்றும் வாழ்ந்திட்டு
எங்களை விட்டு அகன்றுவிட்ட ஜோதியே
பிரிந்திட்ட நீவிர் எங்களோடு என்றென்றும் எங்கள் நினைவுகளில்...

துணைவியார்
திருமதி ச.தனலட்சுமி

மருமகன்கள்
ஆர்.ராஜா
கருவாழக்கரை
ஜெ.பார்த்தசாரதி
வையூர்

மகள்கள்
ச.ஹேமலதா
ச.சுமித்ரா

பெயரன்கள்
ஆர்.எச்.ராஜ்குமார் B.E.
பி.விக்னேஷ் B.E.
ந.கணேஷ் B.E.

பெயர்த்திகள்
Dr.R.H.ராஜலட்சுமி B.D.S.
P.லட்சுமி பிரியா
அலமேலு மங்கை ராஜ்குமார் B.E.

கொள்ளு பெயரன் **R.A.ஆதிரன்**

இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

தாயின் மடியில்
16–06–1948

இறைவன் திருவடியில்
08.05.2020

தெய்வத்திரு. திரு. **R. சங்கரன் பிள்ளை** (குருஸ்தானம்)

உடல் வருத்தம் பாராத
உண்மை உழைப்பின் உதாரணம்.
உயரத்தில் நீங்கள் இருந்தாலும்,
உயிர் உள்ளவரை உங்கள் நினைவில் நாங்கள்!

Dear Dad

Following your footsteps

மனைவி: S. சுசீலா

மகன்கள் – மருமகள்கள் :

S. கோபி கண்ணன் – A. சாந்தி
9444086273, 9884486274

S. கணேஷ்குமார் – G. கீதா
9945499689 – 9945359689

மகள் – மருமகன் :

S. சுஜா – S. நாராயண்குமார்
9886187661 – 9686193594

பேரன்கள் :

G. சர்வேஷ் சச்சின்
G. கோகுல் ஸ்ரீநிவாஸ்
G. ஜிதேஷ் ஸ்ரீநாத்

பேத்திகள்

N. நியந்த்ரி
N. தாருண்யா

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14.03.1949

மறைவு
19.05.2021

காளிங்கராய. **M. மைதிலி அம்மாள்**

மயிலாடுதுறை Tk., நமசிவாயபுரம்

நல்லூச்சேரியில் பிறந்து நமசிவாயபுரத்தின் பெருந்தகை
முருகேசம்பிள்ளையின் துணைவியாய் நற்குணவதியாய்
நல்லறம் காத்து அனைத்திலும் திறமையுடனும், பொறுமையுடனும்
உறவுகளை அரவணைத்து ஆலமரமாய் நிழல்தந்த அன்னையே !
உங்கள் விழுதுகளை விட்டு மின்னலாய் மறைந்த தேன் ?
விண்ணுலகம் சென்றதேன் ? மீளாத் துயரம் தந்த தேன் ?
ஆறுதல் தருவார்யார் ? ஆலோசனை சொல்வார்யார் ?
தங்களின் நினைவுகளை எங்களின் துணையாய் ஏற்று
தங்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்

மகன்கள் & மருமகள்கள்
M. மனோகர், ஒசூர்
M. லெட்சுமி
M. கண்ணன், செயலாளர்,
நகர கார்காத்தார் சங்கம், குத்தாலம்
K. ஜானகி
M. விவேக், நமசிவாயபுரம்
V. கவிதா
மகள் : **M. சுதா**

பேரன் & பேத்திகள்
M. நிரஞ்சன் குமார்
M. சௌம்யா, M.Sc.,
K. காவியா, M.Sc.,
V. ஹர்ஷா, B.Com.,
M. சுதில்யா, B.Sc., Agri.,
M. சந்தியா, B.C.A.,

(செல் : 9894558060)

கண்ணீர் அஞ்சலி

மலர்ந்தது :
02–10–1955

உதிர்ந்தது :
29–04–2022

திருமதி. **ஞா. மங்களம்**

அன்பின் திருஉருவே! எங்கள் குலவிளக்கே! இன்முகத்தோடும் பாசத்தோடும் பழகிய நீ எங்களின் நீங்காத நினைவாக என்றென்றும் எங்கள் நெஞ்சில் வாழ்கிறாய்.

P. ஞானப்பிரகாசம் – கணவர்

விழுப்புரம்

G. வள்ளி

B. அழகேசன்

A. அகிலன்

நெய்வேலி

G. லாவண்யா

C. செல்வமுத்துகுமார்

S. ராகுல்

S. சஞ்ஜனா

சென்னை

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th June 2022

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple

We Sincerely Thank Maestro Ilayaraja and his Family for Staying with us and shower their Blessings

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**